இது
# நம்தேசம்

பார்வை 01 | வியூகம் 17 | ஆனி - 2014 | பக்கங்கள் : 24 | விலை ரூபா : 30.00




# மாபெரும் கலாச்சாரப் படுகொலை

# எங்கே ஜனநாயகம்?




## உள்ளே


தென்னிலங்கை அரசியலில் தமிழ்த் தரப்பு பங்கெடுக்க வேண்டுமா? 05

கூட்டமைப்பிலிருந்து அனந்தி நீக்கப்படுவாரா? 08

எங்களை ஏசி வளக்கவேண்டாம் 15

ஒரே ஒரு லுங்கி 22


தேசத்தின் உண்மைக் குரல்

# மே 18 நினைவேந்தல் நிகழ்வுகளை தவிர்க்க முற்பட்ட கூட்டமைப்பினர்



மே 18 நினைவேந்தல் நிகழ்வுகளை தமிழ் மக்கள் அனுஷ்டிக்க முற்பட்டனர். அதற்கான பல்வேறு ஒழுங்குகளில் பல தனிநபர்களும் அமைப்புக்களும் ஈடுபட்டன. தமிழ் தேசிய மக்கள் முன்னணி மே 18னை "இன அழிப்பு தினம்" என பிரகடனப்படுத்தியது. அந் நிகழ்வை உணர்வு பூர்வமாக தனது அலுவலகத்தில் அனுஷ்டிப்பதற்கும் ஏற்பாடுகளைச் செய்திருந்தது. ஆனாலும் அன்றைய தினம் அலுவலகம் செல்லும் பாதைகள் மூடப்பட்டு நினைவேந்தலுக்கு தடை விதிக்கப்பட்டது. இதனால் பின்னர் பிரத்தியேகமான இடமொன்றில் கட்சியின் பொதுச்செயலாளர் செ.கஜேந்திரன் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வு இடம் பெற்றது. கட்சியின் முக்கியஸ்தர்கள் பங்கு கொண்டனர்.

பல நிறுவனங்கள் ஆர்ப்பரிப்பு எதுவும் இல்லாமல் நினைவேந்தல் நிகழ்வை நடாத்தினர். தனிநபர்கள் பலரும் இவ்வாறே உணர்வு பூர்வமாக அனுஷ்டித்தனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமை தமது இணக்க அரசியலுக்கு நினைவேந்தல் நிகழ்வு தடையாக இருக்கும் என்பதால் அதனைத் தவிர்க்கவே விரும்பியது. குறிப்பாக சம்பந்தன், சுமந்திரன் விக்கினேஸ்வரன் ஆகியோர் நினைவேந்தல் நிகழ்வு நடப்பதை அறவே விரும்பவில்லை. இத்தினத்தில் மூவரும் கொழும்பிலேயே நின்றனர். மாவை இதனைத் தவிர்ப்பதற்காக அம்பாறை சென்றிருந்தார்.

ஆனால் கூட்டமைப்பிலுள்ள சிவாஜிலிங்கம், அனந்தி ஆகியோர் நினைவேந்தல் நிகழ்வை நடாத்தவே விரும்பினர். சிவாஜிலிங்கம் 16,17,18 ஆகிய மூன்று தினங்களையும் நினைவேந்தல் தினங்களாக அறிவித்தார். ஊடகங்களிலும் அவை செய்தியாக வெளிவந்தன. மாகாணசபை உறுப்பினர்கள் அனைவருக்கும் அறிவித்ததாக அவர் குறிப்பிட்டார்.

அவரது அறிவிப்பின் படி 16ம் திகதி கைதடியிலுள்ள மாகாணசபை அலுவலகத்திற்கு முன்னால் நினைவேந்தல் நிகழ்வின் முதலாவது தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இது பற்றி மாகாண சபைத் தலைவர் சிவஞானத்திற்கும் தெரிவிக்கப்பட்டது.

சிவஞானம் உடனடியாகவே மாகாண சபைச் செயலாளருடன் தொடர்புகொண்டு பொலிசாருக்கு அறிவிக்கும் படியும் மாகாணசபை அலுவலகத்தையும், வாசல் கதவுகளையும் அடைக்கும்படியும் கட்டளையிட்டதாக மாகாணசபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். அன்றைய நாள் வேலைநாளாக இருந்த போதும் அலுவலகம் மூடப்பட்டது. வாசற்கதவுகளும் அடைக்கப்பட்டன.

நினைவேந்தல் நிகழ்விற்கு கூட்டமைப்பு சார்பில் 30 உறுப்பினர்கள் மாகாணசபையிலும், நூற்றுக்கணக்கான உறுப்பினர்கள் உள்ளூராட்சி சபைகளிலும், 13 உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலும் இருந்தபோதும் நால்வர் மட்டுமே நிகழ்வில் பங்குபற்றினர். சிவாஜிலிங்கம், அனந்தி, மேரி கமலா, சஜீவன் என்போரே அவ் நால்வருமாவர். நிகழ்வு நடைபெற ஆயத்தமான நேரம் மாகாண சபை உறுப்பினர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது அனைவரும் தொலைபேசித் தொடர்பை நிறுத்தியிருந்தனர். நீண்ட நேரத்தின் பின்னர் தொலைபேசி அழைப்பிற்கு வந்த சிவஞானம் நினைவேந்தல் நிகழ்வு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் வீதியில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கெல்லாம் தான் வரப்போவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

நினைவேந்தல் நிகழ்வில் ஏற்றப்பட்ட தீபத்தை பொலீசார் காலால் உதைத்து அழித்தனர். நிகழ்வில் பங்கு பற்றியவர்களையும் அச்சுறுத்தினர். இச் செய்தி புகைப்படங்களுடன் ஊடகங்களில் வெளிவந்தினால் சிவஞானம் உட்பட பலர் ஆடிப்போயினர்.

18ம் திகதி சிவஞானம் உட்பட பலர் ஆலயங்களில் தீபமேற்றி புகைப்படங்களை ஊடகங்களில் வரச்செய்தனர். விமர்சனங்கள் அதிகமாக வந்தமையினால் பங்குபற்றாமல் இருக்க அவர்களால் முடியவில்லை. அனந்தியும், சிவாஜிலிங்கமும் பேரெடுத்த நிலையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இன வழிப்பு தினமாக பிரகடனப்படுத்தியமையும் இவர்களுக்கு நிர்ப்பந்தங்களைக் கொடுத்தன. கீரிமலை வீதியில் அனந்தி தன்னந்தனியாக போராட்டம் நடாத்திய காட்சி ஊடகங்களில் மிகுந்த முக்கியத்துடன் வெளிவந்ததும் சிவஞானம் போன்றோரை கலவரப்படுத்தியது.

22ம் திகதி மாகாணசபை அமர்வு இடம்பெற்ற போது நினைவேந்தல் நிகழ்வை நடாத்த உறுப்பினர்கள் சிலர் முன்வந்தனர். சிவஞானம் இதனை ஏற்கவில்லை. அவர் தன்னுடைய அறைக்குள்ளேயே பதுங்கிக்கொண்டார். அமைச்சர்கள் வெளிநடப்புச் செய்தனர். ஐங்கரநேசன் கறுப்புப்பட்டி அணிவதற்கே மறுத்திருந்தார். விக்கினேஸ்வரனும் கலந்துகொள்வதை தவிர்த்துக் கொண்டார். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்த போதும் முஸ்லீம் காங்கிரஸ் உறுப்பினர் கலந்து கொண்டார்.

அமைச்சர்கள் பின்கதவு மூலம் ஆளுனரிடமும் மத்திய அமைச்சர்களிடமும் உதவி பெற்று சுகபோக வாழ்க்கையை அனுபவித்து வருகின்றனர். அதற்கு சங்கடம் ஏற்படக் கூடாது என்பதற்காகவே நிகழ்வில் பங்குபற்றுவதை தவிர்த்தனர்.

தங்களுடைய உரிமைகளையும் அதிகாரங்களையும் போராடிப்பெற துணிவில்லாதவர்கள் டக்ளஸ் போல நான்காக மடிந்து உதவிகளைப் பெறுகின்றனர். நினைவேந்தல் நிகழ்வு போன்றவை வரும்போது தான் இவர்களது உண்மை முகம் வெளிச்சம் காட்டுகின்றது.

இது வரை சம்பந்தன், சுமந்திரன் என்போர் அஞ்சலி செலுத்தியதாக எந்தத் தகவலும் இல்லை. விக்கினேஸ்வரன் கோவில்களில் மட்டும் அஞ்சலி செலுத்துங்கள் அரசியல் நிறுவனங்களில் இவற்றை மேற்கொள்ளவேண்டாம் என போதனை செய்கின்றார்.

மகிந்தருக்கு இணக்கமுகத்தையும் தமிழ் மக்களுக்கு போராட்டமுகத்தையும் காட்டினால் குறிப்பான சந்தர்ப்பங்களில் அம்பலமாவது தவிர்க்க முடியாதது.

## எனக்கு எதுவும் தெரியாது யாழ் அரச அதிபர் கைவிரிப்பு



யாழ்.மாவட்டத்தில் அரசாங்கவேலை வாய்ப்புக்கள் மற்றும் இராணுவ ஆட்சேர்ப்புக்கள் தொடர்பில் எதுவும் அறிந்திருக்கவில்லை என்று யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியா, ஆப்கானிஸ்தான், பிலிப்பைன்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கைத் தூதுவர்கள் 12 பேர் கொண்ட குழு அண்மையில் யாழ்ப்பாணத்தில் வருகைதந்திருந்தனர். அவர்களுடனான சந்திப்பு தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## நினைவேந்தல் நிகழ்வு அனுஷ்டிப்பு





இராணுவத்தினரின் பலத்த அச்சுறுத்தல்கள் மத்தியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவு தினத்தை உணர்வு பூர்வமாக அனுஷ்டித்தது.

தமிழர் வரலாற்றில் மறக்க முடியாத இன அழிப்பு வலியாகக் காணப்படும் முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வை அஞ்சலி செலுத்த தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி திட்மிட்டிருந்தது. ஆனால் அதனை தடுக்கும் நோக்கில் கட்சி அலுவலகம் முழு இராணுவ ஆக்கிரமிப்பிற்கு உட்பட்டது.

இதனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் பிரத்தியேக இடமொன்றில் கட்சியின் பொதுச்செயலாளர் செ.கஜேந்திரன் தலைமையில் அஞ்சலி செலுத்தினர்.

## சுவீஸ்லாந்தில் மே 18 நினைவேந்தல் நிகழ்வு

முள்ளிவாய்க்கால் படுகொலையின் நினைவேந்தல் நிகழ்வு மே -18 அன்று சுவிஸில் எழுச்சியுடன் நடைபெற்றுள்ளது.

சுவிஸ் பேர்ண் நாடாளுமன்றம் அருகில் சுவிஸ் தமிழ் ஒருங்கிணைப்பு குழுவினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ் நிகழ்வில் சுவிஸ்வாழ் தமிழ் மக்கள் மிகவும் உணர்வு பூர்வமாகக் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் சிறப்பு வெளியீடாக தமிழ் தேச அடையாளங்களும், இன அழிப்பு அடை யாளங்களும் தமிழ் இன அழிப்பை வெளிப்படுத்தும் தபால்தலைகள் வெளியிட்டு வைக்கப்பட்டன. அதேவேளை அரசியல் தொடர்பான எழுச்சியுரைகளும் இன அழிப்பு தொடர்பான துண்டுப்பிரசுரங்களும் சுவிஸ்மொழியில் வெளியிடப்பட்டன.

# யாழ் பல்கலைக்கழக சமூகத்தின் துணிச்சலான முயற்சி

மே 18 நிகழ்வேந்தல் நிகழ்வினை யாழ் பல்கலைக்கழக சமூகம் துணிச்சலூடன் அனுஷ்டித்தது. இந்த நிகழ்வு நடைபெறக்கூடாது என்பதற்காக படையினர் பல அச்சுறுத்தல்களை மேற்கொண்டனர். 16ம் திகதி தொடக்கம் 20ம் திகதி வரை பல்கலைக்கழகம் மூடப்பட்டது. விடுதிகளிலிருந்தும் மாணவர்கள் வெளியேறவேண்டும் என கட்டாயப்படுத்தப்பட்டனர். ஆனால் சிங்கள மாணவர்கள் விடுதிகளில் தங்கியிருக்க வசதிகள் செய்துகொடுக்கப்பட்டன.



அவர்கள் வெசாக் கூடுகளை பல்கலைக்கழகமெங்கும் தாம் நினைத்தது போல கட்டித்தொங்கவிட்டனர். மருத்துவ பீடம் முழுவதும் வெசாக் கூடுகளினால் நிரம்பியிருந்தது. சகோதர கலாசாரத்தை அடையாளப்படுத்துவதற்கு பதிலாக அவ் வெசாக் கூடுகள் ஒரு திணிப்பாகவே காட்சியளித்தன.

யாழ் பல்கலைக்கழகம் ஒரு தனித் தமிழ் பல்கலைக்கழகமாக இருக்கக் கூடாது என்பதற்காகவே சிங்கள மாணவர்கள் அதிகளவில் சேர்க்கப்பட்டனர். சில பீடங்களில் தமிழ் மாணவர்களை விட அதிகமாக சிங்கள மாணவர்கள் உள்ளனர். நாட்டில் சமூகங்கள் பிளவுண்டிருப்பது இங்கும் தெரிந்தது. சிங்கள மாணவர்கள் தமிழ் மாணவர்களுடன் சேர்ந்து செயற்படுவதில்லை. அவர்கள் தனி ஒரு உலகமாகவே இயங்குகின்றனர். படையினருக்கும் அவர்களுக்குமான தொடர்பே அதிகமாக உள்ளது.

தமிழ்த் தேசிய போராட்டத்தில் யாழ் பல்கலைக்கழகத்தின் பங்கு அளப்பரியது. போராட்டத்திற்கு புலனமைப்பின் பலம் கொடுக்கும் பணிக்கு அப்பால் மக்கள் பிரச்சனைகளை முன்வைத்து போராட்டங்கள் பல்கலைக்கழகத்திலேயே முதலில் இடம்பெற்றன. பொதுவாகவே தேசிய இனப் போராட்டங்களில் பல்கலைக்கழகங்கள் முக்கிய இடம் வகிப்பது வழக்கம். யாழ் பல்கலைக்கழகமும் அப்பணியினைச் செய்வதற்கு தயங்கியதில்லை.

யாழ் பல்கலைக்கழகம் தொடர்ந்தும் தமிழ் மக்களின் தேசியப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கக் கூடாது என்பதும் சிங்கள மாணவர்கள் அதிகளவில் சேர்க்கப்பட்டமைக்கு முக்கிய காரணம்.

கடந்த காலங்களில் மாணவர்களே போராட்டங்களுக்கு தலைமை தாங்கினர். இன்று ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்களோடு இணைந்து போராட்டங்களுக்கு தலைமையேற்கும் அளவுக்கு மாற்றம் ஏற்பட்டுள்ளது. மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் இணைந்து பல்கலைக்கழக சமூகமாக போராட்டங்களை முன்னெடுக்கின்றனர். பல்கலைக்கழக வரலாற்றினைப் பொறுத்தவரை இது ஒரு மகிழ்ச்சிப்படக்கூடிய சமூகப் பொறுப்புடன் கூடிய பரிணாம வளர்ச்சியே.


இந்தத் தடவை பல்கலைக்கழக சமூகமாக நினைவேந்தல் நிகழ்ச்சியை நடாத்துவதற்கே முயற்சிகள் எடுக்கப்பட்டன. இதனை அறிந்த படையினர் பல்கலைக் கழகத்தை மூடியதுமல்லாமல் இராணுவத் தளபதி ஒருவர் நேரடியாகவே மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் அழைத்து அச்சுறுத்தியிருந்தார். மாணவர் தலைவர்கள் சிலரின் பெயர்களையும் விரிவுரையாளர்கள் சிலரின் பெயர்களையும் குறிப்பிட்டு அனாமதேய துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது. படையினருக்கு அப்பால் பல்கலைக்கழக நிர்வாகத்திலிருந்தும் போராட்ட ஏற்பாட்டாளர்களுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. பல்கலைக்கழக ஆசிரியர் தலைவர் இராசகுமாரன் 4ம் மாடி வரை விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். தாயில்லா சிறு பிள்ளையை தனித்து விட்டுவிட்டு 4ம் மாடிக்கு வரும்படி அவர் கட்டாயப்படுத்தப்பட்டார்.

ஆனாலும் பல்கலைக்கழக சமூகம் சோர்ந்து விடவில்லை. பல்கலைக்கழகம் மீளத் திறக்கப்பட்ட போது பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் மத்தியிலும் உணர்வு பூர்வமாக மாணவர்களும் விரிவுரையாளர்களும் போரில் இறந்தவர்களை நினைவு கூர்ந்தனர்.

பல்கலைக்கழகம் ஒரு சமூகத்தின் மிகப்பெரும் மூளை. சமூகத்தை சகல வழிகளிலும் வழி நடாத்தும் பொறுப்பு அதற்கு உண்டு. யாழ்பல்கலைக்கழகம் அதனை உணர்ந்து செயற்படுவதையிட்டு தமிழ்ச் சமூகம் பெருமை கொள்கின்றது. யாழ்பல்கலைக்கழக சமூகத்தவர்கள் தாம் தனித்து விடப்பட்டவர்கள் என ஒரு போதும் கருதக்கூடாது. தமிழ்ச் சமூகம் எப்பொழுதும் அவர்களுக்கு பின்னால் நிற்கும்.

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் ஜெகதீஸ்வரன் குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவினரால் கைது

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்ட கவனயீர்ப்பு போராட்டமொன்று 26.05.2014 ஆம் திகதி கச்சேரி முன்பாக இடம்பெற இருப்பதாக அறிவித்ததைத் தொடர்ந்து 23.05.2014 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளி நொச்சி மாவட்ட அமைப்பாளர் ஜெகதீஸ்வரன் வீட்டுக்குச் சென்ற பயங்கரவாதப் புலனாய்வுப்பிரிவினர் என தம்மை அடையாளம் காட்டி இரவு 10.00 மணியளவில் அவர் கைதுசெய்யப்பட்டு வவுனியாவுக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கிருந்து விசாரணைக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.



இவரின் கைது தொடர்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனும் கண்டித்துள்ளனர்.

## புலிட்சர் விருது

அமெரிக்காவிலுள்ள கொலம்பிய பல்கலைக்கழகத்தினால் வருடாவருடம் பத்திரிகைச் சாதனைக்கான புலிட்சர் விருது வழங்கப்படுகின்றது. இந்த வருடம் அவ் விருது கார்டியன் பத்திரிகைக்கும் வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகைக்கும் வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு நிறுவனம் சட்ட விரோத முறையில் மேற்கொண்ட உளவு நடவடிக்கைகளை அம்பலப்படுத்தியமைக்காகவே இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்க மத்திய புலனாய்வு நிறுவனத்தில் (சி.ஐ.ஏ) தொழில்நுட்ப உதவியாளராக பணியாற்றிய எட்வேர்ட் சினோடன், சி.ஐ.ஏ உட்பட அமெரிக்காவின் புலனாய்வு அமைப்புக்கள் மேற்கொண்ட சட்ட விரோத இரகசிய நடவடிக்கைகளை கடந்த வருடம் அம்பலப்படுத்தியிருந்தார். இவருடைய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கார்டியனும், வாஷிங்டன் போஸ்டும் தொடர்ச்சியாக பல செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருந்தன.

இச்செயல் அரசாங்க அதிகாரத்திற்கும், தனிநபர் உரிமைகளுக்கும் இடையிலுள்ள முரண்பாட்டை துணிச்சலுடன் வெளியிட்ட நடவடிக்கையாகும்.

இது நம்தேசம் இவ்விரு பத்திரிகைகளுக்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.

## பாகிஸ்தான் சட்டவல்லுனருடன் அரசாங்கம் ஆராய்வு

மனித உரிமைகள் பேரவையின் விசாரணைக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பது தொடர்பாக அரசாங்கம் பாகிஸ்தான் சட்டவல்லுனர் சுவுத்திரி அயிட்ஸாஸ் அஹ்சன் என்பவருடன் ஆராய்ந்துள்ளது. அவர் இரு யோசனைகளை முன்வைத்துள்ளார்.

அதில் ஒன்று மனித உரிமைகள் பேரவையில் சிறப்புக் கூட்டம் ஒன்றை நடாத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என்பதாகும். மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த பதினொரு நாடுகளுடன் மேலும் நான்கு நாடுகளின் ஆதரவினைப் பெற்று சிறப்புக் கூட்டத்திற்கான கோரிக்கையை விடலாம். இக் கூட்டத்தில் இலங்கை தனது நிலைப்பாட்டை வலுவாக எடுத்துக் கூறுவதன் மூலம் மேலும் பல நாடுகளின் ஆதரவினைப் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் கூறியுள்ளார்.


இரண்டாவது உள்ளக விசாரணையின் போது சர்வதேச பார்வையாளர்களையும் பிரசன்னமாய் இருக்கச் செய்வது அதிக பயனுடையதாக இருக்கும் என்பதாகும். அது விசாரணைக்கு நம்பகத் தன்மையைக் கொடுக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை அதிகாரிகள் அவரது ஆலோசனைகளில் பெரிய அக்கறைப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் மறுபக்கத்தில் அமெரிக்காவை வளைத்து போடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக அமெரிக்க காங்கிரசின் ஆதரவினைப் பெறுவதிலேயே முனைப்புக் காட்டப்படுகின்றது. இது தொடர்பாக அரசின் முக்கிய பிரமுகர் ஒருவர் ஓய்வு பெற்ற அமெரிக்க ஜெனரலான வெஸ்லி கிளார்க் என்பவருடன் பேச்சு வார்த்தை நடாத்தியுள்ளார். அந்த ஜெனரலும் விரைவில் இலங்கை வர இருக்கின்றார்.

இவை தவிர அமெரிக்க ஆயுதப்படைகள் குழுவின் உறுப்பினர் செனட்டர் ஜேம்ஸ் எம். இன் ஹோமே அமெரிக்க ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் இலங்கை தொடர்பான அமெரிக்க கொள்கை மீளாய்வு செய்யப்படல் வேண்டும் என்றும் அது தொடர்பாக செனற் சபையில் தான் கொண்டுவரும் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் என்றும் கேட்டிருக்கின்றார்.

அதேவேளை சாட்சியமளிப்பவர்களை பாதுகாக்கும் வகையில் சட்ட முன்வரைபொன்று நீதி அமைச்சரினால் அமைச்சரவையின் ஆலோசனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## ஒருத்தருக்கும் சொல்லாதைங்கோ...



- முத்தர் அம்மான்

முள்ளிவாய்க்காலையும் தியாகங்களையும் வைத்து புள்ளடி கேட்ட கூட்டமைப்புக்காரர், கடைசியில ஒரு சுட்டி விளக்கை கூட ஏற்றாமல் காய் வெட்ட பட்டபாடு இருக்குதே, கண்ணால இரத்தம் வரும் பாருங்கோ. அரசாங்க கட்டிடத்தில சுடரேற்ற ஏலாதெண்டு சீவிகேயர் புது விளக்கம் கொடுக்கிறார். விக்கியரும் மற்றைய சிலரும் காருக்குள்ள பதுங்கியிருந்தவையாம் பாருங்கோ. சிவாஜிலிங்கம்,அனந்தி கோஷ்டி விளக்கேத்தின பிறகு மீடியா காரர் நாறடிக்கப் போறாங்கள் எண்டு மற்றவையும் இணைந்து கொண்டவை பாருங்கோ.

இந்த மார்ட்டின் ரோட்டில ஏத்திறன் பார் விளக்கு எண்டு அறிக்கை விட்டுட்டு மாவையர் அம்பாறைக்கு தப்பிச்சுப்போட்டார். காலைவேளை கந்தோர் பிக்கப் வாகனத்தில வந்து சீவிக்கேயர் எட்டிப்பார்த்திட்டுப்போட்டாராம். எங்கட உரிமையள நிலைநாட்ட மக்கள் பிரதிநிதிகள் யாரேனும் குரல் கொடுத்தவையோ என்றால் எல்லாரும் பேப்பருக்கு அறிக்கை விட்டதோட சரி. அதிலயும் மாகாணசபை அமைச்சர் ஒருத்தர் இந்தியாவிற்கு தப்பி ஓடிப்போய் வந்திருக்கிறதா கேள்வி.

எந்த கேடு கெட்டவன் வந்தாலும் மாலை மரியாதை செய்து விருந்தளிக்கிறது கூத்தமைப்பு பாரம்பரியம் பாருங்கோ. 18ம் திகதி முள்ளி வாய்க்கால் நினைவேந்தலிற்கு விளக்கேற்ற வந்தது ஒரு சிலர் தான் பாருங்கோ. ஆனால் அடுத்த நாள் மாகாணசபையால இந்தியத்தூதுவர் வி.மகாலிங்கத்திற்கு நடத்தின விருந்துபசாரத்தில் முழுப்படையும் திரண்டு வந்திருந்ததாம். தமிழ் மக்களை அழிக்க துணைநின்ற இந்திய எஜமான்களுக்கு கௌரவிக்க முண்டியடிக்கினம். எங்களுக்காக தியாகம் செய்த உறவுகளுக்கு விளக்கு ஏத்த...

எடுத்ததுக்கெல்லாம் பல்கலைக்கழக பொடியளில பிழை பிடிக்கிறது அந்தக்காலம். முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அவங்கள் நடத்தின பக்குவத்தை பார்த்தால் நாங்கள் வெறுமனே வயதால மட்டும் பெரியவங்கள் என்றது மட்டும் உண்மை. கைலாசபதி அரங்கில அஞ்சலி நேரம் அமைதி, அவங்களின்ரை உணர்வுகளை தெளிவுபடுத்திக்காட்டிப் போட்டுது. தடைகள் எல்லாம் கால்தூசு, **“தெருப்போடை விளையாடாதே”** என்று அவங்கள் அந்த நடவடிக்கைக்கு வைச்ச பெயராம். சரியாகத் தான் வைச்சிருக்காங்கள்.

புதிய தளபதியானவர் பல்கலைக்கழக மாணவர்கள் அஞ்சலி செலுத்தினது சனத்திற்கு தானென்று சப்பைக்கட்டு கட்டியிருக்கிறார். அந்த அஞ்சலியை தடுக்கத்தான் தலையால அவர் நடந்தும் பார்த்தவர். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தலைவரையும் சங்கக்காரரையும் அழைத்து மிரட்டிப் பார்த்தவர். ஏலாமல் நாலாம் மாடிக்கு அனுப்பியும் பார்த்தவர். ஆனால் எல்லாமும் கவிழ்ந்து போய் மக்களிற்கு அஞ்சலி என்று ஒத்துக்கொண்டார் பாருங்கோ.

## அமுத வாக்கு




சீனாவுடன் இணைந்து இந்தியாவை சீண்டிப்பார்க்க இலங்கை அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டால் பயங்கரமான விளைவுகளை சந்திக்கநேரிடும்.

**லக்ஸ்மன் கிரியல்ல**
**ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்**



எமது உறவுகளுக்காக ஏற்றப்பட்ட ஈகைச்சுடரை சப்பாத்துக் கால்களினால் மிதித்து அழிக்கப்படுகின்ற கொடிய அடக்கு முறைகளின் கீழ் நாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இச் சம்பவம் எங்களுக்கு இந்த நாடு சொந்தமில்லை என்பதையும், நாங்கள் இரண்டாம் தரப்பிரஜைகள் என்பதையும் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது

**சிவாஜிலிங்கம்**
**வடமாகாணசபை உறுப்பினர்**



இந்திய மீனவர்கள் குறைந்தது 90 நாட்களாவது இலங்கையின் வடபகுதி கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு அனுமதி கோருகின்றனர். ரோலர், தங்கூசி, சுருக்குவலைகளைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதற்கும் அனுமதி கோருகின்றனர். இவற்றை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது.

**நாகநாதி- பொன்னம்பலம்**
**தலைவர்-யாழ்மாவட்ட கிராமிய மீனவர் அமைப்புகள் சம்மேளனம்**



கலைசார்ந்த வாழ்வியலை இழந்ததால்தான் அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் வன்முறைக் கலாச்சாரம் மேலோங்கியுள்ளது. இதனைத் தடுப்பதற்கு எமது மக்கள் அனைவரும் கலைசார்ந்த வாழ்வியலுடன் ஒன்றிக்கவேண்டும்.

**பேராசிரியர் - சிவலிங்கராஜா**



வடபகுதி மக்கள் தங்கள் சொந்தத்தில் மாகாண ஆட்சியொன்றை தெரிவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டது என்று அரசாங்கம் உலகிற்கு காட்டுவதற்கான ஒரு 'காட்சிப்பொருளாக' மாத்திரமே வடமாகாண சபை இயங்குகின்றது.

**குசல் பெரேரா**
**அரசியல் சமூக ஆய்வாளர்**



தொடர்ச்சியாகவும், திட்டமிடப்பட்ட முறையிலும், ஒரு மக்கள் கூட்டத்தை அல்லது இனக்குழுமத்தை நேரடியாகவும், மறை முகமாகவும், சமூக நிலை சார்ந்தும், உயிர்முறை சார்ந்தும் அழித்தொழிக்க முனைவது அல்லது அழித்தொழிப்பது இனப்படு கொலை ஆகும்.

**பேராசிரியர் - உ.சேரன்**

ஒரு இனம் தனது கலாச்சார அடையாளத்தினை தனது அரசியல் மூலம் வெளிப்படுத்த முனையும். இலங்கையில் பெரும்பான்மை இனம் தனக்கு வேண்டியவாறு செயற்படும் வழிமுறைகளை தன்னகத்தே கொண்டுள்ளது. சோல்பரியாப்பிலுள்ள 29வது பிரிவின் நம்பகத்தன்மை இந்தியவம்சாவழி மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதுடன் கேள்விக் குறியானது.

**பேராசிரியர் ஜெயம்பதி விக்கிரமரட்னா**

# தென்னிலங்கை அரசியலில் தமிழ்த் தரப்பு பங்கெடுக்க வேண்டுமா?

பூரணன்

வருகின்ற ஜனாதிபதி. தேர்தலில் ஒரு வேட்பாளராக வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரனை தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் முன்மொழிந்திருக்கிறார். மனோகணேசன் அதனை வழிமொழிந்திருக்கிறார். ஒரு ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இந்த முன்மொழிவும் வழிமொழிவும் இடம் பெற்றிருக்கின்றது. முன்மொழிந்த சுமந்திரன் இது தொடர்பாக தென்னிலங்கைக் கட்சிகள் உடனடியாக பதில் அளிக்கவேண்டும் என்றும் கேட்டிருந்தார். பதில் அளித்த அனைத்து கட்சிகளும் இனவாத கண்ணோட்டத்திலேயே பதில் அளித்திருக்கின்றன. பெரும்பான்மை இனத்தை சேராத ஒருவர் வேட்பாளராக நிற்க முடியாது என்பதே அனைத்து கட்சிகளினதும் கருத்தாக இருந்தது. கருத்துக்களை வழங்கிய மொழியில் சில வேறுபாடுகள் இருந்தாலும் கருத்தின் உள்ளார்ந்த அர்த்தம் சிங்கள பௌத்தரல்லாத ஒருவர் வேட்பாளராக நிற்க முடியாதென்பதே.





**தமிழ் அரசியலில் இருந்து தமிழ்த் தேசியவாதத்தை நீக்குதல் மற்றும், தமிழ்த் தேசிய த்தை சிங்கள தேசியத்தினுள் கரைத்து அழித்தல் ஆகிய செயல்திட்டங்களை சுமந்திரன் தற்போது தான் நகர்த்துகின்றார் என கூறமுடியாது.**

தென்னிலங்கை அரசியற் கட்சிகளின் கருத்துக்கள் எதிர்பார்த்தவைதான். இது பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. ஆனால் சுமந்திரன் என்ன நோக்கத்தின் அடிப்படையில் இந்த முன்மொழிவை முன்வைத்தார் என்பது தான் இங்கு கவனிப்புக்குரியது. தன்னை ஓர் வலுவான இராஜதந்திரிபோல காண்பிக்க முயன்றுவந்த சுமந்திரன் இன்று ஒரு கோமாளியாக நடந்து கொள்கின்றார் எனச் சிலர் கூறுகின்றனர்.

ஆனால் சுமந்திரன் அனைத்தையும் தெரிந்துகொண்டு திட்டமிட்ட நோக்கத்தின் அடிப்படையில் தான் செயற்பட்டிருக்கின்றார். அதாவது தமிழ்த் தேசியவாதத்தை கரைத்து சிறீலங்கா தேசியத்தை தமிழர்கள் அறியாமலே அவர்களை ஏற்றுக்கொள்ளவைத்தல். அது மட்டுமன்றி ராஜபக்சேயை மீண்டும் வெல்லவைக்க முயல்கின்றாரா என்ற சந்தேகமும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

கடந்த 2010ம் ஆண்டு இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவை ஆதரிப்பது என்ற கூட்டமைப்பின் முடிவானது சிங்கள மக்களை பொன்சேகாவுக்கு எதிரான மன நிலைக்குள் தள்ளியது. அதன் விளைவு சரத்பொன்சேகா பல லட்சம் வாக்குகளால் தோற்கும் நிலையை உருவாக்கியது. அந்த நிகழ்விலிருந்து பாடங்களை கற்றிருந்தும் மீண்டும் எதிர்க்கட்சிக்கு ஒரு தமிழனை பொதுவேட்பாளராக்க வேண்டும் என்று கோருவது மீண்டும் ராஜபக்சேயை பெரும்பான்மை வாக்குகளால் வெல்லவைப்பதற்கே வழிவகுக்கும்.

தமிழ் அரசியலில் இருந்து தமிழ்த் தேசியவாதத்தை நீக்குதல் மற்றும், தமிழ்த் தேசியத்தை சிங்கள தேசியத்தினுள் கரைத்து அழித்தல் ஆகிய செயல்திட்டங்களை சுமந்திரன் தற்போது தான் நகர்த்துகின்றார் என கூறமுடியாது. அவர் நீண்ட காலமாகவே அவற்றை நகர்த்தி வருகின்றார். மகிந்தருடன் இணைந்து கிரிக்கெட் விளையாடியமை, தமிழ் நாட்டிற்குச் சென்று ஈழத்தமிழர்களுக்காக குரல்கொடுக்கும் தமிழ்நாட்டு அரசியல் சக்திகளை வாயைப் பொத்திக் கொண்டு இருங்கள் எனக் கூறியமை, ஜெனிவாவில் அனந்தியை பேசவிடாது தடுத்தமை, 13ம் திருத்தத்தை தீர்வாக ஏற்றுக் கொண்டுள்ளமை, ஜெனீவா சென்று அங்குள்ள சிறீலங்கா தூதரகத்தில் உறவு கொண்டாடியது போன்ற செயற்பாடுகளையே அவர் மேற்கொண்டு வருகின்றார். இவை எல்லாம் தமிழ்த் தேசியத்தை கரைப்பதற்கும், மகிந்தரைக் காப்பாற்றுவதற்கான செயல்திட்டங்களே!

வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் எப்படியாவது மகிந்தரைச் தோற்கச்செய்வதில் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் மிகவும் தீவிரமாக உள்ளது. அதற்காக பல்வேறு காய் நகர்த்தல்கள் மேற்கொண்டு வருகின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்குவங்கியினை உடைப்பதற்காக சந்திரிகாவை முன்னிலைக்கு கொண்டுவர முயற்சிக்கின்றது. சந்திரிகாவின் தாராண்மைவாத முகம் தமிழ், முஸ்லிம், மலையக மக்களை இணைக்க உதவும் என்றும் பண்டாரநாயக்கா குடும்ப வாரிசு என்பது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை உடைக்க உதவும் என்றும் அது கருதுகின்றது.

**இலங்கைத் தீவில் இலங்கைத் தேசியம் என ஒன்று இல்லை. இருப்பதெல்லாம் சிங்களத் தேசியம், தமிழ்த் தேசியம், மலையகத் தேசியம், முஸ்லிம் தேசியம் என்பவையே. இவ் நான்கு வகை தேசியங்களையும் சமத்துவமாக அங்கீகரிப்பதன் மூலம் மட்டுமே எதிர்காலத்தில் இலங்கைத் தேசியம் என்ற ஒன்றை புதிதாக கட்டியெழுப்புவது பற்றிச் சிந்திக்க முடியும்.**

இந்நிலையில் விக்னேஸ்வரனை பொது வேட்பாளராக்க வேண்டும் என்ற சுமந் திரனின் முன்னெடுப்புக்கள் தமிழ், முஸ்லிம், மலையக மக்களிடமிருந்து எதிர்க்கட்சி ஜனாதிபதி வேட்பாளரை அந்நியப்படுத்தும். மகிந்தர் இலகுவாகவே தேர்தலில் வென்றுவிடுவார். இங்கு எதிர்க்கட்சி வேட்பாளர் தேர்தலில் வெல்லாவிட்டாலும் சற்று வலிமையான எதிர்க்கட்சி இருப்பதைக்கூட சுமந்திரனின் முன்னெடுப்புக்கள் இல்லாமல் செய்துவிடும்.

தற்போது சுமந்திரனின் முன்னெடுப்புகளுக்கு பல விமர்சனங்கள் வந்துள்ளதால் தனது பிரசாரத்தை தலைகீழாக மாற்றிப் போட்டிருக்கின்றார். தென் இலங்கையானது தமிழர்களை ஏற்கத் தயாரில்லை என்பதை சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டுவதற்காகவே அக் கருத்தினை முன்வைத்ததாக கதைவிடுகின்றார். சுமந்திரனின் கடந்த 5 ஆண்டு கால தொடர் நடவடிக்கைகளை அவதானித்தவர்களுக்கு இது சுத்த பம்மாத்து என விளங்கும். சுமந்திரன் அரசியலுக்கு வந்த நாட்களில் ஒரு நாளாவது தமிழ்த் தேசிய சிந்தனைகளுக்கு விசுவாசமாக இருந்ததில்லை.

இங்கு தமிழ்த் தரப்பு முக்கியமாக ஆய்வுக்கெடுக்க வேண்டிய விடயம். தென்னிலங்கை அரசியல் தொடர்பாக என்ன நிலை எடுப்பது என்பதே! இலங்கைத் தீவில் இலங்கைத் தேசியம் என ஒன்று இல்லை. இருப்பதெல்லாம் சிங்களத் தேசியம், தமிழ்த் தேசியம், மலையகத் தேசியம், முஸ்லிம் தேசியம் என்பவையே. இவ் நான்கு வகை தேசியங்களையும் சமத்துவமாக அங்கீகரிப்பதன் மூலம் மட்டுமே எதிர்காலத்தில் இலங்கைத் தேசியம் என்ற ஒன்றை புதிதாக கட்டியெழுப்புவது பற்றிச் சிந்திக்க முடியும். ஆனால் அதற்கு சிங்களத்தரப்பு தயாராக இல்லை. ஏனைய அனைத்து தேசியங்களும் தமது அடையாளங்களைத் துறந்து சிங்களத் தேசியத்திற்குள் கரைந்து விட வேண்டும் என்றே அது எதிர்பார்க்கின்றது. தமிழ் மக்கள் அதற்கு தயாராக இல்லாதபடியால் தான் தமிழ் மக்களின் நீண்டகால இரத்தம் சிந்திய போராட்டம் இடம்பெற்றது.

இன்றுள்ள அரச கட்டமைப்பு சிங்களத் தேசத்திற்கு மட்டும் உரிய கட்டமைப்பே ஏனைய தேசிய இனங்களுக்கு இங்கு எந்த இடமும் இல்லை. தமிழ் மக்கள் இந்த அரச கட்டமைப்பிற்கு வெளியே தள்ளப்பட்டிருக்கின்றனர். அவர்கள் தங்களை சமத்துவமாக இணைத்தால்தான் அரச கட்டமைப்பை ஏற்கத்தயார் எனக் கூறி வருகின்றனர். நீண்ட பெரும் அழிவுகளின் பின்னரும் கூட தமிழ் மக்கள் இந்த நிலைப்பாட்டிலிருந்து விடுபடத்தயாராக இல்லை. ஒவ்வொரு தேர்தலிலும் தெளிவாக அதனை வெளிப்படுத்தியுள்ளனர்.

எனவே சிங்கள அரச அதிகார கட்டமைப்பை யார் கைப்பற்றுவது என தென்னிலங்கையில் இடம் பெறும் அரசியல் போட்டியில் தமிழ் மக்கள் பங்கு பெறுவதனால் எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை. மறுபக்கத்தில் தமிழ் மக்கள் பங்குபற்றினால் இந்த அரச கட்டமைப்பை தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்கின்றனர் என்ற ஆபத்தான தோற்றத்தை அது கொடுப்பதுடன், அது தமிழ்த் தேசிய அரசியலை வெகுவாகப் பலவீனப்படுத்தும்.

இராஜதந்திர அவசியம் ஒன்று ஏற்பட்டால் மட்டும், தமிழ்த் தேசிய அரசியலை பாதிக்காத வகையில் எவ்வாறு பங்கு பற்றுவது பற்றி யோசிக்கலாம். அது கூட மறைமுகமான பங்கு பற்றலாக இருக்க வேண்டுமே தவிர முன் கூட்டியே பகிரங்கப்படுத்திய பங்குபற்றலாக இருக்கக் கூடாது.

இலங்கைத்தீவு சமூகமளவில் பிளவுபட்டு இருக்கின்றது என்பதே நடைமுறை உண்மை. 80களில் ஆயுதப் போராட்டத்தை ஊக்குவித்து தமிழ்த் தேசியவாதத்தை தீவிரப்படுத்துவதில் முனைப்புக் காட்டிய சர்வதேச சக்திகள் தற்போது இலங்கையிலுள்ள சமூகங்கள் தேசியவாத அடிப்படையில் பிளவுபட்டு இருத்தல் தமது பூகோள அரசியலுக்கு இடைஞ்சலாக இருக்கும் என்று கருதுகின்றன. அதனால் இலங்கையிலுள்ள தேசியங்களிடையே உள்ள பிளவினை சரிக்கட்டுவதிலேயே குறியாகவுள்ளனர். இந்தச் சரிக்கட்டுதல் என்பது சரணாகதியாக இருக்கக்கூடாது என்பது தான் தமிழ் மக்களுக்கு உள்ள கவலை.

சமூகங்கள் பகிரங்கமாக பிளவு பட்டிருக்கும் போது ஆதரவு என்பது எதிர்மறை விளைவுகளையே தரும். தமிழ் மக்கள் ஆதரிக்கும் வேட்பாளரை

(19ஆம் பக்கம் பார்க்க)

# இயல்பு நிலையை கொண்டு வராமல்

## பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதில் எந்தவித பயனுமில்லை

ஊர்சுற்றி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஏப்பிரல் மாதம் 4ம் திகதி புதன் கிழமை தென்னாபிரிக்கா சென்றிருந்தனர். ஏற்கனவே ஜெனிவா தீர்மானத்திற்கு முன்னர் அரச தரப்பினர் சென்று வந்த நிலையில் பின்னர் கூட்டமைப்பினர் சென்றனர். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், சுரேஸ் பிறேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரே சென்றதாக செய்திகள் வந்துள்ளன. கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் எவரும் சேர்க்கப்படவில்லை. கிழக்கு பற்றி கதைப்பதையே இந்தியாவும், மேற்குலகும் விரும்பாததினால் சம்பந்தன் தலைமையும் அதனைத் தவிர்த்திருக்கக்கூடும். சம்பந்தனை கிழக்கின் பிரதிநிதியாக எவரும் பார்ப்பதில்லை.

விரைவில் மனித உரிமைகள் பேரவையின் சுயாதீனமான விசாரணை ஆரம்பிக்கப்படலாம் என்ற நிலையில் தென்னாபிரிக்கா செல்வது விசாரணையை பலவீனப்படுத்தாதா? என்கின்ற சந்தேகங்களையும் எழுப்பியுள்ளது. கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் இந்தச் சந்தேகத்தை ஏற்கனவே கிழப்பியிருக்கின்றார்.


> இந்தியா மனித உரிமைகள் பேரவையின். விசாரணையை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளது. அதன் அழுத்தத்தினாலேயே இந்த தென்னாபிரிக்க பயணம் இடம்பெறுவதாகவும் செய்திகள் வருகின்றன.

இதனை மெய்ப்பிக்கும் வகையில் தற்போது தென்னாபிரிக்கா அனுசரணையாளராக செயற்பட இணக்கம் தெரிவித்ததாக செய்திகள் வந்துள்ளன. தென்னாபிரிக்காவின் நல்லிணக்கத்தூதுவர் சிறில்ராம் போஷா தலைமையில் ஒரு குழுவினர் இலங்கை வந்து பலதரப்பினருடனும் பேசப்போவதாகவும் தகவல்கள் வருகின்றன. முதலில் தடைப்பட்ட பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது பற்றி பேசப்படும் என்றும் கூறப்படுகின்றது. இலங்கை அரசின் வேண்டுகோளின் பெயரிலேயே அனுசரணையாளர் பொறுப்பினை தென்னாபிரிக்கா ஏற்றுள்ளது.

இந்தியா மனித உரிமைகள் பேரவையின் விசாரணையை எப்படியாவது நிறுத்தவேண்டும் என்பதில் உறுதியாக உள்ளது. அதன் அழுத்தத்தினாலேயே இந்த தென்னாபிரிக்க பயணம் இடம் பெறுவதாகவும் செய்திகள் வருகின்றன.

நல்லிணக்கத்திற்கான செயற்பாடுகள் நடைபெறுகின்றன. எனவே விசாரணையை தற்போது நடாத்தி நிலைமையை குழப்பவேண்டாம் என்ற செய்தி இதனூடாக மேற்குலகத்திற்கு சொல்லப்படுகின்றது.

நல்லிணக்க செயற்பாட்டிற்கு அழைக்கும் போது செல்லத்தானே வேண்டும் என்ற வாதம் இங்கு முன்வைக்கப்படலாம். அதில் நியாயம் இல்லாமல் இல்லை. ஆனால் அதற்கான முன்



தயாரிப்புக்களுடன் கூட்டமைப்பினர் செல்கின்றனரா? என்பது தான் இங்குள்ள கேள்வி. அரசின் பொறிக்குள் விழுந்து விடாமல் நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுப்பது என்பதில் மிகுந்த அவதானம் தேவை.

தென்னாபிரிக்கா அரசு நல்லிணக்க தூதுவராக ஒருவரை நியமித்துள்ளது. அவருடனாவது சந்திப்பு தொடர்பான நிகழ்ச்சிநிரல் பற்றிப்பேசியிருக்க வேண்டும். அதற்கு முன்னர் கூட்டமைப்பினர் தங்களுக்குள் இது பற்றிப் பேசியிருக்கவேண்டும். இது விடயத்தில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களின் ஆலோசனைகளைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அவை எதுவும் நடந்ததாக தெரியவில்லை.


அரசு மீண்டும் வடகிழக்கில் கெடுபிடிகளை தொடங்கிவிட்டுள்ளது. சுற்றி வளைப்புக்கள், கைதுகள் என்பன தொடர்கின்றன. புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் மீண்டும் மிக மோசமான வகையில் இம்சிக்கப்படுகின்றனர். மீன்பிடித்தலில் பாஸ்முறை மீண்டும் அமுல்படுத்தப்படுகின்றது. பேச்சு வார்த்தைக்கு நிபந்தனையாக இவற்றை நிறுத்துங்கள் என்பதை முன் வைத்திருக்கலாம். புலம்பெயர் நாடுகளில் உள்ள 16 தமிழ் அமைப்புக்களையும் பல தனிநபர்களையும் இலங்கை அரசு தடைசெய்துள்ளது. புலம் பெயர் தமிழ் மக்கள் தாயக மக்களின் ஒரு பிரிவினர். இந்தத் தடை இருக்கும் வரை பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள முடியாது என கூறியிருக்கலாம். இவை பற்றி ஏனையவர்கள் வாய் திறந்தாலும் சம்பந்தன் வாயே திறக்கவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர்களாக உள்ள கட்சிகளின் தலைவர்கள் தான் பேச்சுவார்த்தைக்கு செல்லவேண்டுமென்றில்லை. இங்கு நிபுணத்துவம் வாய்ந்த லொபி தான் முக்கியம். ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களையும் சிவில் சமூகத்தில் உள்ள நிபுணர்களையும் புலம்பெயர் சமூகத்திலுள்ள நிபுணர்களையும் இணைத்து ஒரு லொபியை உருவாக்கியிருக்கலாம். அந்த லொபியினூடாக சர்வதேச சந்திப்புக்களை மேற்கொள்ளும் போது சந்திப்புக்கள் ஆரோக்கியமாக இருப்பதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

சர்வதேச அரசியலை நிபுணத்துவம் இல்லாதவர்களினால் முன்னெடுப்பது கடினம். அரசுகள் இதற்காகவே ஆட்களைப் பயிற்றுவிப்பது உண்டு. தமிழ்த் தேசிய அரசியலும் சர்வதேச மட்டத்திற்கு வந்துள்ளதால் ஆட்களைத் தெரிவு செய்து பயிற்றுவிப்பது அவசியம்.

**இங்கு எழும் கேள்வி தென்னாபிரிக்கா அனுபவம் தமிழ் மக்களுக்கு பயன்படக் கூடியதா?** தென்னாபிரிக்க அனுபவம் எந்த வகையிலும் தமிழ் மக்களுக்கு பயன்படக்கூடியதாக இருக்காது. இதற்கு பல காரணங்கள் உண்டு. அங்கு உருவாக்கப்பட்ட உண்மை அறியும் குழு போன்ற ஒன்றை உருவாக்கி சமரசமாகப் போதல் பற்றி பேசப்படுகின்றது.

பயன்படமுடியாது என்பதற்கான காரணங்களுள் முதலாவது அங்கு அடக்கப்பட்ட தரப்பு வெற்றி பெற்றது. அது வெற்றி நிலையில் இருந்து கொண்டு தோல்வியடைந்தவர்களை அணைத்துச் செல்ல முற்பட்டது. ஆனால் இங்கு அடக்கப்பட்ட தமிழ்த்தரப்பு தோல்வியடைந்துள்ளது. தோல்வியடைந்த தரப்பு சமரசத்திற்கு செல்வது சரணாகதியே தவிர வேறல்ல.



இரண்டாவது தென்னாபிரிக்காவில் அடக்கப்பட்ட தரப்பு ஆட்சி அதிகாரத்தை தன் கையிலெடுத்த பின் தான் சமரசத்திற்கு சென்றது. இங்கு அதற்கான வாய்ப்புக்கள் எதுவும் அண்மைக்காலத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழ் மக்களுக்கு சாதகமான ஒரு அரசியல் தீர்வு கிடைத்த பின் சமரசத்திற்கு சென்றால் அது பாதுகாப்பாக இருந்திருக்கும்.

மூன்றாவது தென்னாபிரிக்காவில் அடக்கப்பட்ட கறுப்பினத்தவர்கள் பெரும்பான்மையாக இருந்தனர். ஆட்சி அதிகாரம் கைக்கு வந்தநிலையில் எண்ணிக்கையில் பெரும்பான்மையாக இருப்பது அதிகாரநிலையில் அவர்களை எப்போதும் மேல் நிலையில் வைத்திருக்கும். இலங்கையில் தமிழ் மக்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையாக இருப்பது ஆட்சி அதிகாரமும் இல்லாத நிலையில் அவர்களை கீழ் நிலையிலேயே வைத்திருக்கும்.

நான்காவது போரில் இராணுவம் மீறல் எதிலும் ஈடுபடவில்லை என்று வாதிட்டு வரும் ஸ்ரீலங்கா அரசாங்கம் தம்முடைய படையினரை குற்றம் செய்தவர்கள் என் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது. பொறுப்புக்கூறல் கடமையை நிறைவேற்றாமல் சமரசத்திற்கு செல்வதையே அது வற்புறுத்தும் தமிழ் மக்களுக்கு இது ஏற்றதல்ல.

ஐந்தாவது போர் இன்னமும் முடிவடையவில்லை. அது வேறோர் வகையில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. கட்டமைப்பு சார் இனப்படுகொலை ஒன்றை அரசாங்கம் முன்னெடுக்கின்றது. நிலப்பறிப்பு, பொருளாதாரப் பறிப்பு. கலாச்சார பறிப்பு என்பன தொடர்கின்றன.

தற்போது சுற்றிவளைப்பு, கைதுகள். என்பன முடுக்கி விடப்படுகின்றன. இந்த கட்டமைப்பு சார் இனப்படுகொலையை நிறுத்துவதற்காக உத்தரவாதம் இல்லாமல் சமரசத்திற்கு செல்வது இனப்படுகொலையை தொடர்ந்தும் ஊக்குவிப்பதாகவே அமையும்.

சிங்கள மக்களுக்கு போரில்லா நிலை மட்டும் சமாதானமாக இருக்கலாம். ஆனால் தமிழ் மக்களுக்கு போரில்லா நிலை, இயல்பு நிலைக்கு திரும்புதல், அரசியல் தீர்வு என்கின்ற மூன்றும் உறுதிப்படுத்தும் போதே சமாதானம் ஏற்படும்.

போரே இன்னோர் வகையில் தொடரும் போது இயல்புநிலைக்கு திரும்புதல், அரசியல் தீர்வு என்பவற்றை நினைத்தே பார்க்க முடியாத நிலைதான் தற்போது காணப்படுகின்றது.

இந்த நிலையில் தென்னாபிரிக்க அனுபவம் எந்த வகையிலும் தமிழ் மக்களுக்கு உதவப்போவதில்லை.

ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கு தற்போது இக்கட்டான நிலை. எப்படியாவது மனித உரிமைகள் பேரவையின் விசாரணையை தடைசெய்யவேண்டும். இந்த விடயத்தில் இந்தியா தான் அரசாங்கத்திற்கு உதவக்கூடிய நிலையில் உள்ளது. இந்தியா உதவவேண்டுமானால் சிறியளவிலாவது இந்தியாவைத் திருப்திப்படுத்த வேண்டும்.

இதற்கு இரண்டு வழிகள் தான் உண்டு. ஒன்று வடமாகாணசபையை சுயாதீனமாக செயற்படவிடவேண்டும். இரண்டாவது அரசியல் தீர்விற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன என வெளிப்படையாகக் காட்டவேண்டும். வடமாகாண சபையை செயற்பட விடுவதில் அரசாங்கம் பெரிய அக்கறையினைக்



காட்டவில்லை. இதனால் இரண்டாவது விடயமான அரசியல் தீர்வு முயற்சிகள் நடைபெறுவதாக ஒரு தோற்றத்தைக் காட்ட முனைகின்றது. இந்தியாவும் அதற்கு உதவுகின்றது.

(19ஆம் பக்கம் பார்க்க)

இது நம்தேசம்

தொடர்புகளுக்கான முகவரி : இல.43, 3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ.பே இல : 021 222 3739 மின்னஞ்சல் : ithunamthesam@gmail.com
www.ithunamthesam.com

## துப்பாக்கி முனையில் நினைவேந்தல்

**முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான தமது உறவுகளை தமிழ் மக்கள் நினைவுகூருவதை அரசானது இரும்புக்கரம் கொண்டு அடக்க முனைந்திருக்கின்றது.**

**கடந்த மே 18ம் திகதி யாழ்குடாநாட்டில் நிலவிய சூழல் போர்க்காலக் கெடுபிடிகளை மீண்டும் நினைவுபடுத்தியது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, உதயன் பத்திரிகை ஆகியவற்றின் அலுவலகங்கள் இராணுவத்தினரால் முற்றுகையிடப்பட்டன. அவற்றின் அலுவலகங்கள் இருந்த வீதிகள் வீதித்தடைகள் போடப்பட்டு மக்கள் உட்பிரவேசிக்க முடியாதவாறு தடுக்கப்பட்டனர். நூற்றுக் கணக்கான ஆயுதம் தரித்த இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். பவள் கவச வாகனங்கள் பாதுகாப்பிற்கு நிறுத்தப்பட்டிருந்தன.**

**யாழ் பல்கலைக்கழகத்திற்கோ மூடுவிழா. வட மாகாணசபையில் ஏற்றப்பட்ட நினைவுச் சுடர்கள் பந்தாடப்பட்டன. யாழ்குடாநாட்டில் இருந்த பெரும்பாலான ஆலயங்கள் இராணுவத்தினரால் முற்றுகை இடப்பட்டிருந்தன. நினைவேந்தல் நிகழ்வுகள் செய்பவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்ற அச்சுறுத்தல் வேறு. இவ்வாறு தமிழர் தாயகம் எங்கும் அரச அடக்குமுறை அதன் உச்சத்தினைத் தொட்டிருந்தது.**

**மே 18 இனை தென்னிலங்கை பெரும் வெற்றி விழாவாகக் கொண்டாட தமிழர் தாயகமோ மே மாத நடுப்பகுதியில் சோகத்தில் மூழ்கியது. அத்தனை அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் மக்களும் அரசியல் கட்சிகளும் மக்களுக்கான அஞ்சலி நிகழ்வுகளை நிகழ்த்தியிருந்தன. பல்கலைக்கழக சமூகமோ பெருந்திரளில் திரண்டு தமது உறவுகளுக்காக பிரார்த்தித்திருந்தனர்.**

**இச் சம்பவங்கள் பாரிய பல செய்திகளைச் சொல்லியிருக்கின்றது. ஒன்று இலங்கைத் தீவின் ஒரு பகுதியானது வெற்றிக்களிப்பில் திளைக்க மற்றய பகுதியானது சோகத்தில் மூழ்கியமை இலங்கைத் தீவானது இனரீதியில் இரண்டுபட்டுப் போய் கிடக்கின்றது என்பது. இரண்டு எத்தகைய அடக்குமுறைகளும் தமிழ் மக்களின் நியாயமான உணர்வுகளை கட்டுப்படுத்தாது என்பது. மூன்று போரில் கொல்லப்பட்ட தமது மக்களினை நினைவு கூரும் உரிமையைக் கூட தராத தென்னிலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் எத்தகைய உரிமைகளையும் அங்கீகரிக்கப் போவதில்லை என்பது.**

**தென்னிலங்கை அரசானது மக்களின் நினைவு கூரும் உரிமையை இரும்புக் கரம் கொண்டு அடக்க முற்பட்டதன் மூலம் ஒன்றை தெளிவாக ஏற்றுக் கொண்டுள்ளது. அதாவது கொல்லப்பட்டவர்கள் வேறு யாராலும் கொல்லப்படவில்லை என்பதுதான் அது.**

**அரசின் இத்தகைய ஒடுக்குமுறைக்கு பல காரணங்களைக் கூற முடியும். ஒன்று தான் வெற்றி விழாக் கொண்டாடும் ஒரு நாளை தமிழ் மக்கள் சோக நிகழ்வாக அனுஸ்டிக்க முனைவது இங்கு அழிக்கப்பட்டது பயங்கரவாதமல்ல மாறாக அப்பாவித் தமிழ் மக்களும் அவர்களது நியாயமான விடுதலைப் போராட்டமும் தான் என்ற செய்தி உலகிற்கு செல்லும் என்ற அச்சம். மற்றயது இவ்வாறு மக்களை நினைவுகூர அனுமதிப்பது மக்களை தேசிய உணர்வின் பால் அணிதிரட்டி விடும் என்ற அச்சம்.**

**ஜே.வி.பி கிளர்ச்சியின் போது கொல்லப்பட்ட ஜே.வி.பி கிளர்ச்சியாளர்களைக் கூட நினைவு கூர அனுமதிக்கும் பேரினவாதம் போரில் உயிரிழந்த அப்பாவி தமிழ் மக்களைக் கூட நினைவு கூர அனுமதிக்க தயாரில்லை என்பது பல செய்திகளை வெளிக்காட்டி நிற்கின்றது.**

# மே 18 - தமிழினத்தின் மீதான இன அழிப்பு நாள்

### - த.தே.ம. முன்னணி பிரகடனம்!

பிரித்தானியர்களிடமிருந்து இலங்கைத்தீவின் ஆட்சியதிகாரத்தினை சிங்களவர்கள் பெற்றுக்கொண்டனர். தீவை விட்டுப் பிரித்தானியர்கள் வெளியேறிய நாள் தொடக்கம் தமிழ்த் தேசத்தின் இருப்பை இல்லாது அழிக்கும் வேலைத்திட்டங்களை சிறீலங்காவின் ஆட்சியாளர்கள் தீவிரப்படுத்தியே வந்தனர்.

இந்த அழிப்பிலிருந்து தமிழ்த் தேசத்தின் இருப்பை பாதுகாத்துக் கொள்ள அகிம்சை வழியில் தமிழ் அரசியல் தலைமைகள் மேற்கொண்ட ஜனநாயக வழிப்போராட்டங்கள் முழுமையாகத் தோல்வியடைந்தன. அதனால் தமிழ் மக்கள் தமது தேசத்தின் இருப்பை பாதுகாத்துக் கொள்வதற்காக ஆயுதம் ஏந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டனர். அரசியல் விடுதலைக்கான தமிழ் மக்களது ஆயுதப் போராட்டத்தை பயங்கரவாதமாக இலங்கை அரசு சர்வதேச சமூகத்திற்கு சித்தரித்தது. சர்வதேச நாடுகள் உண்மைகளை அறிந்திருந்தபோதும், தத்தம் பூகோள அரசியல் நலன்களுக்காக இலங்கையில் ஆட்சியாளர்களைத் தமது கைகளுக்குள் போட்டுக் கொள்வதற்கு வசதியாக இலங்கையில் ஓர் அதிகார மையம் மட்டும் இருப்பதனையே விரும்பினர்.

அந்நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக இலங்கை அரசு மேற்கொண்ட இனஅழிப்பு யுத்தத்தை அமைதியாகவிருந்து அனுமதித்தன. பயங்கரவாதத்தை அழித்தல் என்ற போர்வையில் 21ம் நூற்றாண்டில் மனித குலத்திற்கு எதிரான சகல குற்றங்களையும் புரிந்தவாறு இந்த உலகின் கண்களின் முன்னால் இலங்கை அரசு மாபெரும் இனப்படுகொலையை வாகரையிலும், வன்னி மண்ணிலும் நிகழ்த்திக் கொண்டிருந்தது. நடக்கப்போகும் பேரனர்த்தத்தைப் புரிந்துகொண்டு உலகம் முழுவதும் வாழ்ந்த புலம்பெயர்ந்த தமிழ் மக்களும், தமிழக உறவுகளும், மொறீசியஸ், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் வாழ்ந்த தமிழ் மக்களும் தமது நாடுகளிலும் பல மாதங்களாக வன்னியில் அரங்கேறிக் கொண்டிருந்த இனஅழிப்பை தடுத்து நிறுத்துமாறு கோரி தொடர் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

யுத்த நிறுத்தம் கோரி பலர் தமக்குத்தாமே தீமூட்டித் தம்முயிரைத் தியாகம் செய்திருந்தனர். எனினும் தமது பூகோள அரசியல் நலன்களுக்காக வலிமைமிக்க நாடுகள் மௌனமாக இருந்தன. யுத்த சூனியப் பிரதேசங்களை அரசாங்கமே அறிவித்து அதற்குள் மக்களை வரவழைத்தது. நம்பி வந்த மக்கள் மீது எறிகணைகளை வீசி மக்களை கொத்துக்கொத்தாக கொன்று குவித்தது. கர்ப்பிணித் தாய்மார்கள், பெண்கள், குழந்தைகள், சிறுவர்கள், முதியவர்கள், நோயாளர்கள் என எந்த வேறுபாடுகளுமின்றி அப்பாவி மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர். அனைத்தும் நடந்து முடிந்த பின்னர் வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் 40,000 - 70,000 வரையான மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என ஐ.நா அறிக்கையிட்டுள்ளது.

ஆனாலும் 146,000 பேருக்கு என்ன நடந்தது என்பது இன்றுவரை தெரியாதுள்ளது. தமிழ் மக்கள் மீது புரியப்பட்டது வெறுமனே மனித உரிமை மீறலோ, மனித தத்துவத்திற்கு எதிரான குற்றமோ, போர்க்குற்றமோ மட்டுமல்ல அது திட்டமிட்ட இனப்படுகொலையாகும். இதற்கு நீதி கிடைக்கவேண்டும். கூட்டுப்படுகொலை மூலம் எமது உறவுகளை கொன்றொழித்தது மட்டுமல்லாமல் தம்மால் கொன்றொழிக்கப்பட்டவர்களை நினைவுகூறவும் கூடாதென சிறீலங்கா அரசும் அதன் இராணுவ இயந்திரமும் தடைவிதிக்கின்றன. நினைவு கூரலை தடுப்பதன் மூலம் தமிழ் மக்கள் மீது தாம் புரிந்த இனவழிப்பை மூடிமறைத்துவிட முடியுமென அரசு எண்ணுகிறது. எம் உறவுகளை அழித்து எமது இனத்தை அடிமைப்படுத்திய நாளை ஸ்ரீலங்காவின் தேசிய வெற்றிவிழாவாகவும் கொண்டாடுகின்றது.

இன அழிப்பு ஒன்றின் மூலம் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட நாளான மே 18 என்பது தமிழரது சரித்திரத்தில் மறக்க முடியாத கறை படிந்த நாளாகும். அந்நாள் தமிழினம் இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்ட நாளாகும். அந்நாளை "இனவழிப்பு நாளாகவே" நாம் பிரகடனம் செய்கின்றோம். கூட்டாகப் படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளை கூட்டாக நினைவு கூருவதற்கான உரிமை எமக்குள்ளது. இறந்தவர்களது ஆத்ம சாந்திக்காக முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த எம் உறவுகளுக்கான நினைவேந்தல் நிகழ்வுகளை அமைதியான வழியில் அனைவரையும் கடைப்பிடிக்குமாறு கோருகின்றோம்.

# தமிழ்த் தேசிய அரசியலிலிருந்து கிழக்கு மாகாணத்தை கூட்டமைப்பு விலக்குகின்றதா?

**- முத்துக்குமார்**

கிழக்குமாகாண தமிழ் மக்கள் தமிழ்த்தேசிய அரசியலிலிருந்து விலக்கப்படும் போக்கு அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது. இது தொடர்பான விவாதங்களும் ஆங்காங்கே இடம் பெறத் தொடங்கியுள்ளன. கிழக்கு மாகாணத்தின் முக்கிய ஆய்வாளரான கோபாலகிருஸ்ணன் இது தொடர்பாக பிரசுரத்தை வெளியிட்டிருக்கின்றார்.



தமிழ்த்தேசிய அரசியலிலிருந்து விலகிச் செல்லவேண்டும் என நேரடியாகக் கூறாமல் வட-கிழக்கு இணைப்பு தற்போது சாத்தியமில்லை. கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிட்டாலே தமிழர்கள் அதிகாரத்திற்கு வரமுடியும். எனவே கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு விலகவேண்டும் எனக்கூறியிருக்கின்றார். இப்பிரசுரத்தில் அவர் வைக்கின்ற வாதம் கிழக்கில் தமிழர்களின் இருப்பைப் பாதுகாக்க வேண்டுமென்றால் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என்பதே.

> **கிழக்குமாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைமை ஸ்தானம் கூட்டமைப்பிடமே இருக்கின்றது. இது மக்களினுடைய பிரச்சினைகளை வெளியே கொண்டு வருவதற்கு பயன்படுத்தக்கூடிய களமாகும். ஆனால் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்கள் இச்செயற்பாட்டை சிறிது கூட மேற்கொள்வதில்லை. எதிர்க்கட்சி தலைவராக தமிழர் ஒருவர் இருக்கின்றார் என்பதே தற்போது பலருக்கு மறந்து விட்டது.**

முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் சந்திரகாந்தன் இன்னும் ஒருபடி மேலே சென்று யாழ்ப்பாணத் தலைமையின் ஆதிக்கத்திலிருந்து கிழக்கு மாகாணம் விடுபடவேண்டும் எனக் கூறியிருக்கின்றார்.


இது போன்ற கருத்துக்கள் முன்னரும் தமிழ்த் தேசிய எதிர்ப்பு சக்திகளினால் கூறப்பட்டவைதான். ஆனால் கிழக்கு தமிழ் மக்கள் அவற்றை நிராகரித்து ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ்த் தேசியத்தின் மீதான தமது பற்றுறுதியை தெளிவாக வெளிக்காட்டியிருந்தனர். ஆனால் இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பினர் கிழக்கை தமிழ்த் தேசிய அரசியலிலிருந்து விலக்கும் நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபடுவதனால் அவர்கள் குழம்பி போயுள்ளனர்.

இங்கேயுள்ள அபாயம் என்னவென்றால் முன்னர் தனிப்பட்ட பிரமுகர்களினால் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் கூட்டமைப்பின் துரோகத்தனங்களினால் இன்று பொதுக்கருத்தாக வளர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

இங்கே எழுப்பவேண்டிய கேள்வி கிழக்கு தமிழ்மக்கள் இவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பதற்கு தூண்டிய அகக்காரணிகள் என்ன என்பதாகும் புறக்காரணி மிகவும் தெளிவானது. அது கிழக்கில் வளர்ந்து வரும் முஸ்லீம் ஆதிக்கமே. இது வரை காலமும் தென்கிழக்கு தமக்கு சொந்தம் எனக்கூறிய முஸ்லீம்கள் கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு பின்னர் முழு கிழக்குமே தமக்கு சொந்தம் என நினைக்க முற்படுகின்றனர். வடக்கு தமிழர்களின் ஆதிக்கத்தில் இருக்கட்டும். கிழக்கு முஸ்லீம்களின் ஆதிக்கத்தில் இருக்கட்டும் என அவர்கள் வெளிப்படையாகவே கூறுகின்றனர். முன்னர் வட - கிழக்கு இணைப்புக்கு ஆதரவாக நின்ற விரல்விட்டு எண்ணக்கூடிய முஸ்லீம்களும் இன்று அதனைக் கைவிட்டுள்ளனர்.

புறக்காரணிக்கு அப்பால் அகக்காரணி என்று பார்க்கும்போது பிரதான காரணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஆகும். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பல்வேறு நடவடிக்கைகளே தமிழ்த் தேசிய அரசியலில் நம்பிக்கை இழக்கச் செய்து கிழக்குத்தமிழ் மக்களை பொதுபலசேனாவிற்கு பின்னால் செல்வதற்குதூண்டியிருக்கின்றது.

அதில் முதலாவது வடக்கு-கிழக்கு பிரிந்த மாகாண சபைகளில் போட்டியிட்டமை ஆகும். வட - கிழக்கினை உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பின் மூலம் பிரித்தாலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அதனைக் கைவிடாத வரை வட-கிழக்கு இணைப்பு என்பதற்கு ஒரு அரசியல் அந்தஸ்து இருந்தது. கூட்டமைப்பு பிரிந்த மாகாணசபைகளில்



போட்டியிட்டதோடு அந்த அரசியல் அந்தஸ்தும் இல்லாமல் போய்விட்டது. இதன்பின்னர் தமிழ்த்தேசிய அரசியலுடன் இணைந்திருப்பதன் மூலம் கிழக்கு தமிழ்மக்களுக்கு என்ன பலன் கிடைக்கப்போகின்றது என அவர்கள் நினைக்கப்பார்க்கின்றனர்.

அதுவும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் பின்னர் மாகாண அதிகாரம் முஸ்லீம்களின் கைகளுக்கு சென்றதனால் தற்காப்பு நிலையைக்கூட இழந்திட்டோம் என்ற உணர்வு அவர்கள் மத்தியில் வளரத்தொடங்கியது. கூட்டமைப்பு கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட முன்வந்த போது பல ஆய்வாளர்கள் இந்தநிலை வரலாம் என்ற அச்சத்தை சுட்டிக்காட்டியிருந்தனர். தேர்தலில் போட்டியிட்டு வடக்கு - கிழக்கு பிரிப்பிற்கும், மாகாணசபைத்தீர்விற்கும் அங்கீகாரம் கொடுக்க வேண்டாம் எனக் கேட்டனர்.

கூட்டமைப்பினர் அவற்றையெல்லாம் செவிசாய்க்கக் கூடிய நிலையில் இருக்கவில்லை. தாம் மாகாண சபை நிர்வாகத்தைக் கைப்பற்றுவோம் என்ற மாயத் தோற்றத்தை கொடுக்க முனைந்தனர். கிழக்கின் சமூக அமைப்பு தமிழர்கள் தனித்து பெரும்பான்மையைப் பெற ஒருபோதும் இடம் கொடுக்காது என்பது சம்பந்தன் தலைமைக்கு தெரியாததல்ல.

ஏற்கனவே வடக்கு - கிழக்குப் பிரிக்கப்பட்ட பின் கிழக்கின் நிர்வாக அதிகாரிகளாக முஸ்லீம்களே அதிகமாக இருந்தனர். இந்த அதிகாரமும் முஸ்லீம்கள் அமைச்சர்களாக இருப்பதனால் உருவான அதிகாரமும் இணைந்து தம்மை புறக்கணிப்பதாகவே கிழக்குத் தமிழர்கள் கருதுகின்றனர். மாகாணசபை நிர்வாகமும் அவர்களின்



கைகளில் சென்று, மூன்று முனைகளில் தாம் புறக்கணிக்கப்படுவதால் தற்காப்பு நிலையைக்கூட நாம் இழந்திட்டோம் எனக் கருதத்தொடங்கியுள்ளனர்.

இரண்டாவது அண்மைக்காலமாக கூட்டமைப்பினர் வடக்கு - கிழக்கு என்று மட்டும் பேசி வடக்கினை முக்கியத்துவப்படுத்துவதாகும். அதுவும் வட மாகாணசபைத் தேர்தல் வெற்றியின் பின்னர் செல்லுமிடங்களிலெல்லாம் வடக்கிற்கு அதிகாரத்தை தாருங்கள் என்றே கேட்கின்றனர். கிழக்குத் தமிழர்கள் பற்றி வாயே திறப்பதில்லை. இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களும் வடக்கிற்கு சென்று முதலமைச்சர் உட்பட சிவில் சமூகத்தவர்களை சந்திக்கின்றனர்களே தவிர கிழக்கிற்கு செல்வதில்லை. கிழக்கிற்கும் செல்லுங்கள் என கூட்டமைப்பினரும் கேட்பதில்லை. வெளிநாடுகளுக்கு பயணங்கள் செல்கின்ற போது கிழக்கின் தலைவர்களுக்கு பெரிய முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இந்நிலை எல்லாம் வடக்கு தங்களைப் புறக்கணிக்கின்றது என்ற உணர்வை கிழக்கு தமிழர்களுக்கு வழங்குகின்றது என்றே கருதப் பார்க்கின்றனர்.

ஏற்கனவே இங்கு பிரதேச வாதப்பிரச்சினை ஒன்று உள்ளது என்பது எல்லோருக்கும் தெரிந்ததே? ஆனாலும்

> **வட-கிழக்கினை உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பின் மூலம் பிரித்தாலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அதனைக் கைவிடாத வரை வட -கிழக்கு இணைப்பு என்பதற்கு ஒரு அரசியல் அந்தஸ்து இருந்தது. கூட்டமைப்பு பிரிந்த மாகாணசபைகளில் போட்டியிட்டதோடு அந்த அரசியல் அந்தஸ்தும் இல்லாமல் போய்விட்டது**

தமிழ்த்தேசிய அரசியல் இவற்றை மேவிநின்று கிழக்கினை இணைத்து வைத்திருந்தது. இன்று அது ஆட்டம் காணத்தொடங்கியிருக்கின்றது.

மூன்றாவது கிழக்கு மாகாண சபையில் தமிழ்ப்பிரதிநிதிகள் வினைத்திறன் அற்று செயற்படுவதாகும். கிழக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைமை ஸ்தானம் கூட்டமைப்பிடமே இருக்கின்றது. இது மக்களினுடைய பிரச்சினைகளை வெளியே கொண்டு வருவதற்கு பயன்படுத்தக்கூடிய களமாகும். ஆனால் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்கள் இச்செயற்பாட்டை சிறிது கூட மேற்கொள்வதில்லை. எதிர்க்கட்சி தலைவராக தமிழர் ஒருவர் இருக்கின்றார் என்பதே தற்போது பலருக்கு மறந்து விட்டது. வடக்கு மாகாண சபையில் அதிரடித் தீர்மானங்கள் கொண்டுவரப்படுவது போல அங்கு எதுவும் கொண்டு வரப்படுவதில்லை. குறைந்த பட்சம் எதிர்க்கட்சித் தலைவர் கிழக்கின் முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக அறிக்கைகளாவது விடலாம். அதுவும் நடைபெறுவதில்லை. அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினர்களின் அறிக்கைகள் தான் அவ்வப்போது வெளிவருகின்றது. அவை கூட பெறுமதி வாய்ந்தவையாக இருப்பதில்லை.

மட்டக்களப்பு மாவட்ட மாகாணசபை உறுப்பினர் துரைரட்ணம் அவ்வப்போது காத்திரமான அறிக்கைகளை விடுவார். தற்போது அதையும் காணோம். சம்பந்தன் தலைமையின் கட்டுப்பாடு அவருக்கும் ஏற்பட்டிருக்கலாம். அவர் கூட்டமைப்பின் உறுப்பினராக அல்லாது தனித்த உறுப்பினராக இருந்தபோது சற்று வினைத்திறனுடன் செயற்பட்டிருந்தார். இன்று அதுவும் இல்லை. கூட்டமைப்பிற்குள் வந்துவிட்டால் செயற்பாட்டாளர்களும் பலவீனமாகி விடுவார்களோ!

நான்காவது அம்பாறை மாவட்ட தமிழர்கள் தொடர்பாக கூட்டமைப்பினர் போதிய அக்கறை செலுத்தாமை ஆகும். கூட்டமைப்பினர் எவர் தொடர்பாகவுமே அக்கறை செலுத்துவதில்லை என்பது வேறுகதை. இன்று சிறையில் உள்ளவர்கள், விதவைகள், தாய் தந்தையை இழந்திருக்கும் சிறுவர்கள், அங்கவீனர்கள்,போர்ப்பாதிப்புக்குள்ளாகி விசேட மருத்துவ தேவைகளையுடையோர் என்போர் விசேட கவனத்திற்குரியவர்கள். அவர்கள் எவர் பற்றியும் கூட்டமைப்பினர் அக்கறை செலுத்துவதில்லை.

(23ஆம் பக்கம் பார்க்க)

# கனவுகள் மெய்ப்பட வேணும் பாருங்கோ

வணக்கம் வணக்கம்

நான் கல்வயல் கனகசிங்கம். முள்ளி வாய்க்காலில கொத்துக்கொத்தாக காவுகொடுத்த உறவுகளின்ர நினைவேந்தலை சனம் உணர்வு பூர்வமாக அனுஷ்டித்திருக்குது. சனம் பேச்சுக்கு மறந்து போட்டுதெண்டு வைச்சாலும், அவையள் விடுகிறபாடாக இல்லை.

றோட்டுகளை மூடுகினம். கட்சி அலுவலகங்களிற்கு போக ஏலாதெண்டுகினம். கோவிலில மணி அடிக்கேலாது, பூசை செய்யேலாதெண்டுகினம். செஞ்ச அட்டூழியம் கொஞ்சநஞ்சமே. ஏத்தின தீபத்தை காலால மிதிச்சு அணைக்கினம், ஏத்தினவங்களை துரத்திதுரத்தி அடிக்கினம். இரவில துண்டு பிரசுரங்களை வீடுகளுக்குள்ள வீசிப் போட்டு, காலையில அதை வைச்சிருந்ததாக சொல்லி கைது செய்யினம்.

ஒரு நல்ல விசயம் நடந்திருக்கடா தம்பி. என்னெண்டால் மத்தியின் அதிகாரத்தை அவையின் காலைப் பிடிச்சு, பிச்சை கேக்கிற மாதிரி கேட்டுகொஞ்சஅதிகாரத்தை பகிர்ந்து கொண்டு வாழலாம்




எண்டு சிலபேர் சொல்லுற இராசதந்திரக் கதையள கேட்டுகுழம்பிப் போயிருந்ததுகள். இப்ப ஒன்று மட்டும் இந்த முறை சனத்துக்கு தெளிவாயிட்டுது. ஒரே தேசம் எண்ட விளையாட்டு தற்கொலைக்கு ஒப்பானது. ரண்டு தேசங்கள் எண்டதுதான் ஒரே வழி எண்ட விசயம்தான் அது. இன நல்லிணக்கம், சகோதரத்துவம், அனைவருக்கும் சம உரிமையெண்டு மகிந்தராசா மேடை வழியே பேசுறதெல்லாம் மேடைப்பேச்செண்டு தமிழ் சனங்களுக்கு நல்லா விளங்கியிட்டுது. ஆனால் அதையும் தாண்டி யாழ்ப்பாணம் தொடங்கி அம்பாறை ஈறாக நினைவேந்தல்கள் நடந்திருக்குது. குட்டக்குட்ட குனியிற சனம் தமிழ் சனம் இல்லையென்றது சிங்கள தேசத்திற்கு இம்முறை இன்னொருக்கா உறைச்சிருக்கும்.

தியாகங்களைப் போற்றுவது எங்கடை பண்பு. எங்கடை அடிவயிறுகள் ஒவ்வொரு நாளும் எரிஞ்சு கொண்டேயிருக்குது. அது இப்போதைக்கு அணையாது பாருங்கோ. எங்கட உறவுகளது தியாகங்களிற்கு பதில் கிடைக்கவேணும். கொல்லப் பட்டவையின்ர துர்மரணங்களுக்கு நீதி கிடைக்க வேணும். அதுக்காக அடங்காமல் போராடும் எங்களுடைய சனம்.

அதுகள் ஒரு புறமிருக்க எனக்கு சில சந்தேகங்கள் இருக்கு பாருங்கோ. கீரிமலையில இறந்தவர்களுக்கு பிதிர்கடன் செய்யிறது இந்துக்களின்ர பாரம்பரியம் பாருங்கோ. கடைசியில அதுக்கும் முட்டுக்கட்டை போட்டுட்டாங்கள். ஆனால் இந்து அமைப்புக்கா ரர்கள் ஒருத்தரும் மூச்சுப்பேச்சைக் காணவில்லை. அலரிமாளிகையிலையும், தூதுவராலயங்களிலயும் கை குலுக்கவும் போட்டோவுக்கு போஸ் குடுக்கவும் தான் அவை இருக்கினம் போல.

அதிலயும் உள்ளூராட்சி சபை தேர்தலிலையும், மாகாணசபை தேர்தலிலயும் வீரவசனம் பேசிக் கொண்டு திரிஞ்ச கூத்தமைப்புகாரர் விட்ட டிமிக்கியள் கொஞ்ச நஞ்சமே. முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை எவரேனும் செய்யட்டு மெண்டு அம்பாறைக்கு ஓடிப்போன மாவை ஏன் அடிக்கடி அங்கை போனவரெண்டு உள்வீட்டுக்காரருக்குத்தான் உண்மை தெரியும். அதிலயும் அண்ணர்தப்பியோடேக்கை பேப்பர்களுக்கு விட்ட ஊடக அறிக்கையில என்ன சொல்லிகிடக்கெண்டு விளங்காமல் பேப்பர்காரர் இரவிரவாக திண்டாடிக்கொண்டு திரிஞ்சவங்களாம்.

வடமாகாணசபை பேரவையில விளக்கேற்ற வாங்கோவெண்டு சிவாஜிலிங்கம் அழைப்பு விட்டதற்கு அனந்தியும் மேரிகமலாவும் மட்டும் தான் வந்தவையாம். அந்த இரண்டு பொம்பிளயளுக்கும் இருக்கிற துணிச்சல் மிச்ச 27க்கும் எங்கை எண்டு சனம் காறித்துப்புது. அதிலயும் பேரவை தலைவர் சீவிகேயர் கடைசிக் காலத்திலயெண்டாலும் கதிரையில இருந்திட்டுப்போவமெண்டு பார்த்தால் உவங்கள் விடுகிறாங்கள் இல்லையெண்டு திட்டித்தீர்த்துக் கொண்டு திரியுதாம். இந்திய தூதுவராலயத்தில கார் கொடுக்கபோறாங்கள் எண்டு ஒருக்கா சொல்லிப்பாருங்கோ. 30 பேரும் முண்டியடிச்சுக் கொண்டு முன்னுக்கு நிற்பினம் பாருங்கோ.

கார் கதை சொல்லயுக்கை தான் ஞாபகம் வருகுது பாருங்கோ. எங்கட வடமாகாண சபையின்ர முதலமைச்சர் மற்றும் அமைச்சர்மார் சனத்திற்கு சேவை செய்து கிழிச்ச சாதனையில அதிநவீன சொகுசு கார் கேட்டு அட்வான்ஸாக நாலு கோடியும் கொடுத்திட்டினமாம். முதலமைச்சர் பேரவைதலைவர் மற்றும் நாலு அமைச்சர்மாருக்குமென்று வாகனம் வாங்கப் போகினமாம். ஒவ்வொன்றும் ஒன்றரைக் கோடிக்கும் குறையாத விலையான கார்களாம். அதுக்காக நீங்கள் கேட்கக்கூடாது இப்ப இவையள் எல்லாரும் கால்நடையாக நடந்து போயோ மக்களுக்கு சேவை ஆற்றுகினமெண்டு. இப்பவும் அமைச்சு வாகனங்களில ராசா மாதிரிதான் அவையள் திரியினம். அடுத்ததாக இந்திய அரசாங்கம் அவைக்கு சொந்தமாக கொடுக் கிறகார்கள் அடுத்த மாதம் வந்திடுமாம்.

மூச்சுக்கொரு தடவை மாகாணசபையால மக்களுக்கு ஒன்றும் செய்யேலாமல் கிடக்குது. ஆளுநர் விடுகிறார் இல்லை. பிரதம செயலாளர் சொன்ன சொல்லு கேக்கிறாவில்லையெண்டு கத்தித்தீர்க்கினம். ஆனால் அந்த குற்றச்சாட்டை தங்களை தேடிவந்த டேவிட் கமரூனிட்டையோ, தங்கட இந்திய எசமான்களிட்டையோ அல்லது ஜெனீவாவுக்குப் போனபோது ஐ.நாவில முறையிடேல்ல. ஆனாலும் தங்களுக்கு வாகனம் தரேல்லை எண்டதை மட்டும் வெக்கம் ரோசம் இல்லாம தங்கட எசமானுகளுட்டை கேட்டுப்போட்டினம் பாருங்கோ. தங்கட அலுவல்களை கமுக்காக முடிக்கிறதில கெட்டிக காரங்கள்.

கூத்தமைப்பின்ர தேசியப்பட்டியல் எம்பி இந்த முறை பாராளுமன்ற தேர்தலில யாழ்ப்பாணத்தில களமிறங்கிறதாக முடிவு செய்திருக்கிறாராம். இப்ப கொஞ்ச நாளாக அவற்றை சொகுசுக்கார் வடமராட்சிப் பக்கம் இருக்கிற ஒழுங்கையெல்லாம் உழுது கொண்டு இருக்கிறதாக கேள்வி. ஆனால் அவையின்ர கட்சிகாரரே குசுகுசுக்கிற கதையிது. இந்த முறை எப்படியெண்டாலும் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்காரர் இரண்டு சீற் பிடிப் பாங்கள். சுமந்திரன் களமிறங்கினால் அது மூன்றாயிடுமெண்டு கதை அடிபடுது.

உண்மையில சிங்கக்கொடி காத்த வீரன் இம்முறை பாராளுமன்ற தேர்தலில போட்டியிடுற ஐடியாவில இல்லையாம். சனத்துக்கு முதுகில குத்தினதுக்கு சனம் எப்படியும் முகத்தில குத்துமெண்டது தெளிவாக ஆளுக்கு தெரிஞ்சிருக்காம். அதனால தேசியப்பட்டியலில தான் போகப்போறதாக சொல்லித் தான் தேசியப் பட்டியல் காரரை விசப் பரீச்சைக்குள்ள தள்ளியிருக்கிறராம்.

ஆனாலும் அயல் நாட்டில ஏற்பட்டிருக்கிற ஆட்சிமாற்றம் உவைக்கும் நல்லதொரு முன்னறிவிப்பு பாருங்கோ. காங்கிரஸையும்தி.மு.க.வையும் அரசியலிலிருந்தே சனம் தூக்கியடிச்ச மாதிரி, உவையின்ர நாட்களும் எண்ணப்படுகுது பாருங்கோ. தியாகங்கள் எல்லாவற்றையும் வழி நடத்தும் பாருங்கோ.

நன்றி

## நையாண்டியார் பதில்கள்

த.சுரேகா, புதுக்குடியிருப்பு
முல்லைத்தீவு

**கேள்வி – முள்ளிவாய்க்கால் பேரவல நினைவு கூரல் தடைகள் எதை சொல்லி நிற்கின்றன?**

**பதில் –** துப்பாக்கி முனைகளின் கீழான ஆட்சியொன்றைப்பேணவே தெற்கு தொடர்ந்தும் திடசங்கற்பம் கொண்டுள்ளமை தெரிகின்றது. அடக்குமுறைகளால் எதையும் செய்ய முடியாதென்பதையும் எமது மக்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக இலங்கைத்தீவில ஓரே தேசம் எண்ட கதை கற்பனையில் கூட சாத்தியமில்லை என்பதும் வெளிப்பட்டிருக்கின்றது.

தி.முல்லைவளவன், தர்மபுரம்
கிளிநொச்சி

**கேள்வி – இலங்கை மீது போர்குற்ற விசாரணை ஆரம்பமென பிரச்சாரம் செய்த கூட்டமைப்பு இப்போது அடக்கி வாசிக்கின்றதே?**

**பதில் –** அடக்கி வாசிச்சால் கூட பரவாயில்லை. இலங்கை மீது ஏதாவது விசாரணை நடாத்தினால் போதுமென்ன சுமந்திரன் ஜெனீவாவில் கோரியிருந்தார். அதையே உறுப்பு நாடுகளிற்கு கடிதம் எழுதி சம்பந்தனும் வலியுறுத்தியிருந்தார். அது மட்டுமே போர்க் குற்றவிசாரணையே நடாத்தமுடியாதபடி மனித உரிமை விவகாரங்களோட மட்டுப்படுத்தி ஒரு தீர்மானத்தைகொண்டு வந்து நாசம் பண்ணிப் போட்டாங்கள். இப்ப உள்ள நிலையில ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் ஒரு விசாரணையை நடத்தும்போது போர்குற்றம் நடந்திருக்கு என்றவாறு ஒரு அறிக்கை சமர்ப்பிக்க முற்பட்டால் இலங்கை அரசு சட்ட ரீதியாக அதை ஆட்சேபித்து சீனா போன்ற நட்பு நாடுகளின்ர ஆதரவோட அதை நிராகரிக்க கூடிய வாய்ப்பையெல்லோ குடுத்திட்டாங்கள்.

சு.சிராய்வா, புத்தளம்

**கேள்வி–தென்னாபிரிக்காவின் சமாதான முயற்சி என்னவாகும்?**

**பதில் –** மஹிந்த ஆட்சி தமிழர்களிற்கு எதனையும் தந்துவிடக்கூடாது என்பதினில் உறுதியாக நிற்கின்றது. அவ் வகையினில் காலத்தை இழுத்தடிக்க தெரிவுக்குழு நல்லிணக்க ஆணைக்குழு என பல பூச்சாண்டிகளை காட்டிக் கொண்டிருக்குது. இதுக்குள்ள தென்னாபிரிகாவை பிடிச்சு ஒரு சமரசப் பேச்சு வார்த்தையே தொடக்கி சர்வதேச விசாரணை நெருக்கடியில இருந்து தப்பிக்க அரசு காய் நகர்த்துகிறது. தென்னாபிரிக்க தலைமையிலான சர்வதேச மத்தியஸ்தம் என்பது தமிழ் மக்களுக்கும் கிடைச்சிருக்கிற மாபெரும் வாய்ப்பு ஆனால் இதனை கூட்டமைப்பு எவ்வாறு கையாளப் போகின்றது என்பதில் தான் அனைத்தும் தங்கியுள்ளது.

க.துஸ்யந்தினி, புன்னாலை கட்டுவன்
யாழ்ப்பாணம்

**கேள்வி – உயர் பாதுகாப்பு வலயமென முடக்கப் பட்டுள்ள வலி.வடக்கு கதை அதே கதை தானா?**

**பதில் –** மக்களது நிலங்களை மீட்டெடுத்து தரப்போவதாக சொன்னவர்களது வழக்குகள் நீதிமன்றங்களினில் தூங்குகின்றது. சம்பூர் மக்களை மாற்றிடம் தருவதா? நஸ்டஈடு தருவதா? என நீதிமன்றமே கேள்வி எழுப்புகின்றது. வலி வடக்கிற்கு என்னவாகுமென்பதற்கு சம்பூர் பதிலாகின்றது.

# வடபகுதியில் அபிவிருத்தி ஏற்பட்டுவிட்டதா?

## - கிராஞ்சி ஒரு நேர்முக ஆய்வு

மு.கஜன்


கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வடக்கே 6.5 கி.மீ தரை, வயல்களையும், கிழக்கே 7 கி.மீ சம்புவெளியையும், மேற்கே 6கி.மீ காட்டையும், தெற்கே தரைவைக் கடலையும் கொண்ட Kn/75 கிராமசேவகர் பிரிவை உடைய 520 குடும்பங்களை கொண்ட தென்னைவளம் மிக்க அழகிய அமைதியான கிராமம் கிராஞ்சி.

1956ம் ஆண்டு 5 ஏக்கர் திட்டத்தின் ஊடாக 105 குடும்பங்களினால் இக் கிராமம் உருவாக்கப்பட்டது. இம் மக்களுக்கு தனியான கிராமசேவையாளர் கிடையாது. Kn/76ல் கடமையாற்றுகின்ற கிராமசேவையாளரே இங்கு பகுதிநேரமாக கடமையாற்றுகின்றார். கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் இங்கு போதியளவு இல்லை.

கல்வியை மேம்படுத்தும் தொன்மை மிக்க ஒரு கலைக்கூடமாக கிளி/ கிராஞ்சி அ.த.க. பாடசாலை 327 மாணவர்களுடன் செயற்படுகின்றது. இங்கு நான்கு ஆசிரியர் பற்றாக்குறையுடன் மாணவர்கள் கல்வி கற்றுவருகின்றனர். தரம் 9 வரை மட்டுமே வகுப்புக்கள் இருந்தன. ஆனாலும் மாணவர்களின் ஊக்கம் காரணமாகவே இவ் ஆண்டு 10ம் தரம் ஆரம்பிக்கப்பட்டது. எனினும் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களை தொண்டராசிரியர்களே கற்பிக்கின்றனர். இங்குள்ள 13 ஆசிரியர்களுள் 07 பேர் நிரந்தரநியமனம் பெற்று ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு செல்லவுள்ளதால் இங்குள்ள நிலைமை மிகவும் கவலைக்குரியதாக உள்ளது. பாடசாலையிலுள்ள ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாக பெற்றோர்களின் ஊடாக வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜாவுக்கு தெரியப்படுத்தியும் எந்த விதமான ஆக்கபூர்வமான முடிவும் எடுக்கப்படவில்லை என தெரியவருகின்றது.

மேலும் இப் பாடசாலையில் ஆய்வு கூடம், தரமான நூலகம், போதுமான விளையாட்டு உபகரணங்கள் என்பன இல்லை. பரதநாட்டியம், உடற்பயிற்சி ஆசிரியரும் இல்லை. 2011ஆம் ஆண்டு மாகாணமட்டத்தில் ஈட்டிஎறிதலில் தங்கப்பதக்கத்தையும் பெற்றுள்ளது. தொடர்ந்து மாகாணமட்டத்தில் பங்குபற்றி வருகின்ற இப் பாடசாலையில் போதிய விளையாட்டு உபகரணங்களும் உடற்பயிற்சி ஆசிரியர் இல்லாமையும் இவர்களின் வளர்ச்சியை பாதிப்படையச் செய்கின்றது. ஆசிரியர்களுக்கான தங்குமிட வசதிகள், அத்துடன் அதிபருக்கான நிரந்தர காரியாலயமும் இல்லை. இங்கு கடமை ஏற்கவருகின்ற புதிய ஆசிரியர்களும் வீதி ஒழுங்கின்மை காரணமாக இங்கு வருவதை தவிர்க்கவே விரும்புகின்றனர். இதுவும் இவர்களுடைய கல்வியை பாதிப்படையச் செய்கின்றது. அத்தோடு இங்குள்ள மாணவர்களுள் போரினால் இரண்டு பேர் அங்கவீனர்களும், 06 பேர் காயமடைந்தும் 06 பெண்கள் தலைமைத்துவத்தை உடைய குடும்பங்களின் பிள்ளைகள் கல்வி கற்று வருகின்றனர்.

இம் மாணவர்கள் க.பொ.த உயர்தரம் கற்க வேண்டுமாயின் 6 கி.மீ காட்டினைத் தாண்டி வேரவில் மகா வித்தியாலயத்திற்கு செல்லவேண்டும். போக்குவரத்து வசதி சீர்இல்லாததினால் துவிச்சக்கரவண்டியிலும், நடந்தும் செல்லவேண்டியும் உள்ளது. போக்குவரத்து வசதிகள் இன்மை, வறுமை காரணமாக பலர் கல்வியை இடையில் நிறுத்தியிருக்கின்றனர். **அங்கு உயர் தரத்தில் கலைப்பிரிவு மட்டும் தான்**



**உள்ளது. அதிலும் அவர்கள் விரும்பிய எல்லா பாடங்களையும் எடுக்க முடியாது. தமிழ், புவியியல், இந்துநாகரீகம், நாடகம் அரங்கியல் போன்ற பாடங்கள் மட்டும்தான் உள்ளன. கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், போன்றவை கற்பதற்கு திறமை கல்வித்தகமை, ஆர் வம் இருந்தும் 20, 30 கி.மீ தாண்டி பூநகரி, முழங்காவில் ஆகிய வெளியிடங்களுக்கு சென்று கற்க வேண்டி உள்ளமையால்** அக்கல்வியை தொடர முடியாத நிலைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர் . இவர்களின் வறுமை இதற்கு தடையாக உள்ளது. இக்கிராமத்தில் உயர்நிலைக் கல்வி கற்றவர்கள் மிகக் குறைவு. தனியார் கல்வி நிலையமும் இங்கு இல்லை. அத்துடன் சிறுவயது திருமணங்களும் போதிய கல்வி அறிவின்மையால் நிகழ்கின்றது.

இக் கிராமத்தில் அரச பணியில் 42 பேர் அளவிலேயே காணப்படுகின்றனர். அவர்களும் போக்குவரத்து வசதியின்மையினால் வேறு இடங்களில் குடியேறுகின்றனர். ஏனையோரின் வாழ்வாதாரமானது விவசாயம், சிறு கடற்தொழில், வீட்டு வருமானம் என்பவற்றை மையமாக கொண்டுள்ளன. இவர்கள் தமது மரக்கறி தேவையையோ அல்லது ஏனைய தேவைகளையோ தாமே பூர்த்தி செய்யவேண்டிய நிலையில் உள்ளனர். இங்கு 220 விவசாய குடும்பங்கள் சீவனோபாயத்தை மேற்கொள்கின்றன. இவர்கள் 1300 ஏக்கரில் 900 ஏக்கரை பெரும்போக நெற்செய்கைக்காக பயன்படுத்துகின்றனர்.

**கடல்நீர் சம்புவெளியூடாக புகுந்து மிகுதி 400 ஏக்கரையும் சவர்நிலமாக மாற்றிவிட்டது. இதனால் விவசாயிகளின் விளைநிலங்கள் சவர்நிலங்களாக மாறும் துர்பாக்கிய நிலையும் ஏற்படுகிறது. இதனை தடுக்கும் முயற்சியில் பல தொண்டு நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. இங்குள்ள தள்ளாவில் குளத் தினை புனரமைப்பு செய்வதின் ஊடாக 500 ஏக்கரில் மேலதிகமாக இரு போகங்களிலும் நெல் உற்பத்தி செய்ய முடியும்.**

போக்குவரத்து என்பது இங்கு மிகவும் கடினம். இக் கிராம மக்கள் தமது கிராமத்தை விட்டு வெளியே செல்வதற்கு 4 தடவை மாத்திரமே பேரூந்தில் செல்லலாம். அதாவது காலை 4.30, 7.00, 7.10, 9.30 ஆகிய நேரங்களில் மட்டும் தனியார் பேரூந்துகளில் வெளியே செல்லலாம். 9.30க்கு பின்னர் செல்ல முடியாது. இக் கிராமத்தின் வீதிகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. அதாவது 2005ம் ஆண்டு கிரவலினால் அமைத்த வீதிக்கு 2011ம் ஆண்டு தேர்தலுக்காக தார் ஊற்றப்பட்டது. ஆனால் இப்பொழுது தார் போட்டதற்கான அறிகுறிகள் அற்று குன்றும் குழியுமாகவே காணப்படுகின்றது.1 கி.மீ கொங்கிறீட் வீதிகள் 2 மட்டுமே உள்ளன. மீதி வீதிகள் மணல் வீதிகளாகவே காணப்படுகின்றன.

மின்சாரம் என்பது இக் கிராம மக்களுக்கு அறியாத ஒரு பொருளாகவே விளங்குகின்றது. மின்சாரம் வழங்குவதற்காக கம்பங்கள் நடுகை இடம்பெற்று பல நாட்கள் கழிந்தும் மின்சாரம் இன்னும் வழங்கப்படவில்லை. மின் பொருட்கள் பற்றியும் மக்களுக்கு பெரிதாக எதுவும் தெரியாது.

இம் மக்களின் சுகாதாரசேவை என்பது சொல்லத் தேவையில்லை. இங்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் கூட இல்லை. இவர்கள் 6 கி.மீக்கு அப்பால் உள்ள வேரவில் வைத்தியசாலைக்கு செல்லவேண்டும். அங்கும் நிரந்தர வைத்தியர் இல்லை. இவர்கள் வைத்தியம் பெறவேண்டுமாயின் 45 கி.மீ தூரம் உள்ள கிளிநொச்சி வைத்தியசாலைக்கு செல்ல வேண்டியுள்ளது.

இங்கு சிகை அலங்கரிப்பு நிலையங்கள் இரண்டு உள்ளன. அதில் ஒன்று ஆலமரத்தின் கீழ் தென்னை ஓலையினால் அடைக்கப்பட்டு உள்ளது. மற்றையது பகுதி நேரமாகவே செயற்படுகிறது.

இங்கு புதிதாக செல்பவர்கள் இராணுவத்தின் சோதனைச் சாவடியில் அடையாள அட்டையினை சமர்ப்பித்து பதிவினை மேற்கொண்ட பின்னே உள்ளே செல்லமுடியும். புதியவர்கள் சென்றுவிட்டு திரும்பிவந்தால் இராணுவம் விசாரணை மேற்கொள்ளும் ஓர் இக்கட்டான சூழ்நிலைக்கும் உள்வாங்கப்படுவார்கள். இங்கு இராணுவத்தினர் ஒன்றுகூடல், நிகழ்வுகளுக்கு அழைப்பு விடுத்தால் கட்டாயம் சமூகமளிக்கவேண்டும். இல்லாவிடின் மிரட்டல்களும் அச்சுறுத்தல்களும் இடம் பெறும். இங்கு சமூக சீர்கேடுகளும் தாராளமாகவே இடம்பெறுகின்றன.

இக் கிராமத்தின் அபிவிருத்தி தொடர்பாக நோக்குவோமானால், ஆனையிறவில் உப்பு உற்பத்தி செய்யப்பட்ட போது இங்கும் உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. இப்பொழுது உப்பு உற்பத்தி மேற்கொள்ளப்படுவதில்லை. ஆதலால் தொழில் இன்மை இங்கு அதிகமாக உள்ளது. இங்கு தென்னை வளம் மிக அதிகம். தென்னை உற்பத்திக்கு உகந்த மண்வளமும் உள்ளது. தென்னை சார்ந்த சிறு கைத்தொழிலை ஊக்குவிப்பதன் ஊடாக மேலும் இவர்களது வருமானத்தை அதிகரிக்கலாம்.

இக் கிராம மக்கள் வைத்தியர் இன்மையால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே இம் மக்கள் நலன் கருதி வைத்தியரை நியமித்து, அடிப்படை சுகாதார நிலையத்தையும் அமைத்து அவர்களுக்கான சுகாதார வசதிகளை மேம்படுத்த வேண்டும். இங்குள்ள வீதிகள் திருத்தப்பட வேண்டும். போக்குவரத்து வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும். கல்வித்தரம் உயர்த்தப்பட வேண்டும். வாசிப்பு பழக்கத்தினை வளர்க்க நூல்நிலையம் உருவாக்கப்பட வேண்டும்.

வடபகுதியில் அபிவிருத்தி ஏற்பட்டுவிட்டது என்று பிரதான வீதிகளூடாக நகரபுறத்துக்கு கூட்டிச் சென்று சர்வதேச சமூகத்திற்கு காட்டுபவர்கள் இவ்வாறான கிராமங்களையும் காட்ட வேண்டும். இங்கு வாழ்பவர்களும் மக்கள் தான் என்பதை புரிந்து கொண்டு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கண்டன அறிக்கை

## - ஜெகதீஸ்வரன் கைது செய்யப்பட்டமைக்கு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தங்கவேல் ஜெகதீஸ்வரன் அவர்கள் 23-05-2014 இரவு பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திங்கட்கிழமை 26-05-2014 காலை 11.00 மணியளவில் கிளிநொச்சி கச்சேரிக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நடாத்துவதற்கு எமது கட்சி ஏற்பாடு செய்திருந்தது. கிளிநொச்சியில் நிலஅபகரிப்பை கண்டித்தும், இராணுவத்தின் பிடியிலுள்ள வீடுகள் நிலங்கள் பொதுமக்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும் என்றும், இடம்பெயர்ந்த மக்கள் அவர்களது சொந்த வீடுகளில் மீளக் குடியமர உடனடியாக அனுமதிக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே மேற்படி போராட்டத்திற்கான அழைப்பு கட்சியினால் விடுக்கப்பட்டிருந்தது.

மேற்படி கவனயீர்ப்பு நிகழ்வை குழப்பும் நோக்கில் இராணுவ உளவுத்துறையினர் கடந்த சில தினங்களாக ஜெகதீஸ்வரன் வீட்டிற்குச் சென்று அச்சுறுத்தல் விடுத்திருந்ததுடன், இடம்பெயர்ந்த மக்களையும், கட்சியின் ஆதரவாளர்களையும் அச்சுறுத்தியிருந்தனர். நேற்றைய தினம் ஜெகதீஸ்வரனை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி போராட்டத்தை கைவிடுமாறு கோரியிருந்தார்.

இந்நிலையில் போராட்டம் நடாத்துவது தொடர்பாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கும் வகையில் 23ம் திகதி கிளிநொச்சி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியிடம் எழுத்து மூலமான கடிதம் கட்சியின் பொதுச் செயலாளரால் நேரில் சமர்ப்பிக்கப்பட்டது.

அக்கடிதத்தினை பார்வையிட்ட பொலிஸ் அதிகாரி போராட்டம் நடாத்த அனுமதிக்கமுடியாது என்று கூறியிருந்தார். காரணம் கேட்டபோது அன்றைய தினம் முக்கிய பிரமுகர் ஒருவர் வருகை தரவுள்ளார் அதனால் அனுமதிக்க முடியாது என்று கூறப்பட்டது. போராட்டம் நடாத்த அனுமதிக்க முடியாது என்ற விடயத்தினை எழுத்துமூலம் தருமாறு கட்சியின் பொதுச் செயலாளர் பொறுப்பதிகாரியை கோரியிருந்தார். எழுத்து மூலம் தருவது பற்றி தான் பின்னர் எம்முடன் தொடர்பு கொள்வதாக தெரிவித்திருந்தார்.

சட்டதிட்டங்களுக்கு அமைவாக ஏற்பாடு செய்யப்பட்ட ஜனநாயகப் போராட்டத்தை அச்சுறுத்தல் மூலம் அரசாங்கம் நிறுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டது. அதற்கு இடமளிக்காது சட்டதிட்டங்களுக்கு அமைவாக போராட்டத்தை நடாத்துவதில் பாதிக்கப்பட்ட மக்களும் கட்சியும் உறுதியாக இருந்த நிலையிலேயே மேற்படி கைது இடம் பெற்றுள்ளது.

இக் கைது எமது கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஜனநாயகப் போராட்டத்தை தடுத்து நிறுத்த வேண்டும் என்ற நோக்கிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் எமது கட்சியின் செயற்பாடுகளை முடக்கும் நோக்கிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ் மக்களால் முன்னெடுக்கப்படும் ஜனநாயக ரீதியான செயற்பாடுகளை இன ரீதியான கண்ணோட்டத்தில் நோக்கும் அரசு தனது இராணுவ மற்றும் பொலிஸ் பலத்தை பிரயோகித்து நசுக்க முயல்கின்றது.


இக்கைதினை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன், இவரை விடுவிக்க சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கோருவதுடன் இவரது விடுதலைக்காக கட்சி பேதங்களுக்கப்பால் அனைவரையும் எம்முடன் இணைந்து செயற்பட முன்வருமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

நன்றி

வெளியீடு - 24-05-2014

# யாழ் பொதுநூலக எரிப்பு வரலாற்றில் மிகப்பெரும் கலாச்சார அழிப்பு

## - ஆனி 1ம் திகதி நூலக எரிப்பு தினம்



யாழ் பொது நூலகம் 1981ம் ஆண்டு ஆனி மாதம் 1ம் திகதி படையினரினாலும் அவர்களுடன் கூட வந்த சிங்களக் காடையர்களினாலும் எரிக்கப்பட்டது. அப்போதைய அமைச்சர் காமினி திசநாயக்கா சுபாஸ் ஹொட்டலில் தங்கியிருந்து இவ் எரிப்பினை வழி நடாத்தினார். சுமார் 45,000 நூல்களும் அரும்பெரும் ஓலைச் சுவடிகளும் நெருப்பில் எரிந்து கருகின.

1981ம் ஆண்டு மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தலைக் குழப்புவதற்காக வந்தவர்களே இவ் எரியூட்டலை மேற்கொண்டனர். இதனுடன் சேர்த்து யாழ் பிரதான வீதியில் இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச்செயலகமும், பலாலி வீதியில் இருந்த யாழ்ப்பாணத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீடும் எரிக்கப்பட்டன. 1977 தேர்தலை தமிழீழத்திற்கான சர்வஜன வாக்கெடுப்பு என்று பிரச்சாரப்படுத்தியவர்கள் 1981ல் எந்தவித அதிகாரமுமில்லாத மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு இறங்கி வந்தார்கள் என்பது வேறுகதை.

உலகின் மிகப்பெரும் பாசிஸவாதி எனக் கூறப்படுகின்ற கிட்லர் கூட மருத்துவமனைகள் மீதும். நூலகங்கள் மீதும் குண்டு வீச்சுகளை நடாத்த வேண்டாம் என தனது படையினருக்கு கட்டளையிட்டார். அப்போது ஆட்சியிலிருந்து ஐக்கிய தேசியக்கட்சி அரசு கிட்லரை விட மோசமாக நடந்துள்ளது.

ஒரு தேசிய இனத்தின் இருப்பு நிலம், மொழி, பொருளாதாரம், கலாச்சாரம் என்ற தூண்களில் தான் தங்கியிருக்கின்றது. யாழ் நூலக எரிப்பு தமிழ்த் தேசிய இனத்தின் இருப்பைச் சிதைப்பதற்கான வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியே! இந்த வேலைத்திட்டத்தினை நகர்த்துவதில் தென்னிலங்கையின் இரு பிரதான கட்சிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவையாக இருக்கவில்லை. இன்று நடப்பவையெல்லாம் இவ் வேலைத்திட்டத்தின் தொடர்ச்சியே.

# இராணுவத்திற்கு தமிழ்ப் பெண்கள் சேர்ப்பு



இராணுவத்தின் மகளிர் படையணிக்கு தமிழ்ப் பெண்கள் சேர்க்கப்பட்டனர். மே.19ம் திகதி (19)இதற்கான நேர்முகத்தேர்வு யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெற்றது. முதற்கட்டமாக 30 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சிகள் விரைவில் காங்கேசன் துறையில் ஆரம்பிக்கப்படவுள்ளன. பலாலி இராணுவ கட்டளைத் தலைமையக ஊடகபேச்சாளர் மல்லவராச்சி இந்தத் தேர்வுகளை நடாத்தினார். இதற்கு முன்னர் கிளிநொச்சியில் தமிழ்ப் பெண்கள் இராணுவத்தில் சேர்க்கப்பட்டனர்.

# பராமரிப்பு இல்லாத ஊவாக்கலை தோட்டம்

ஊவாக்கலை 1ம் இலக்கத் தோட்டம் கடந்த இரண்டு வருடங்களாக பராமரிப்பு அற்று காணப்படுகின்றது. உரம் இடுதல், புல் வெட்டுதல், போன்ற பராமரிப்பு வேலைகள் இடம்பெறுவதில்லை. இதனால் தேயிலைத்தோட்டங்கள் காடுமண்டிக்கிடக்கின்றன. சிறுத்தை பாம்பு போன்ற வனவிலங்குகள் தேயிலைத்தோட்டத்திற்குள் புகுந்து கொழுந்து பறிக்கும் பெண்களுக்கு ஆபத்துக்களை ஏற்படுத்துகின்றன.

தோட்ட நிர்வாகத்தின் இந்த அசமந்தப் போக்கினைக் கண்டித்து தொழிலாளர்கள் இரண்டு தினங்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தொழிற்சங்கப் பிரதிநிதிகள் நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தினர். நிர்வாகம் மிக விரைவில் கோரிக்கைகளை தீர்த்து வைப்பதாக உறுதி கூறியுள்ளது.

# தமிழ்த் தேசிய
# கூட்டமைப்பிலி
# அனந்தி நீக்க

தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிகழ்ச்சி நிரலிற்குள் நின்று அனந்தி செயற்பட மறுத்து வருவதால் அனந்தியை கூட்டமைப்பிலிருந்து நீக்கும் முயற்சிகள் திரை மறைவில் இடம்பெற்றுவருகின்றன. புலம் பெயர் நாடுகளில் இந்தத் தகவல் ஏற்கனவே அடிபடத்தொடங்கிவிட்டது. கூட்டமைப்புடன் தொடர்புடைய புலம்பெயர் நாட்டில் வகிக்கும் முக்கியஸ்தர் ஒருவர் அனந்தி விரைவில் நீக்கப்படுவார் என உறுதியாகக் கூறியிருக் கின்றார்.

அண்மையில் இடம்பெற்ற பாராளுமன்ற குழுக்கூட்டத்திலும் பின்னர் திருகோணமலை யில் இடம்பெற்ற கட்சிக் கூட்டத்திலும் அனந்தி தொடர்பான குற்றச்சாட்டுக்களை சம்பந்தனும் சுமந்திரனும் முன்வைத்திருக்கின்றனர். இதன் போது எவருமே அனந்திக்காக பேச முன்வரவில்லை. உட்கட்சிப் போராட்டத்தை நடாத்துவதாக காட்டிக்கொள்ளும் சுரேஸ் பிறேமச்சந்திரனும் மௌனமாகவே இருந்தி ருக்கின்றார். தமிழ்த் தேசியவாதியாக தன்னைக் காட்டிக்கொள்ளும் ரவிகரனும் மௌனம் காத்தார்.

தனிமைப்பட்டுப்போன நிலையில் உணர்ச் சிவசப்பட்டு திருகோணமலை கூட்டத்தில் பேசியபோது அனந்தி துக்கம் தாளாமல் கண்ணீர் விட்டதாகவும் செய்திகள் வந்தன.

அனந்திக்கும் சம்பந்தன் தலைமைக்கும் இடையேயான முரண்பாடு வெளிப்படையா னது. கூட்டமைப்புக்கென சொந்த நிகழ்ச்சி நிரல் எதுவும் கிடையாது. அது இந்தியா வின் நிகழ்ச்சி நிரலையே நகர்த்திக் கொண் டிருக்கிறது. தமிழ்த் தரப்பு தமிழ்த் தேசிய அரசியலை கைவிட்டு சரணாகதி அரசியலை முன்னெடுக்கவேண்டும் என்பது தான் இந்த நிகழ்ச்சி நிரல். சம்பந்தன், சுமந்திரன், விக்கி ஆகிய முக்கூட்டுத் தலைமையும் முழுமை யாக அதனை ஏற்று நகர்வுகளை மேற் கொள்கின்றது.

அனந்தியும் அந்த நிகழ்ச்சி நிரலை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது மட்டுமல்ல அவர் தனது, கணவன் உள்ளிட்ட காணாமல் போனவர்களை கண்டறிய முயல்தலையும் கூட கைவிட்டு அவர்ளை மறந்துவிட வேண் டும் என்றும் எதிர்பார்க்கின்றது. அனந்தி அதனை விளங்கிக் கொள்ளவேண்டும் என்ற நோக்கிலேயே. டேவிட் கமரூன் யாழ் வந்தபோது அவரை சந்திக்க அனந்திக்கு அனுமதி மறுக்கப்பட்டதும், சம்பந்தன், சுமந் திரன், முதலமைச்சர் விக்கி ஆகியோரும் அவ்விடயம் பற்றி பேசாமல் விட்டதும் இந் நோக்கிலேயேயாகும்.

கூட்டமைப்பின் ஏனைய தலைவர்கள் இந்தியாவில் தங்கி நிற்பதனாலும் பதவிக் காக சம்பந்தன் தலைமையை பகைக்க முடியாததினாலும் தமிழ்த் தேசிய அரசியலை நீண்டகாலத்திற்கு முன்னரே கைவிட்டதனா லும். சம்பந்தன் தலைமைக்கு பின்னால் இழுபட்டுச்செல்லவே விரும்புகின்றனர். கூட் டமைப்பில் தமிழரசுக்கட்சிக்கும் ஏனைய கட்சிகளுக்கும் இடையேயான முரண்பாடு பதவிக்கானதே ஒழிய கொள்கைக்கானதல்ல. இதனால் கொள்கை வழி நின்று அனந்தி போராடும் போது அனந்திக்கு உதவ அவர் களினால் முடியவில்லை.

அனந்தியின் பின்னணி மிகவும் வேறானது. அவர் புலிகளின் தளபதி ஒருவரின் துணைவி. அவரினால் மக்களுக்கு தான் வழங்கிய வாக்குறுதியை கைவிட்டு ஒரு போதும் சம் பந்தன் தலைமையின் நிகழ்ச்சி நிரலிற்கு பின்னால் செல்லமுடியாது. இதனால் தான் தனக்கென ஒரு நிகழ்ச்சி நிரலை வகுத்துக் கொண்டு அவர் செயற்பட முனைந்தார். தேர்தலில் அவர் பெற்ற அதிகப்படியான வாக்குகள், காணாமல் போனோரின் விவ காரத்திற்கு தலைமை கொடுக்க முன்வந் தமையெல்லாம் அவருக்கு வலிமை நிலையை கொடுத்திருந்தன.

அனந்தி வடமாகாணசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட காலத்திலிருந்தே முரண் பாடு உருவாகத் தொடங்கி விட்டது. ஒவ்வொரு முக்கிய நிகழ்வின் போதும் அது வெளிப்படத் தொடங்கியது. முதலில் கமரூன் வருகையின் போது வெளிப்பட்டது. பொதுநலவாய மாநாட் டினை ஒட்டி பிரித்தானிய பிரதமர் டேவிற் கமரூன் யாழ்ப்பாணம் வந்த போது உண்மை நிலையை அவர் டேவிற் கமரூனிற்கு கூறிவிடக்கூடாது என்பதிலேயே சம்பந்தன் தலைமை கவனமாக இருந்தது. இடம் பெயர்ந்தோரின் போராட்டத்தை கமரூனின்



கண்ணுக்கு எட்டாத வகையில் கமரூன் வருவார் என மக்களை நம்பவைத்து மாவிட்ட புரத்தில் நடாத்தியது.

ஆனால் அனந்தி காணாமல் போனோர்க் கான போராட்டத்தை கமரூனின் கவனத்தை பெறுவதற்காக ஏனைய மன்னார் பிரஜைகள் குழு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட அமைப்புக்களுடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் நடாத்தினார். வெறும் 300 பேருடன் நடாத்திய போராட்டம் பாரியளவில் சர்வதேச கவனத்தை பெற்றது. பொலிசாரின் தடைகளையும் உடைத்துக்கொண்டு போராட் டம் முன்னேறியது. அனந்தியின் தனியான நிகழ்ச்சி நிரல் வெளிப்படையாகத் தெரிந் தது. அரசுக்கு எதிரான தமிழ் மக்களது கொதிநிலையை கமரூனிற்கு தெரியா மல் மூடிமறைக்க எடுத்த முயற்சிகள் தவிடு பொடியானது. அதனால் சம்பந்தன் தலைமை குழம்பிப்போனது. அனந்தி மீது விமர்சனங்களை முன்வைத்த போதும் அனந்தி அதனை பொருட்படுத்தவில்லை.

இரண்டாவது வெளிப்படுத்துகை ஜெனிவா விவகாரத்தில் ஏற்பட்டது. வடமாகாண சபை ஜெனிவா தொடர்பாக நிறைவேற்றிய தீர்மானமும் அனந்திக்கு உதவியாக அமைந்



தது. ஜெனிவாவிற்கு செல்வதற்கு அனந்தி தயாரானார். தமிழர்கள் மீது புரியப்பட்டது இனப்படுகொலைக்கு ஒப்பானது என்றும் சர்வதேச விசாரணை வேண்டும் என்றும் வடமாகாண சபையில் தீர்மானம் நிறை வேற்றியது. ஆனாலும் இந்தியாவின் அழுத் தம் காரணமாக அவற்றை மனித உரிமை பேரவை உறுப்பு நாடுகளிடம் வலியுறுத்த சம்பந்தன் தலைமை தயாராக இருக்க வில்லை. மாகாணசபை செயற்பட வழியமைக்க வேண்டும் என்கின்ற விடயங்களை கொண்ட கடிதத்தினை தான் மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகளிடம் ஜெனிவாவில் சமர்ப்பித்தது.

அனந்தி முதற்தடவை ஜெனிவாவிற்கு சென்ற போது சுமந்திரனும் சென்றார். அங்கு ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையின் அங்கத்துவ நாடுகளின் பிரதி நிதிகளை கூட்டாக சந்தித்த போது அனந் தியை பேசவிடவில்லை. புலித் தளபதியின் மனைவி என்பதால் அவர்கள் பேசுவதற்கு விரும்பமாட்டார்கள் என்றே அவருக்கு கூறப் பட்டது. ஆனாலும் சந்திப்புக்கு அனந்தி யும் அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு இனப்படுகொலை பற்றியோ அதற்கு சர்வதேச விசாரணை தேவை என்பது பற்றியோ, காணாமல் போனோர் விவகாரம் பற்றியோ சுமந்திரனால் எதுவும் முன்வைக்கப்பட வில்லை. மாறாக இலங்கை தொடர்பாக ஓர் தீர்மானம் நிறைவேற்றினால் போதும் அதன் உள்ளடக்கம் பற்றி அக்கறையில்லை என்ற நிலைப்பாட்டையே முன்வைத்திருந்தார்.

அனந்திக்கு ஒரே ஏமாற்றம். பிள்ளைக ளையும் ஊரில் தனித்து விட்டுவிட்டு காணாமல் போனோர் விவகாரத்தை பேசு பொருளாக்க ஜெனிவாவிற்கு சென்றால் சுமந்திரன் அதனையும் தடுத்துவிட்டாரே! என்பதால் தான் அந்த ஏமாற்றம்!. மறுபக்கம் கவலையும், கோபமும் ஊடகவியலாளர் மாநாட்டினைக்கூட்டி அந்த ஏமாற்றத்தையும் அதனால் ஏற்பட்ட கோபத்தையும் கவலை யையும் பகிரங்கமாக அவர் வெளிப்படுத் தினார். இனிமேல் தனித்தே தான் ஜெனிவா செல்வேன் என்றும் குறிப்பிட்டார்.

இந்த ஊடகவியலாளர் மாநாடு சுமந்திரனை சினப்படுத்தியது. கூட்டமைப்பின் வருங் காலத் தலைவருக்கே அனந்தி சவால்விடுக் கின்றார் என்ற வெப்பெரிச்சல் வேறு. வெகு ஜன அபிப்பிராயம் அனந்தியின் பக்கம் இருந்ததினால் உப்புச்சப்பற்ற ஒரு அறிக்கை யுடன் தனது வெப்பெரிச்சலை அடக்கிக் கொண்டார். ஆனால் அன்றே அனந்தியை கட்சியை விட்டு நீக்குவது என அவர் தீர்மானித்து விட்டாராம்.

இரண்டாவது தடவை அனந்தி எவருக்கும் அறிவிக்காமலே ஜெனிவா சென்றார். அங்கு பிரதான கூட்டத்தில் நான்கு தடவையும் துணைக்கூட்டங்களில் மூன்று தடவையும் உரையாற்றினார். பாதிக்கப்பட்ட பெண் என்ற வகையில் அவரது உரைகளுக்கு நல்ல மதிப்பிருந்தது. குறிப்பாக காணாமல்போனோர் விவகாரம், சிறுவர் துஷ்பிரயோகம், பெண்கள் துஷ்பிரயோகம், என்பவை பற்றி அழுத்தமாகப் பேசினார். இங்கு சம்பந்தன் தலைமைக்கு எரிச்சலாக இருந்த விடயம் நடைபெற்றது இனப்படுகொலை என்றும், அதற்கு சர்வதேச விசாரணை தேவை என்றும் அவர் அழுத்தமர்கக் கூறியது தான்.

ஜெனிவாவில் அனந்திக்கு பிரதான கூட் டத்தில் நான்கு தடவைகள் பேசுவதற்கு சந்தர்ப்பங்கள் கிடைத்தன. சுமந்திரன் விரும் பியிருந்தால் அவருக்கும் சந்தர்ப்பம் கிடைத் திருக்கும். ஆனால் அவர் அதற்கு முயற்சிக் கவில்லை. அங்கு அவர் உரையாற்றினால் கூட்டமைப்பின் இரகசிய நிகழ்ச்சிநிரல் வெளி யேதெரியவரும். அவர் இனப்படுகொலை என்றோ, அதற்கு சர்வதேச விசாரணை தேவை என்றோ ஒருபோதும் பேசியிருக்கமாட்டார். இவை பற்றிப் பேசாமல் அவரினால் தாயகம் திரும்பியிருக்க முடியாது .

அனந்தியின் தனிமையான நிகழ்ச்சிநிரல் வெளிப்படையாக பகிரங்கத்தில் பேசுபொருளா னது ஜெனிவா விவகாரத்தில்தான். அனந் தியின் துணிச்சல் தமிழ் மக்களை வெகுவாகக் கவர்ந்தது. தமிழ் அரசியலில் முதலாமவர் என்று கருதும் நிலைகூட ஏற்பட்டது. தமிழ் ஊடகங்களும் அவரது செயற்பாடுகளை வர வேற்று முக்கியத்துவம் அளித்தன.

சுமந்திரனின் எரிச்சல் உச்சத்திற்கு சென்றது. அனந்தியை கட்சியிலிருந்து நீக்குவோம் என தன்னைச் சார்ந்தவர்களுக்கு வெளிப்டையாக கூறத்தொடங்கினார். அனந்தியை கடுமையாக விமர்சிப்பதற்கு தருணத்தை எதிர்பார்த்தி ருந்தார். திருகோணமலையில் நடைபெற்ற கூட்டமைப்பின் கூட்டத்திற்கு முன்னரே பாரா ளுமன்ற குழுக்கூட்டத்தில் அனந்தி பற்றிய விமர்சனம் கடுமையாக சுமந்திரனால் முன் வைக்கப்பட்டது. கூட்டமைப்பிற்கென இரண்டு நிகழ்சிநிரல் இருக்கமுடியாது. அனந்தி தொடர் ந்து இப்படியே சென்றால் கட்சியிலிருந்து நீக்க வேண்டும் என்று கூறினார்.

திருகோணமலையில் இடம் பெற்ற கூட்டத் திற்கு கூட்டமைப்பின் அனைத்து மாகாண சபை உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப் பட்டது. பேராசிரியர் சிற்றம்பலம் உட்பட அனந்தியைச் சார்ந்தவர்கள் "முக்கியமாக உன்னைப்பற்றித்தான் விமர்சனங்கள் இடம் பெறும் அதற்கு நீ கட்டாயம் பதில் கூறவேண் டும்" எனவே கூட்டத்திற்கு கட்டாயம் செல்"

**அண்மையில் இடம்பெற்ற பாராளுமன்**
**பின்னர் திருகோணமலையில் இடம்பெ**
**அனந்தி தொடர்பான குற்றச்சாட்டுக்க**
**முன்வைத்திருக்கின்றனர். இதன் போ**
**பேச முன்வரவில்லை. உட்கட்சிப் போ**
**காட்டிக்கொள்ளும் சுரேஸ் பிறேமச்சந்**
**இருந்திருக்கின்றார். தமிழ்த் தேசிய வ**
**கொள்ளும் ரவிகரனும் மௌனம் காத்**

# ...சிய ...யிலிருந்து ...க்கப்படுவாரா?

சூரியவேந்தன்



என வற்புறுத்தினர்.

அனந்தி தனக்கு போக்குவரத்து ஒழுங்கு செய்து தருமாறு மாவையை வேண்டினார். மாவை செய்துகொடுக்கவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற ஏனையவர்களும் தமது வாகனத்தில் அனந்தியை அழைத்துச் செல்வதற்கு அக்கறைகாட்டவில்லை. ஐங்கரநேசன் ஊடகவியலாளர்களை தனது வாகனத்தில் அழைத்துச் சென்றபோதும் அனந்தியை அழைக்கமுன்வரவில்லை. அனந்தி கூட்டமைப்புக்குள் தனித்து விடப்படுகிறார் என

> **...பாராளுமன்ற குழுக்கூட்டத்திலும் ...யில் இடம்பெற்ற கட்சிக் கூட்டத்திலும் ...றச்சாட்டுக்களை சம்பந்தனும் சுமந்திரனும் ... இதன் போது எவருமே அனந்திக்காக ...ட்கட்சிப் போராட்டத்தை நடாத்துவதாக ...் பிறேமச்சந்திரனும் மௌனமாகவே ...த் தேசிய வாதியாக தன்னைக் காட்டிக் ...ளனம் காத்தார்.**

"இது நம்தேசம்" வெளியிட்டிருந்த கட்டுரையைப் பார்த்த ஐங்கரநேசன் "அவ்வாறு தனித்து விடமாட்டோம்" என அனந்திக்கு கூறியிருந்தார். ஆனால் அந்த வாக்குறுதி காற்றில் போனது. அனந்தியுடன் இணைத்து தாங்களை அடையாளம் காட்டுவது சம்பந்தன் தலைமை தங்களையும் புறக்கணிக்க வழி செய்யும் என நினைத்ததினாலேயே அனந்தியை தனித்து தவிக்கவிட்டனர்.

சொந்தச்செலவில் வாடகைக்கு வாகனத்தை அமர்த்தி அதிகாலையிலேயே எந்தவித பாதுகாப்பும் இல்லாமல் தனித்து திருகோணமலைக்கு பயணமானார்.

திருகோணமலையில் கூட்டம் ஆரம்பமான போது குத்துவிளக்கு ஏற்றும் வைபவம் முதலில் இடம்பெற்றது. அதற்கு அனந்தி அழைக்கப்படவில்லை. போனஸ் ஆசனத்தில் நியமனம் பெற்ற மாகாணசபை பெண் உறுப்பினரே அழைக்கப்பட்டார். கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஒரு வேண்டாத விருந்தாளியாகவே அனந்தியைப் பார்த்தனர். பலரது முகங்களில் ஒரு நக்கல் சிரிப்பு இருந்தது.

அனந்தி தான் பேசவேண்டிய விடயங்களை முன்கூட்டியே தயாரித்து பென் ரைவ் (pen drive) ல் எடுத்துச் சென்றிருக்கிறார். ஆனால் பயண அவசரத்தில் அதன் பிரதிகளை எடுக்க முடியவில்லை. அதனால் கூட்டத்தின் இடை நடுவில் ஐங்கரநேசனிடம் பிரதி எடுத்து வருவதாக கூறிவிட்டு வெளியே சென்றார். அவர் திரும்பிவந்தபோது சுமந்திரன் பேசிக் கொண்டிருந்தார். உம்மைப்பற்றித் தான் கருத்துக்கள் கூறியதாக குறிப்பிட்டார். அனந்தி தான் தற்போது வந்திருக்கின்றேன் உங்கள் கருத்துக்களை திருப்பிக்கூறுங்கள் எனக் கேட்டார் சுமந்திரனும் தான் திரும்பிக் கூறுவதாக கூறி "ஜெனிவாவில் கூட்டமைப்பின் நிலைப்பாட்டிற்கு மாறாக நீர் உரையாற்றியிருக்கின்றீர். கஜேந்திரகுமார் அணியின் கருத்துக்களைத் தான் நீர் முன்வைத் திருக்கின்றீர் இதனை கட்சியால் ஏற்கமுடியாது" என்றார்.

அவ் வேளையில் கூட்டத்திலிருந்த வடமாகாணசபை உறுப்பினர் ஆனோல்ட்டும் வேறு ஒருவரும் "கஜேந்திரகுமாரின் கருத்துக்கள் மட்டுமல்ல அனந்தியே கஜேந்திரகுமார் அணியில் தான் இருக்கின்றார்" என்றும் கூறி சுமந்திரனுக்கு வக்காளத்து வாங்கியுள்ளனர்.

அனந்தி பதில் அளிக்கும் போது நான் புலித் தளபதியின் மனைவி என்பதால் சர்வதேசப் பிரதிநிதிகள் என்னை புறக்கணிப்பர் என்பது உண்மையல்ல. நான் அமெரிக்கா சென்ற போது வெளிவிவகாரப்பிரிவின் பிரதி நிதிகள் என்னை அழைத்துப் பேசியதுமல்லாமல் எனது கருத்துக்களையும் அக்கறையாக கேட்டனர். எனக்கு அரசியல் இரண்டாவது பட்சமானவிடயம். காணாமல் போனோர் விவகாரமே எனக்கு முக்கியமானது. அதனை சர்வதேச மட்டத்தில் பேசுபொருளாக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிகிடைக்க வேண்டும் என்பதற்காகவே என்னுடைய சிறிய பிள்ளைகளையும் தவிக்க விட்டுவிட்டு நான் ஜெனிவா சென்றேன். அங்கு நான் எனது கருத்துக்களை கூறுவதற்கு சுமந்திரன் சந்தர்ப்பம் தரவில்லை , அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் பற்றி ஒரு வார்த்தையும் தன்னால் பேசமுடியவில்லை. இதுதான் நடக்கும் என முன் கூட்டியே தெரிந்திருந்தால் பிள்ளைகளை தவிக்கவிட்டு நான் சுமந்திரனுடன் ஜெனிவா சென்றிருக்கமாட்டேன் எனக்குறிப்பிட்டார்.

"இரண்டாவது தடவைகாணாமல் போனோர் விவகாரத்தை முன்வைக்கவேண்டும் என்பதற்காகத்தான் நான் தனித்துச்சென்றேன். கூட்டமைப்பு தேர்தலின் போது முன்வைத்த கொள்கைகளுக்கு எதிராகவோ வடமாகாண சபையின் தீர்மானங்களுக்கு எதிராகவோ நான் எதுவும் பேசவில்லை" என்றார்.

கட்சி ஜெனிவாவிற்கு சமர்ப்பித்த கடிதப்பிரதி எங்களுக்கு தரப்படவில்லை. அதனை முன்னரே எமக்கு தந்திருந்தால் அதையும் உள்வாங்கி என்னால் உரையாற்றியிருக்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

சுமந்திரன் அனந்தியின் கருத்துக்களை தர்க்கரீதியாக நிராகரிக்காது கட்சியின் நிலைப்பாட்டிற்கு புறம்பாக நீர் நடந்துகொண்டிருக்கின்றீர் அதனை ஏற்கமுடியாது எனக் கோபமாக குறிப்பிட்டார். இனப்படுகொலை சர்வதேச விசாரணை, தென்னாபிரிக்க பேச்சு வார்த்தை பற்றி எவரும் வாய் திறக்கக் கூடாது என்றும் குறிப்பிட்டார்.

சம்பந்தன் பேசும்போதும் சுமந்திரனின் கருத்துக்களை ஆதரித்தே பேசினார். இருவருடைய பேச்சுக்களும் முன்னரே கலந்துரையாடி முடிவெடுத்த பின் பேசியவையாக இருந்தன. ஜெனிவாவில் ஒரு கட்சியிலிருந்து இரண்டு கருத்துக்களை முன் வைக்கக்கூடாது இரண்டு அணுகு முறைகளை பின்பற்றமுடியாது என சம்பந்தன் குறிப்பிட்டார். நாம் மிகவும் சிரமப்பட்டு சர்வதேசத்தை எமக்கு சார்பான ஒரு நிலைப்பாட்டை எடுக்கவைத்திருக்கின்றோம். அதனை ஒருவரும் குழப்பக்கூடாது என்றும் குறிப்பிட்டார்.

சம்பந்தனும், சுமந்திரனும் அனந்திக்கு எதிராக கருத்துக்களை முன்வைத்தபோது சபையிலிருந்த ஒருவர் கூட அனந்திக்கு சார்பாக பேசமுன்வரவில்லை பலர் கொடுப்புக்குள் சிரித்துக்கொண்டனர். தனித்து விடப்பட்ட நிலமை, தொடர்ச்சியான அவமானப் படுத்துகை, தன்னுடைய கடமைகளுக்கு தடைகள் வருதல் என்பவற்றினால் மனம் தளர்ந்து பேசும் போது அனந்தியால் அழ வேண்டியநிலை ஏற்பட்டது. இந்த நிலை கண்டு அனுதாபப்படுவதற்கு கூட சபையில் எவரும் இருக்கவில்லை.

மதிய உணவு நேரத்தின் பின்னர் அனந்தி சபையிலிருந்து வெளியேறி கோணேசர்



கோயிலுக்கு சென்றார். அங்கு கோணேசர் பெருமானிடம் எல்லாவற்றையும் முறையிட்டார். யாழ் திரும்பும்போது கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்கள் போலல்லாது தனது வாகனத்தில் வடமாகாணசபை உறுப்பினர் இருவரையும் ஏற்றிவந்தார்.

யாழ்ப்பாணத்தில் அனந்தி தனது கோபத்தையும், கவலையையும் காட்டிக்கொள்ளவில்லை. ஆனாலும் ஊடகங்களில் திருகோணமலை கூட்ட நிகழ்வுகள் அனந்தி அழுதது உட்பட வெளியில் வந்தன. அதனால் கூட்டமைப்புத் தலைமைகள் மீது மக்கள் கடும் சீற்றமடைந்தனர். கடுமையான விமர்சனங்களை முன்வைத்தனர். பல இணையத் தளங்கள் சுமந்திரன் சம்பந்தனுக்கு எதிராக கடுமையான விமர்சனங்களை முன்வைத்து கட்டுரைகளை வெளியிட்டன. அந்நிலையில் சுமந்திரன் மறுத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார். சாவகச்சேரியில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் குத்து விளக்கு ஏற்றுவதற்கு அனந்தியும் அழைக்கப்பட்டார். தொடர்ந்து இடம் பெற்ற சுமந்திரனின் வடமராட்சிக் கிளை திறப்புவிழா, சுரேஷ்பிறேமச்சந்திரனின் நீர்வேலிக்கிளைத் திறப்புவிழா என்பவற்றிற்கும் அனந்தி அழைக்கப்பட்டார்.

அனந்தியை நீக்கவேண்டும் என்பதில் சம்பந்தன் தலைமை அக்கறையாக இருந்தாலும் அனந்திக்குள்ள மக்கள் செல்வாக்கு கண்டு அஞ்சுகின்றது. அனந்தி ஒரு பெரிய வாக்குவங்கி அதனை இழப்பது கட்சியை பலவீனப்படுத்திவரும் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

சம்பந்தன் தலைமைக்குள்ள இக்கட்டான நிலை இதுதான். அனந்தியை கட்சியில் வைத்திருக்கவும்முடியாது. வெளியேற்றவும் முடியாது. பேராசிரியர் சிற்றம்பலம் அனந்தி கட்சியிலிருந்து வெளியேற்றப்படுவதை நாம் அனுமதிக்கமாட்டோம் முடிந்தால் சம்பந்தன் தலைமை செய்துபார்க்கட்டும் எனச்சவால்



விடுத்துள்ளார். வரும் பாராளுமன்றத் தேர்தலில் காணாமல்போனோர் விவகாரத்தை மேலும் பேசுபொருளாக்குவதற்காக வேட்பாளராக நிற்பதற்கு அனந்தி விரும்பக்கூடும். ஆனால் சம்பந்தன் தலைமை அதற்கு இடங்கொடுக்கமாட்டாது.

தற்போது சுமந்திரன் அனந்தி அரசாங்கத்தின் ஆள் என ஒரு பிரச்சாரத்தை கட்டவிழ்த்துவிட்டுள்ளார். அனந்தியை நீக்கும் போது மக்களுக்கு காரணம் கூறவேண்டும் என்பதற்காகவே இந்த கட்டவிழ்ப்பு இடம் பெறுகின்றது. அனந்தி சுமந்திரனைப் போல மகிந்தர் அணியுடன் கிரிக்கெற் விளையாடவும் இல்லை. ஜெனிவாவில் சிறீலங்கா தூதரகத்திற்கு சென்று காட்டிக் கொடுக்கவும் இல்லை.

ஒரு பெரிய கட்சிக்குள் தனிமரமாக நிற்பது கஷ்டம்தான் அங்கு தொடர்சியான அவமானங்களை சந்திக்கவேண்டிவரும். அனந்தி சளைக்காது அதற்கு முகம் கொடுத்துத்தான் ஆகவேண்டும். இது வரலாறு அனந்திக்கு இட்ட கட்டளை.

குறிப்பாக அனந்தி இரண்டு விடயங்களில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

முதலாவது முக்கியமான அரசியல் நிகழ்வுகள் இடம்பெறும் போது தமிழ் மக்களது நலன் அடிப்படையில் நின்று தனது கருத்துக்களை அறிக்கைகளாக வெளியிட தயங்கக்கூடாது. சம்பந்தன் தலைமை இது விடயத்தில் கட்டுப்பாடுகளை விதிக்கும் என்பது உண்மைதான். அவை எவற்றையும் கணக்கில் எடுக்கக்கூடாது.

இரண்டாவது அரசியல் என்று வந்துவிட்டால் நல்லவர்கள், நேர்மையானவர்கள், கொள்கைப்பற்றுள்ளவர்கள் காண்பது கடினமாகவிருக்கும், இவற்றையிட்டு ஒரு போதும் மனந்தளரக்கூடாது, பகிரங்கத்தில் அழுவது ஒரு அரசியல் போராளிக்கு அழகல்ல. மலையே சரிந்து விழுந்தாலும் மக்களது நிரந்தர அரசியல் விடுதலைக்காக அதனை எதிர்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும்.

**செம்பாட்டான்**

இந்தியத் தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சி வெற்றி பெறும் என்பது எதிர்பார்த்த ஒன்று தான். ஆனால் பெருவெற்றி கிடைக்குமென்பது எதிர்பார்க்கப்படவில்லை. குறிப்பாக பாரதீய ஜனதாக்கட்சி தனித்து அறுதிப் பெரும் பான்மையைப் பெறும் என்பதும் எதிர் பார்க்கப்படவில்லை. பாரதீய ஜனதாக் கூட்டணிக்குத்தான் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கும் என்று எதிர்பார்க் கப்பட்டது.

காங்கிரஸ் இரட்டை இலக்கத்துடன் சுருங்கிக்கொண்டது. இது காங்கிரஸிற்கு வரலாற்றில் கிடைக்காத தோல்வி.

வடக்கே ஆதிக்க நிலையிலிருந்த சாதிக் கட்சிகளும் வீழ்ச்சி கண்டுள்ளன. உத்தரப் பிரதேசத்தில் முலாயம்சிங்யாதவின் சமாஜவாதிக் கட்சியும், மாயவதியின் பகுஜன் சமாஜக் கட்சியும் படுதோல்வி அடைந் துள்ளன. பகுஜனசமாஜக் கட்சிக்கு ஒரு ஆசனம் கூட அங்கு கிடைக் கவில்லை.

சுதாகரித்துக் கொண்டு மீண்டும் எழுச் சியடைந்தது. ராகுல் காந்தியின் கவர்ச்சி பலவீனப்பட்டு போயிருப்பதால் அவர் காங்கிரஸின் மீள் எழுச்சிக்கு உதவுவார் எனக் கூறமுடியாது. நேரு குடும்பத்தில் நேருவிற்கு பின்னர் ஆண் வாரிசுகள் பெரியளவிற்கு சோபிக்கவில்லை. ராஜீவ் காந்தி, ராகுல் காந்தி இருவருமே சோபிக் காத தலைவர்களாகவே இருந்துள்ளனர். சஞ்சய்காந்தி சிறிது சோபித்தார் என்பது உண்மைதான். அதனை ஒழுங்காக பரீட்சிக்க மரணம் அவரை விட்டுவிட வில்லை. ஆனால் பெண்கள் நிலை வேறு. இந்திராகாந்தி, சோனியா காந்தி இருவரும் சோபித்துள்ளனர். எதிர்காலத் தில் பிரியங்கா வந்தால் காங்கிரஸ் மீண்டும் சோபிக்கக்கூடும்.

தமிழ்நாட்டு தேர்தல் முடிவுகளை பொறுத்தவரை கருத்துக் கணிப்புகள் பெரியளவிற்கு வெற்றியளிக்கவில்லை. அவை ஜெயலலிதா அதிக ஆசனங்கள்ளைப் பெற்றுக் கொள்வார் எனக் கூறினாலும்

> **நேரு குடும்பத்தில் நேருவிற்கு பின்னர் ஆண் வாரிசுகள் பெரியளவிற்கு சோபிக்கவில்லை. ராஜீவ் காந்தி, ராகுல் காந்தி இருவருமே சோபிக்காத தலைவர்களாகவே இருந்துள்ளனர். சஞ்சய்காந்தி சிறிது சோபித்தார் என்பது உண்மைதான். அதனை ஒழுங்காக பரீட்சிக்க மரணம் அவரை விட்டுவிடவில்லை. ஆனால் பெண்கள் நிலை வேறு. இந்திராகாந்தி, சோனியா காந்தி இருவரும் சோபித்துள்ளனர். எதிர்காலத்தில் பிரியங்கா வந்தால் காங்கிரஸ் மீண்டும் சோபிக்கக்கூடும்.**

கிருஸ்ணனின் தனிப்பட்ட செல்வாக்கு காரணமாகவும் பா.ஜ.க வென்றிருக் கின்றது. நீண்ட நாட்களுக்கு பின்னர் தமிழ் நாட்டில் பாரதீய ஜனதாக் கட்சிக்கு நேரடியாக ஒரு ஆசனம் கிடைத்திரு க்கின்றது. புதுச்சேரியில் தி.மு.க, அ.தி.மு.க விற்கு ஆதரவு குறைவு. காங்கிரஸிற்கு சற்று அதிகம். அங்கும் காங்கிரஸில் இருந்து பிரிந்து என்.ஆர். காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டவரே வெற்றி பெற்றிருக் கின்றார்.

தீர்மானத்தில் பிரதமருக்கு முக்கிய பொறுப்பு இருந்தாலும் அதிகளவில் நடை முறைப்படுத்துபவர்கள் சவுத்புளொக்கும், வெளிவிவகார அமைச்சருமே. இதில் சவுத்புளொக்கின் பங்கு மிக அதிகமா னது. அது இதுவரை காலம் பின்பற்றிய கொள்கைகளிலிருந்தும் . அணுகுமுறை களிலிருந்தும் மாறுபடுவதற்கு பெரியள விற்கு அனுமதிக்காது. வலுவான பிரதமர் மட்டும் தான் தீவிர அழுத்தம் கொடுத்து சவுத்புளொக்கினை தனக்கு சார்பாக



# இந்தியத் தேர்தல் முடிவுகள்

## ஈழத் தமிழர்களுக்கு சாதகமாக அமையுமா?

எவரும் எதிர்பார்க்காத வகையில் அங்கு பாரதீய ஜனதாக்கட்சி மொத்தம் 80 ஆசனங்களில் 71ஐப் பெற்றுள்ளது.

இவை தவிர பல மாநிலங்களில் பாரதீய ஜனதாக்கட்சி அனைத்து ஆசனங்களை யும் தானே கைப்பற்றியுள்ளது. குஜராத், புதுடில்லி, இமாலயப்பிரதேசம் என பல மாநிலங்களில் அனைத்து ஆசனங்களும் அதற்கு கிடைத்துள்ளன.

நரேந்திரமோடி பற்றி கட்டியெழுப்பப்பட்ட கவர்ச்சியான விம்பம், குஜராத்தின் அபி விருத்தி, பத்து வருடங்கள் தொடர்ந்து காங்கிரஸ் ஆட்சியில் இருந்தமையினால் மாற்றம் வேண்டும் என மக்கள் கருதிய நிலமை, காங்கிரஸின் ஊழல், குடும்ப ஆதிக்கம், ராகுல் காந்தி மக்களை போதிய ளவில் கவராமை எனப்பல காங்கிர ஸின் தோல்விக்கு காரணங்களாக இருந்திருக்கின்றன.

பொதுவாக இந்திய மத்தியதரவர்க்க இளைஞர்கள் நரேந்திர மோடியினால் கவரப்பட்டிருந்தனர். அவர்களின் வலு வான பங்களிப்பு வெற்றிக்கு காரணமாக இருந்திருக்கின்றது. மோடிக்கு இந்து மதசார்பு முகம் இருந்த போதும் ஏனைய மதத்தவர்கள். சிறுபான்மையினர் என் போரும் ஆதரித்தமை தான் இங்கு முக்கி யமாக கவனிக்கப்படவேண்டிய விடயம்

இந்த ஆதரவு நிலையினை மோடி தொடர்ந்து தக்கவைப்பாரா? என்பதை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும். குஜராத் அனுபவம் அவருக்கு வலுவான வழிகாட்டலைக் கொடுக்கும் என்றே நம்பலாம்.

காங்கிரஸ் முன்னரும் மூன்று தடவை வீழ்ந்திருக்கின்றது. ஆனால் தன்னை

தி.மு.க.வும் கணிசமான ஆசனங்களைப் பெறும் எனக் கூறியிருந்தது. பா.ஜ.க கூட்டணிக்கு 5 வரை ஆசனங்கள் கிடைக் கும் என்றும் கூறியிருந்தது.

இந்தக்கருத்துக் கணிப்பினால் கடைசி நேரத்தில் ஜெயலலிதாவும் சற்று ஆடிப் போயிருந்தார். பல அமைச்சர்கள் தங்க ளுக்கான பிரதேசங்களில் வெற்றிகள் கிடைக்காவிட்டால் பதவிகள் பறிபோகும் என்ற அச்சத்திலும் இருந்தனர். ஜெயல லிதாவும் ஒருவித பதட்டத்துடன் ஓய் வெடுக்க சென்றிருந்தார். ஆனால் முடிவுகள் ஜெயலலிதா ஆரம்பத்தில் கருதியதற்கு கிட்டத்தட்ட பொருத்தமாக வந்தன. ஜெயலலிதா ஆரம்பத்தில் 40உம் நமக்கே என்ற கர்வத்தில் இருந்தார். அதில் 37 ஆசனங்கள் கிடைத்தமை பிரமிக்கத்தக்க வெற்றியே! அதுவும் கூட்டணி எதுவும் அமைக்காமல் தனித்து போட்டியிட்டு பெருவெற்றியீட்டியமை அவ ரைப் பொறுத்தவரை மிகவும் மகிழ்ச் சிக்குரியதே. தமிழ் நாட்டில் கூட்டணி தான் வெற்றிபெறும் என்ற மரபை மாற்றி தனித்தும் வெற்றிபெற முடியும் என்பதை அவர் அழுத்தமாக பதித்திருக்கிறார்.

தமிழ் நாட்டில் இரண்டு தொகுதிகளில் மட்டும் அவருக்கு தோல்வி கிடைத்தி ருக்கிறது. தர்மபுரமும், கன்னியாகும ரியுமே அத் தொகுதிகள். தர்மபுரத்தில் வன்னியர் சாதி வாக்குகள் அதிகமாக இருந்தமையினால் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த அன்புமணி ராம தாஸ் வெற்றி பெற்றிருக்கின்றார். கன் னியாகுமரியில் பிராமணர் வாக்குகள் அதிகமாக இருந்தமையினாலும், ராதா

இங்கு இந்தியத் தேர்தல் முடிவுகளும் தமிழ் நாட்டுத் தேர்தல் முடிவுகளும் ஈழத்தமிழ் மக்களுக்கு சாதகமானதா? என்ற கேள்வி எழுகிறது. தமிழ் மக்க ளுக்கு சாதகமான நிலை இரண்டு சந்தர்ப்பங்களில் மட்டும் தோன்றலாம். இலங்கையில் சீனாவின் அதிகரித்த பிரசன்னம் தொடர்பாக இந்தியா மெத் தனப் போக்கினைக் கைவிட்டு தீவிர நிலைப்பாட்டை இலங்கை தொடர்பாக எடுத்தல், . இரண்டாவது ஈழத் தமிழர் விவகாரம் தொடர்பாக தமிழ்நாடு வலு வான அழுத்தத்தினைக் கொடுத்து அத னூடாக ஒரு தீவிர நிலைப்பாட்டினை எடுத்தல்.

முதலாவது விடயத்தைப் பொறுத்த வரை இலங்கையில் சீனாவின் அதிக ரித்த பிரசன்னம் இந்தியாவிற்கு பூகோள நலன்களுக்கு அப்பால் ஒரு தேசியப் பாதுகாப்பு பிரச்சினையும் கூட. ஆனால் காங்கிரஸ் அரசாங்கம் இது வரை இது விடயத்தில் மெத்தனப் போக்கினையே கடைப்பிடித்தது. மோடி அரசாங்கமும் அவ்வாறான நிலையைப் பின்பற்றுமா? என்பது தான் கேள்வி.பாரதீய ஜனதாக்கட்சி சற்று தீவிரமான இந்திய தேசிய வாதக் கட்சி, அதுவும் தேசிய பாதுகாப்பினைப் பொறுத்த வரை அது தீவிர அக்கறையுள்ள கட்சி. எனவே காங்கிரஸ் போல இது விடயத்தில் மெத்தனப் போக்கினைக் கடைப்பிடிப்பது அதற்கு கடினம். சற்று தீவிர நிலைப்பாட்டினை எடுப்பது பற்றி அது யோசிக்கலாம். காங்கிரஸ் இலங்கைக்கு பின்னால் அது இழுபட்டுச் சென்றது போல பாரதீய ஜனதா செல்லப் போவதில்லை.

எனினும் வெளிவிவகாரக் கொள்கைத்

திருப்புவார். இந்திராகாந்தி அவ்வாறாக வலுவான நிலைப்பாட்டை எடுத்து தனக்கு சார்பாக திருப்பினார் எனக், கூறப்படு கின்றது.

சவுத்புளொக்கினை விட வெளிநாட்டு அமைச்சரிலும் இது தங்கியிருக்கின்றது. சற்றுக்கராரான வெளிநாட்டமைச்சர்கள் தீவிர நிலைப்பாட்டினை எடுப்பது வழக் கம். பெரிய நாடுகளில் பிரதமருக்கு அடுத்த படியாக உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்கள் வெளிநாட்டமைச்சர்களே! சுஸ்மா சிவராஜ் வெளிநாட்டமைச்சராக்கப் பட்டுள்ளார். என ஒரு கதை அடிபடுகின்றது. அவர் இலங்கை ஜனாதிபதியின் வலுவான நண்பர். இவர் தமிழ் மக்களுக்கு சார்பாக நடந்து கொள்வார் என்பது சந்தேகமே. போர் முடிவடைந்த பின்னர் இலங்கை வந்த எதிர்க்கட்சி நாடாளுமன்ற குழுவிற்கு தலைமை வகித்தவர் இலங்கைக்கு நற் சான்றிதழ் கொடுத்துவிட்டே சென்றிருந் தார்.

இவற்றை விட இந்தியா முழுவதும் பொதுவாகக் கட்டியெழுப்பப்படுகின்ற அர சியல் அபிப்பிராயமும் இங்கு முக்கிய மானது. தமிழ் நாட்டில் மாத்திரம் ஈழத் தமிழ் மக்களுக்கு சார்பான அபிப்பிராயம் இருப்பது போதுமானதல்ல. தமிழ் நாடு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் ஈழத்தமிழர் விவகாரம் போதியளவிற்கு பேசு பொரு ளாக்கப்படவில்லை. அங்குள்ள அரசியற் தலைவர்களிடம் ஈழத்தமிழர்கள் பற்றி தவறான அபிப்பிராயங்களும் உண்டு. பீகாரின் முக்கிய கட்சியான ராஜ்ரிய ஜனதாதள் கட்சியின் தலைவர் லாலு பிரசாத் யாதவ் ஒரு தடவை ஈழத்தமிழர்

(23ஆம் பக்கம் பார்க்க)

# எங்களை ஏசி வளர்க்கவேண்டாம்

மனநல ஆலோசகர்
- அஸ்ஹர் அன்ஸார்



கம்புகளும், கற்களும் எமது எலும்புகளை உடைத்துவிடும், எமது தசைகளை காயப்படுத்திவிடும் எமது தோலில் அழிக்கமுடியாத காயங்களைக் கூட வைத்துவிடும். என்பதை நாம் தெரிந்து வைத்திருக்கிறோம். சொற்களின் தாக்குதல்களால் நோவை, துயரத்தை அனுபவித்துக் கொண்டிருப்போருக்கு உடலுக்கு ஏற்படும் காயங்களை விட மனதிற்குள் ஏற்படும் அதிர்வுகள் பாரமானவை. தாங்கிக்கொள்ள முடியாதவை என்பதையும் நன்றாகவே அறிந்திருக்கிறார்கள்.

சொற் துஷ்பிரயோகத்தால் ஏற்படும் தழும்புகள் வருடக்கணக்கில் மனதில் மங்காமல் இருந்து மனதில் வேதனையை, துயரத்தை தந்தவாறே இருக்கும். இந்த உளவியல் தழும்புகள் மனிதர்களை நிச்சயமற்றவர்களாக அவர்களது பெறுமதியை உணர்ந்துகொள்ள முடியாதவர்களாக திறன்களை வெளிப்படுத்த முடியாதவர்களாக ஆக்குவதற்கு தடைகாரணியாக அமைந்துவிடும்.

'நான் குழந்தைப் பருவத்தில் இருக்கும் போது எனது தந்தை அடிக்கடி என்னை ஏசுவார், எரிந்து விழுவார், உறவினர்கள், நண்பர்கள் முன்பு கேலி செய்வார். மற்றவர்கள் செய்தவற்றையும் அடைந்தவற்றையும் அடிக்கடி சொல்லிக்காட்டுவார். அதிகமான சந்தர்ப்பங்களில் என்னை சிறுமைப்படுத்தியே பேசுவார். நான் ஒரு பின்னடைந்த தாழ்வுணர்வு கொண்ட ஒருவன் என்றே என்னைக் கருதிவந்தார்.

என்னை எவ்வளவு கேலி செய்தாரோ அந்தளவுக்கு பிடிவாதம் உடையவனாக நான் மாறினேன். என்னுடைய கல்வியில் நான் ஆர்வமிழந்தேன். தாழ்வு மனப்பான்மை என்னுள் வளர ஆரம்பித்தது. நான் கடமைகளை தட்டிக் கழிப்பவனாகவும் கோழைத்தனமாக பின்னடைந்து ஒதுக்குபவனாகவும் மாறிச் சென்றேன். எனது பொறுப்புகளை ஏற்கவும் அவற்றை நிறைவேற்றவும் விரும்பவில்லை. என் தந்தையின் ஓயாத இம்சை காரணமாக என் ஆளுமை படிப்படியாக உடைந்து போக ஆரம்பித்தது. இன்று நான் சோம்பேறியாகவும் தனிமைப் பட்டவனாகவும் ஆகியிருக்கிறேன்.'

'எனக்கு பாடசாலைக்கு போகவேண்டும், படிக்கவேண்டும், மற்றவர்களோடு சேர்ந்து வாழவேண்டும் என்ற ஆசையோ, தேவையோ இல்லாதவனாக, மனதில் சஞ்சலத்தையும் கவலையையும் சுமந்து வாழும் ஒருவனாகவே என்னைப் பார்க்கிறேன். நான் சிறு வயதிலிருந்தே எனக்குத் தேவையான அன்பு அரவணைப்பு கிடைக்கப்பெறாதவனாகவும் சில சமயம் நெருக்கமான உறவினர்களால் கூட ஏற்றுக் கொள்ளப் படாதவனாகவும் இருப்பதாகவே எண்ணுகிறேன்.

என் தோற்றத்திலும் சில குறைபாடுகள் இருப்பதாக எனது குடும்பத்தில் உள்ளவர்கள் பல தடவைகள் சுட்டிக் காட்டியிருக்கின்றனர். உண்மையிலேயே என் கண் பார்வையிலும் ஒரு குறைபாடு இருக்கிறது. நான் ஒன்றை எழுதும் போதும் வாசிக்கும் போதும் என் பார்வையை மிகவும் அண்மையிலேயே வைத்துக்கொள்வேன். புத்தகம் வாசிக்கும்போது என் கண்களுக்கு அண்மையிலே வைத்துக்கொள்வேன். நான் என்ன குற்றம் செய்தேனோ என்று எனக்கு சொல்ல முடியாவிட்டாலும் வீட்டிலும் வெளியிலும் சில சமயம் பாட சாலையிலும் நான் கடுமையாக விமர் சிக்கப்பட்டிருக்கிறேன். என்னால் தாங் கிக்கொள்ளவே முடியாத பல வார் த்தைகளினால் ஏச்சுக்கும் பேச்சுக்கும் உள்ளாகியிருக்கிறேன். எனது பார்வையில் குறைபாடு இருப்பதனால் 'குருடன்' என்று சிலர் சொல்வதுண்டு. அவ்வாறே திருடன், ரவுடி, பிரயோசனமில்லாதவன், நாசமாய்ப் போனவன், மடையன், பைத்தியக்காரன், கெட்டவன், பிச்சைக்காரன், துப்பரவற்றவன், பொய்யன், மூதேவி, கழுதை, நாய், எருமை மாடு, உனது அழகைப்பார், ஷைத்தான் போன்ற வார்த்தைகளாலும் பல தடவைகள் ஏச்சுக்குள்ளாகி யிருக்கி றேன்.

இதனால் நான் மனம் நொந்து போய் சமூகத்தோடு சேர்ந்து செயற்பட முடியாதவனாகவும் இருக்கிறேன். பலர் என்னை நேசித்தாலும் அந்த நேசத்தை ஏற்றுக்கொள்ள முடியாத நிலைக்கும் நான் தள்ளப்பட்டிருக்கிறேன். எந்தவொரு தாயும் தந்தையும் அவ்வாறு சமூகத்திலுள்ள வளர்ந்த எவரும் பிள்ளைகளை ஏசி அதட்டி வளர்க்க வேண்டாம் என நான் தாழ்மையாக கேட்டுக்கொள்கிறேன். நானிருப்பது போன்று பிள்ளைகள் எவரும் ஆகக்கூடாது என்று எதிர்பார்க்கிறேன்.

> **உடல் தண்டனைகளை விட சொற்தண்டனை குழந்தைகளின் உள்ளத்துக்கு கடுமையான பாதிப்பை கொண்டுவரும். சொற்களால் தண்டிப்பது குழந்தை பருவத்திலேயே அவர்களது வளர்ச்சி விருத்தியை அப்படியே நசுக்கி இயல்பில் பயத்தையும் அமைதியற்ற தன்மையையும் ஏற்படுத்திவிடும்.**

இப்படி சொற்களின் இரைக்கு உள்ளாகி மனப்பாதிப்புகளால் அவதியுறும் இரண்டு மாணவர்களின் எண்ணங்களையும் எதிர்பார்ப்புகளையும் இங்கு குறிப்பிட விரும்புகிறோம். 'தீயால் சுட்ட புண்கூட ஆறிவிடும். ஆனால், வெறுப்பு கொண்டு தீட்டிய சொற்கள் விதைத்த துன்பம் ஆறவே ஆறாது' என திருக்குறள் சொல்லியிருப்பது இந்த நேரத்தில் நினைவிற்கு வரலாம்.

உடல் தண்டனைகளைவிட சொற் தண்டனை குழந்தைகளின் உள்ளத்துக்கு கடுமையான பாதிப்பை கொண்டு வரும். சொற்களால் தண்டிப்பது குழந்தை பருவத்திலேயே அவர்களது வளர்ச்சியை, விருத்தியை அப்படியே நசுக்கி இயல்பில் பயத்தையும் அமைதியற்ற தன்மையையும் ஏற்படுத்திவிடும். அவர்களுக்குள் ஏற்படும் உணர்ச்சித் துடிப்புகள் கடுமைமிக்கதாக மாறுவதுடன் நீண்டகாலத்திற்கு அவை அவர்களது வாழ்வில் தாக்கம் செலுத்த ஆரம்பிக்கும். வஞ்சகமான சொற்களுக்கு இரையாக்கப்பட்டவர்கள் அதனால் ஏற்படும் உணர்ச்சித் துடிப்புகள் கடுமை மிக்கதாக மாறுவதுடன் நீண்டகாலத்திற்கு அவை அவர்களது வாழ்வில் தாக்கம் செலுத்த ஆரம்பிக்கும். வஞ்சகமான சொற்களுக்கு இரையாக்கப்பட்டவர்கள் அதனால் ஏற்படும் மனப்பாதிப்புக்களை மிகவும் கடுமையான முறையில் வெளிப்படுத்துவார்கள். சிலசமயம் அவர்களது உணர்ச்சித் துடிப்புகள் பருந்துப் பாய்ச்சல் போல் வெளிவரும்.

அவமதித்தல், இகழ்ந்துரைத்தல், பலர் முன் பழித்தல், எச்சரிக்கைசெய்தல், பயமுறுத்தல், மிரட்டுதல், தனிமைப்படுத்தல், ஒதுக்கிவைத்தல், உடற்குறைபாடுகளை சொல்லி விமர்சித்தல், பட்டப்பெயர் சொல்லி கேவலப்படுத்தல், மக்கள் முன் இக்கட்டான நிலைக்கு ஆளாக்குதல், நண்பர்களோடும் தனக்கு விருப்பமானவர்களோடும் கதைக்கவும் சந்திக்கவும் தடைவிதித்தல், எதை செய்யவேண்டும் எதை அணியவேண்டும் என அழுத்தமாக உத்தரவிடல், நாசமாப்போ, எங்காவது தொலைந்துபோ அல்லது செத்துப்போ என்று திட்டுதல், அடிப்பதாக, சுடுவதாக, வெளியில் போட்டு மூடிவிடுவதாக, யாருக்காவது கொடுப்பதாக பயம் காட்டுதல், இரகசியங்களை வெளியிடுமாறு வற்புறுத்தல், இல்லாதவற்றை சொல்லுதல், குற்றம் செய்ததாக ஏற்றுக் கொள்ளச் சொல்லுதல் போன்ற அனைத்தும் சொல்சார்ந்த தண்டனை முறைகளாகும்.

இந்த தண்டனை முறையினால் பெற்றோர் மற்றும் பிள்ளை, ஆசிரியர் மற்றும் மாணவர் உறவில் கடுமையான பாதிப்புகளும் விரிசல்களும் ஏற்படும். சொல் தண்டனை உடல் தாக்கங்களை ஏற்படுத்தாவிட்டாலும் உள்ளத்தில் நோவுகளையும் தீராத இழப்புகளையும் உருவாக்கிவிடும்.

ஆரோக்கியமான பெற்றோர் பிள்ளை, ஆசிரிய மாணவ நண்பர் உறவுகள் ஏற்படாவிட்டால் உடல்ரீதியான வன்முறைகள் பிள்ளைகளில் வெளிவர காரணமாகலாம். அவ்வாறே பாதிக்கப்பட்ட பிள்ளை 'நான் முட்டாள், அசிங்கமானவர், ஏற்கப்படாதவன், யாரும் என்னோடு உறவு கொள்ளத்தேவையில்லை என்ற எண்ணங்களால் அவதிப்பட்டு காலப் போக்கில் அவை பிழையான நடத்தைகளாக வெளிவர ஆரம்பிக்கலாம். மோசமான சொற்களைக் கொண்டு ஏசுவது, பேசுவது குடும்ப அமைதியை நீக்கி குடும்ப வன்முறையை ஏற்படுத்தி ஒருவருக்

> **அவமதித்தல், இகழ்ந்துரைத்தல், பலர்முன் புழித்தல், எச்சரிக்கை செய்தல், பயமுறுத்தல், மிரட்டுதல், தனிமைப்படுத்தல், ஒதுக்கி வைத்தல், உடற்குறைபாடுகளை சொல்லி விமர்சித்தல், பட்டப் பெயர் சொல்லி கேவலப்படுத்தல், மக்கள் முன் இக்கட்டான நிலைக்கு ஆளாக்குதல், நண்பர்களோடும் தனக்கு விருப்பமானவர்களோடும் கதைக்கவும் சந்திக்கவும் தடைவிதித்தல், எதை செய்ய வேண்டும் எதை அணிய வேண்டும் என அழுத்தமாக உத்தரவிடல், நாசமாப்போ, எங்காவது தொலைந்து போ அல்லது செத்துப்போ என்று திட்டுதல், அடிப்பதாக, சுடுவதாக, வெளியில் போட்டு மூடிவிடுவதாக, யாருக்காவது கொடுப்பதாக பயம் காட்டுதல், இரகசியங்களை வெளியிடுமாறு வற்புறுத்தல், இல்லாதவற்றை சொல்லுதல், குற்றம் செய்ததாக ஏற்றுக்கொள்ளச் சொல்லுதல் போன்ற அனைத்தும் சொல்சார்ந்த தண்டனை முறைகளாகும்.**

கொருவர் பிரிவையும் பிணக்கையும் ஏற்படுத்தச் செய்யும். அத்துடன் குழந்தைகள் வீட்டில் சொற்களால் ஏசப்படும் முறைகளைக் கண்டு, கேட்டு, அனுபவித்து அவற்றை பாதையிலும் பின்பற்ற முயற்சிப்பார்கள். வஞ்சகமான ஏச்சுகளும் பேச்சுகளும் மோசமான ஒரு கலாசாரத்தை உருவாக்குவதற்கு காரணமாகக்கூட அமைந்துவிடும்.

பெற்றோர்களும் உற்றார்களும் ஏனையவர்களும் பிள்ளைகளோடு உரையாடும் போது சொற்களை எப்படி வெளிப்படுத்துகிறோம் என்பதை கட்டாயம் கவனித்துப் பார்க்க வேண்டும்.

• மாவலியான்

**இல - 06**

இதைவிட தோட்டத்துறையில் ஆண் பெண் என்ற பால் அடிப்படையில் சம்பளமட்டம் வேறுபடுத்தப்பட்டுள்ளது. இதன்படி ஆண்களைவிட பெண்களுக்குக் குறைவான சம்பளம் (சுமார் 20%) வழங்கப்படுகிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் விளைச்சல் கூடிய காலங்களில் துணிமணிகள் சுமந்து செல்லும் அங்காடிகளுக்கே இன்று மலையகத்தில் கிராக்கி.

இலங்கையில் வேறெந்த தொழிலாளரையும் விட காலநிலை மாற்றங்களுக்கு தோட்டத் தொழிலாளரே நேரடியாக முகங்கொடுத்து வருகின்றனர். இவர்கள் கூரையின் கீழ் வேலை செய்யவில்லை. எனவே காற்று, மழை, பனி, வெயில் ஆகிய சகல கால நிலை மாற்றங்களும் இவர்களைப் பாதிக்கின்றன. இந்த மாற்றங்களை சமாளிக்கக்கூடிய விசேட ஆடைகள் பட்டது என்ற விபரம் யாருக்குமே சரியாகத்தெரியாது. ஒரு தோட்டத்தில் நான்கு லைன்களின் கூரைகளுக்கு தகரம் மாற்றுவதற்கு ஜனவசம் நிதி ஒதுக்கீடு செய்தது. நிர்வாகம் அதே தகரத்திற்கு பெயிண்ட் அடித்துவிட்டு அந்த தொகையை அபேஸ் பண்ணியது.

* மாட்டு தொழுவத்தைவிடவும் படுமோசமான இந்த ஒரே லைன் அறைகளிலே தான் பெற்றோரும் கைக்குழந்தைகளும் பருவமடைந்த பெண்பிள்ளைகளும் ஒன்றாகப்படுத்

**சர்வதேச நிறுவனம் ஒன்று நுவரெலியா தேர்தல் தொகுதியில் உள்ள தங்கக்கெலை என்ற தோட்டத்தில் தோட்டத்தொழிலாளருக்கென சில வீடுகளைக் கட்டிக்கொடுத்தது. ஆனால் கட்டடவேலை பூர்த்தியானதும் (1981ல்) நிர்வாகத்தினதும் சில இனவாத அரசியல்வாதிகளினதும் அனுசரனையுடன் பெரும்பான்மையினத்தவர்கள் பலவந்தமாக குடியேறினர். பல தொழிற்சங்கங்களும் (இ.தொ.கா உட்பட) ஸ்தாபனங்களும் இதற்கெதிரான நடவடிக்கை எடுத்தன. ஆயினும் எதுவித பயனும் ஏற்படவில்லை.**

# தோட்டத் தொழிலாளர்கள் பற்றிய உண்மைகளும் பொய்மைகளும்

கொழுந்து பறிக்கும் வேலையில் ஆண்களும் ஈடுபடுத்தப்படுவர். (பெரும்பாலும் பெண்களுக்கே இவ்வேலை தரப்படும். தேயிலைத் தோட்டங்களிலுள்ள பெண் தொழிலாளரின் 93 வீதம் கொழுந்து கொய்வோர்) ஆயினும் பெண்களுக்கு குறைந்த கூலியே கொடுக்கப்படும். எனவே ஆண்களைவிட பெண்களை ஈடுபடுத்துவது தோட்ட நிர்வாகத்திற்கு இலாபகரமானது. ஆகையால் ஆண்களைவிட பெண்களுக்கே அதிக நாட்கள் வேலை தரப்படுகின்றன. இது இன்னொரு வகையான சுரண்டலாகும்.

**3 உணவு**

காலையில் ரொட்டியும், தேங்காய்ச் சம்பலும், வெறும் சாயமும் (சில வேளைகளில் கருப்பட்டி அல்லது சீனியுடன்) பத்து மணிக்கு மீண்டும் ஒரு சாயம், பகல் உணவு, பாண் அல்லது ரொட்டி, தேங்காய் சம்பலுடன் அல்லது சீனியுடன், இரவில் மாத்திரம் சோறு, ஒரு கறியுடன் (இறைச்சிக் கறி மாதத்திற்கு 3 தடவைக்கு மேல் கிடையாது)

இதுதான் இவர்களது சராசரி உணவு அநேகமான நாட்களில் அரைப் பட்டினி, முழுப்பட்டினி கிடந்தே காலத்தைக் கழிக்கின்றனர். இவர்களது நாளாந்த உணவில் தினசரி இவர்கள் கடும் உழைப்பில் இழக்கும் கலோரி சக்தியை மீட்டுப்பெறக்கூடிய சக்திகள் கிடையாது. இதனால் ஒரு தலைமுறையைவிட அடுத்த தலைமுறை குள்ளமாகவும், பலவீனமாகவும் வளர்கிறது. ஏனைய மக்கள் சமூகங்களோடு ஒப்பிடுகையில் இன்று இலங்கையில் மிகவும் உயரம் குறைவான மக்கள் மலையகமக்களே, முன்னர் பருப்பும் மாசியும் இவர்களுக்கு குறைந்த விலையில் விநியோகிக்கப்பட்டது. இவற்றில் புரோட்டீன் அதிகம். தற்போது அவை வழங்கப்படாததால் இவர்களது உணவில் சேரும் புரோட்டீனின் அளவு மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்நிலைமைகளால் இலங்கையில் இன்று மிகக் கூடுதலான மந்த போஷாக்கு வீதம் தோட்ட துறையிலே காணப்படுகிறது.

**1. உடை**

தீபாவளிக்கொருமுறை தான் இவர்கள் இப்போது புத்தாடைகளைக்காண்கிறார்கள். மலையகத்திலுள்ள சிறு நகரங்களில் துணிமணிகள் விற்கும் கடைகள் இப்போது திறக்கப்படுகின்றன. புதிய துணிக்கடையை விட பழைய

இவர்களுக்குத் தேவை, ஆனால் அவற்றை அரசாங்கம் (தற்போது அரசாங்கமே அவர்களது முதலாளி) வழங்குவதில்லை. தோட்டத் தொழிலாளர் அவற்றை வாங்கக்கூடிய நிலையில் இல்லை.

இது இவர்களது ஆரோக்கியத்தைப் பாதிக்கும் மற்றொரு காரணியாகும். தோட்டத் தொழிலாளர் மத்தியில் இதயம் சம்பந்தமான புறொண்கைட்டிஸ், நியூமோனியா போன்ற நோய்களே பொதுவாகக் காணப்படுகின்றன. இதற்கான அடிப் படைக்காரணம் காலநிலையை சமாளிக்கக்கூடிய ஆடைகள் இன்மையே.

துறங்குகின்றனர். இதனால் தொற்று நோய்கள் பரவுவது ஒரு புறம் ஒழுக்கக்கேடுகள் ஏற்படுவதிற்கும் இது ஒரு ஊற்று மூலமாக அமைந்து விடுகிறது.

* திருமணமானதும் புதுக் குடும்பத்திற்கு தனி லைன் அறை வழங்க வேண்டும் என சட்டமிருக்கிறது. ஆனால் சில தோட்டங்களில் இந்த சிறு அறையையே சாக்கினால் பிரித்து இரு குடும்பங்களுக்கு நிர்வாகம் கொடுத்துள்ளது.

* இந்த லைன் முறை மனிதன் வாழ் வதற்கு ஏற்றதல்ல. என மாறி மாறி வந்த அரசாங்கங்களும் ஏற்றுக் கொண்டுள்ளன. பல சர்வதேச நிறுவனங்கள், ஐ.நா. ஸ்தாபனங்கள் உட்பட இந்த அறைகளை கண்டித்துள்ளன. ஆயினும் 1950களில் இத்தகைய லைன் அறைகள் கட்டுவதைத் தடை செய்யும் சட்டத்தை அரசாங்கம் நிறைவேற்றிய போதும்கூட புதிய வீடுகள் அமைப்பதில் முன்னேற்றங்கள் ஏற்படவில்லை. சில லைன் அறைகளில் 17 பேர் வாழவேண்டிய துர்ப்பாக்கியமான நிலைமை காணப்படுகிறது.

பட்டிருந்தால்கூட அவ்வுயிர் இழப்பு நேர்ந்திருக்காது.

* சர்வதேச நிறுவனம் ஒன்று நுவரெலியா தேர்தல் தொகுதியில் உள்ள தங்கக்கெலை என்ற தோட்டத்தில் தோட்டத்தொழிலாளருக்கென சில வீடுகளைக் கட்டிக்கொடுத்தது. ஆனால் கட்டடவேலை பூர்த்தியானதும் (1981ல்) நிர்வாகத்தினதும் சில இன வாத அரசியல்வாதிகளினதும் அனுசரனையுடன் பெரும்பான்மையோர் பலவந்தமாக குடியேறினர். பல தொழிற்சங்கங்களும் (இ.தொ.கா உட்பட) ஸ்தாபனங்களும் இதற்கெதிராக நடவடிக்கை எடுத்தன. ஆயினும் எதுவித பயனும் ஏற்படவில்லை.

* அரசாங்கம் நாடெங்கும் மாதிரிக்கிராமம் அமைத்து வீடற்றோருக்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பதாகக் கூறுகிறது. ஆனால் இந்தத் திட்டத்திலும் மலையக தமிழ் தொழிலாளருக்கு பாரபட்சம் வெளிப்படையாகக் காட்டப்படுகிறது. மலையக தமிழ் மக்களுக் கென ஒரு மாதிரிக் கிராமம் நுவரெலியா தேர்தல் தொகுதியில் கொட்டகலைக்கருகில் அமைச்சர் திரு. சௌமியமூர்த்தி தொண்டமானால் அவரது பெயரில் (சௌமியபுரம்) அமைக்கப்பட்டுள்ளது. அதில்கூட தோட்டத் தொழிலாளருக்கு ஒரு வீடு தானும் கிடைக்கவில்லை. உத்தியோகத்தவர்களுக்கும் தோட்ட சேவையாளருக்குமே அவை கிடைத்துள்ளன. இங்கு குடியிருப்பவர் பெரும்பாலும் தமிழர் என்பதால் இந்த மாதிரிக் கிராமத்திற்கு இதுவரை தொண்டமான் முயன்றும்கூட மின்சாரம் வழங்கப்படவில்லை.

இறுதியாகக் கூறப்பட்ட இரு விபரங்களிலிருந்து அரசாங்கம் மலையக மக்கள் விடயத்தில் கடைப்பிடிக்கும் இனவாதக் கொள்கை தெளிவாகிறது. அது மாத்திரமல்ல தோட்டப் புறங்களில் இன்று அமைக்கப்படும் மாதிரிக் கிராமங்கள், வடக்கில் இடம்பெறும் திட்டமிட்ட குடியேற்றத் திட்டத்தைப்போலவே இனவாதத்தின் அடிப்படையில் சிங்கள குடியேற்றங்களை நிலவுவதாகவே உள்ளன. (தொடரும்)



**மாட்டு தொழுவத்தைவிடவும் படுமோசமான இந்த ஒரேலைன் அறைகளிலே தான் பெற்றோரும் கைக்குழந்தைகளும் பருவமடைந்த பெண்பிள்ளைகளும் ஒன்றாகப் படுத்துறங்குகின்றனர்.**

**5. வீட்டு வசதி**

மலையகத் தமிழருக்கு வீட்டுப்பிரச்சினை கிடையாது என்பது வகுப்பு வாதிகளின் மற்றொரு பிரச்சார மாகும். உண்மையில் இவர்களுக்கென சொந்தமான வீடுகள் கிடையா, நிர்வாகத்தால் வழங்கப்படும் லைன் அறைகள் அந்த அறையில் குடியிருக்கும் குடும்பத்தில் ஆகக்குறைந்தது ஒருவர். தோட்டத்தில் வேலை செய்யாவிட்டால் பறிமுதலாகும்.

**1. லைன் காம்பரா**

ஒரே தகரக் கூரையில் கீழ் முன்னும் பின்னுமாக 18 முதல் 40 வரையிலான (10' x 12') 120 சதுரடி விஸ்தீரணமுள்ள அறைகளைக் கொண்டவை. காற்றோட்டமோ, சூரிய வெளிச்சமோ இல்லாத காரணத்தினால் மெழுகப்பட்ட இந்த 120 சதுரடி காம்பராவில்தான் தோட்டத் தொழிலாளர் வாழ்கின்றனர். இவ் அறைகளுக்கு மின்சாரம் கிடையாது. வருடா வருடம் சுண்ணாம்பு அடிப்பதற்கும், பழுது பார்ப்பதற்கும் நிர்வாகம் நிதி ஒதுக்கீடு செய்கிறது. ஆனால் அப்பணம் நிர்வாகிகளின் சட்டைப்பைக்குள் போய்விடுகிறது. எமது ஆய்வின்படி 40 தோட்டங்களில் 8 தோட்டங்களில் மாத்திரமே இரண்டு வருடத்திற்கு ஒரு முறை வெள்ளை பெயருக்குப் பூசப்

* 1973ல் மேற்கொள்ளப்பட்ட நுகர்வோர் நிதி பற்றிய ஆய்வொன்றின் பிரகாரம் நகரப் பகுதியில் 35 வீதமான வீடுகளிலும் கிராமப் புறங்களில் 35 வீதமான வீடுகளிலும் அளவுக்கதிகமான ஆட்கள் வசித்துவந்தனர். ஆனால் தோட்டத் துறையில் மாத்திரம் இது 75 வீதமாகக் காணப்பட்டது.

* சில ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு லைன் அறை உடைந்து விழுந்ததால் 40 பேர் உயிரிழந்தனர். என்று பெண்ணின் குரல் கூறுகிறது.

* 74ம் ஆண்டளவில் தொண்டமானுக்குச் சொந்தமாயிருந்த டெவன் தோட்டத்தில் ஏற்பட்ட சிறு மண் சரிவுக்கே இரு லைன்கள் அள்ளப்பட்டுவிட்டன. 16 பேர் அகால மரணமடைந்தனர். அவ்விரு லைன்களும் உறுதியாகக் கட்டப்

# தமிழர் தாயகத்தை கோறையாக்கும் திருமலைக் குடியேற்றங்கள்





■சி.அ.யோதிலிங்கம்

உலகின் எல்லா இடங்களிலும் தேசிய இனங்களின் சுயநிர்ண யக் கோரிக்கையை வலுவிழக்கச் செய்வதற்கு ஆதிக்க சக்திகள் குடியேற்றங் களையே ஒரு பிரதான ஆயுதமாக பயன் படுத்துகின்றனர். தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைகளின் அடிப்படைகளை இல்லாமல் செய்வதற்கும், போர்க்காலங்களில் போராளிகளை இல குவாக ஒடுக்குவதற்கும், ஒடுக்கப்படும் மக்கள் தங்களிடையே நெருங்கிய தொடர்புகளை வைத்துக் கொள்ளாமல் கூறு போடுவதற்கும், தீர்வு என வரும் போது குடியேற்ற மக்களைக் காட்டி தீர்வு முயற்சிகள் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு சார்பாக செல்லவிடாமல் தடுப்பதற்கும், இக் குடியேற்றங்களே அவர்களுக்கு பெரிதும் பயன்படுகின்றன.

பாலஸ்தீனத்தில் யூதர்களின் குடியேற் றம், அயர்லாந்தில் புரட்டஸ்தாந்தவர்களின் குடியேற்றம், கொசோவாவில் சேர்பியர்க ளின் குடியேற்றம், திபெத்தில் சீனர்களின் குடியேற்றம், கிழக்குத்தீமோரில் இந்தோ னேசியர்களின் குடியேற்றம், பிலிப்பை ன்ஸ் மிந்தானேவில் கிறிஸ்தவர்களின் குடியேற்றம் என்பன இந்த வகையிலேயே இடம்பெற்றன.

உலக நாடுகளின் நிர்ப்பந்தங்களினால் தீர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போது இக் குடியேற்றங்களே பெருந்த டைகளாக விளங்குகின்றன. கிழக்குத் தீமோர் மக்களின் சுதந்திரத்தினை அங்கு குடியேறியுள்ள இந்தோனேசியர்கள் தடுத்



ததையும், பாலஸ்தீன சுயாட்சி ஒழுங்காக செயற்படுவதை மேற்குக்கரை காஸா பகுதிகளில் குடியேறிய யூதக் குடியேறிகள் தடுப்பதையும் இந்த வகையிலேயே விள ங்கிக் கொள்ளவேண்டும்.

இலங்கையிலும் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக் கோரிக்கையை செய லற்றதாக்குவதற்கு ஆட்சியாளர்கள் குடி யேற்றங்களையே ஒரு பிரதான கருவி யாக பயன்படுத்தினர். தமிழர்களின் தனி வழி அரசியல் 1920களிலேயே உண ரப்பட்டதால் அக்காலத்தில் இருந்தே சிங்களப் பேரினவாதிகளிடம் இக்குடி யேற்ற எண்ணம் வலுப்பெற தொடங்கி யிருந்தது. 1931 லிருந்து 1947 வரையான டொனமூர் அரசியல் யாப்பு காலப்பகுதியில் சிங்களவரிடம் ஒப்படைக்கப்பட்ட மட்டுப் படுத்தப்பட்ட அதிகாரத்தைக் கொண்டே இதற்கான முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டன. இந்த வகையிலேயே 1941ல் கல்லோயா அபிவிருத்தித் திட்டம் அப்போதய மட்டக் களப்பு மாவட்டத்தின் தென்பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சுதந்திரத்தை தொடர்ந்து தமிழர் அரசி யல் சமத்துவ உரிமை என்பதற்கு அப் பால் அதிகாரத்தில் பங்கீடு என்பதனை நோக்கி வளரத்தொடங்கியது. அதிகார செயற்பாட்டின் குறியீடாக வடக்கு - கிழக்கு நிலப்பரப்பு என்பது எழுச்சியடைந்தது. இச் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை தடுக்கும் வகையில் ஒரு நீண்ட காலத் திட்டத்தின் அடிப்படையில் குடியேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அத ற்கு அவர்கள் பிரதானமாக தேர்ந்தெடு த்த இடமே திருகோணமலை மாவட் டமாகும். திருகோணமலை மாவட்டத் தினை கடற்கரைப் பக்கமாக வில்போல சுற்றி வளைத்து ஏனைய தமிழ் பிரதேசங் களுடனே தொடர்புகள் துண்டித்தலே இத் திட்டத்தின் பிரதான நோக்கமாக இருந்தது. ஒரு வில் போல நீளமாக வளைந்திருக்கும் குடியேற்றப் பிரதேசமான சேருவல தொகு தியினை பார்க்கும் போது இவ் உண்மை தெளிவாக புலப்படும்.

> உலக நாடுகளின் நிர்ப்பந்தங் களினால் தீர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போது இக் குடியேற்றங்களே பெருந்தடைகளாக விளங் குகின்றன. கிழக்குத் தீமோர் மக்களின் சுதந்திரத்தினை அங்கு குடியேறியுள்ள இந்தோனேசியர்கள் தடுத் தையும், பாலஸ்தீன சுயாட்சி ஒழுங்காக செயற்படுவதை மேற்குக் கரை காஸா பகுதிகளில் குடியேறிய யூதக் குடியேறிகள் தடுப்பதையும் இந்த வகையிலேயே விளங்கிக் கொள்ளவேண்டும்.

இந் நிலையில் தமிழ் மக்களின் புதிய தலைமுறையினர் இக் குடியேற்றங்களைப் பற்றியும் அதற்கு பின்னால் உள்ள சதி முயற்சிகளைப் பற்றியும், பேரின வாதிகளின் மூலோபாயங்கள் தந்திரோபா யங்கள் பற்றியும் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டியது அவசியமானதாகும். இவ் அறிந்து கொள்ளலே இப் புற்றுநோயை இந்த மட்டத்திலாவது இடைநிறுத்தி மேலும் வளராமல் தடுப்பதற்குரிய மார்க் கங்களை புலப்படுத்தும். பேரினவாதி களின் செயற்பாட்டுக்கு மாற்றான ஒரு செயற்பாட்டுத் தளத்தையும் திறந்து வைக் கும் மாற்று மருந்து வகைகளையும் கண்டுபிடிக்கும். அறுவைச் சிகிச்சைதான் ஒரே வழியென்றால் அதனையும் துரிதப் படுத்தும்.

சுதந்திரத்திற்கு முன்னர் திருமலை மாவட்டத்தில் நிரந்தரமாக குடியேறியி ருந்த சிங்கள மக்கள் என விரல்விட்டு எண் ணக்கூடியோரே வாழ்ந்திருந்தனர். இதற்குப் புறம்பாக திருமலை நகரத்தில் மட்டும் துறைமுக வேலைகளுக்காகவும் பிரித்தானிய கடற்படைத்தள வேலைக ளுக்காக தற்காலிக குடியேறிகள் சிலர் வாழ்ந்தனர். சுதந்திரத்திற்கு பின்னர் உருவாக்கப்பட்ட திட்டமிட்ட விவசாயக் குடியேற்றத்திட்டங்களைத் தொடர்ந்தே பெரும் எண்ணிக்கையானவர்கள் குடி யேறத் தொடங்கினர். தொடர்ந்து இவற் றைப் பலப்படுத்தும் வகையில் உரு வாக்கப்பட்ட சட்டவிரோத விவசாயக் குடியேற்றத்திட்டங்கள், கைத்தொழில் குடியேற்றங்கள், வியாபாரக் குடியேற்றங் கள், மீனவர் குடியேற்றங்கள், முப்படை யினருக்கான குடியேற்றங்கள் என்பன சிங்களவர்களின் எண்ணிக்கையை அதி கரிக்கச்செய்தன. இவ் குடியேற்றங்களின் வளர்ச்சியினாலேயே 1827ல் 1.3 வீதமாக இருந்த சிங்களவர் எண்ணிக்கை 1981ல் 33.62 வீதமாக அதிகரித்தது. அதே வேளை 1827 ல் 81.82 வீதமாக இருந்த தமிழர்களின் எண்ணிக்கை 1981ல் 36.4 வீதமாக குறைந்தது.

இனிதிருமலையின் முக்கிய குடியேற்றத் திட்டங்களைப் பார்ப்போம்.

### அல்லைத்திட்டம்

இத் திட்டமே திருமலை மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட முதலாவது விவசாய குடியேற்றத்திட்டமாகும். இது 1949ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 1953 ம் ஆண்டு தொடக்கமே மக்கள் குடியேறத் தொடங்கினர். மகாவலி ஆற்றை மறித்து வாய்க்கால் மூலம் திருப்பி அல்லைக் குளத்தை நிரப்பி அதனூடு சூழவுள்ள கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுப்பதற்காகவே இத் திட்டம் உருவாக்கப்பட்டது. இதற்கு முன்னரும் கூட இம் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1868ல் வாய்க்கால் வெட்டப்பட்டு தாழ் நிலமாக இருந்த பகுதிகள் இணைக் கப்பட்டு அல்லைக்குளம் உருவாக்கப்பட் டது. பின்னர் 1910ம் ஆண்டு குளம் பலப்படுத்தப்பட்டதோடு வாய்க்காலும் பெரிதாக்கப்பட்டது. 1949 இலேயே இது மிகப்பெரிய விவசாயத் திட்டமாக புனர மைக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப் பட்டன.

இத் திட்டத்தின் மூலம் 17, 500 ஏக்கர் விவசாய நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஒரு குடும்பத்திற்கு 4 ஏக்கர் வயல் நிலமும் 3 ஏக்கர் மேட்டு நிலமும் என பகிர்ந்தளிக்கப்பட்டது. இவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்ட நிலங்களில் 75 வீத நிலங்கள் சிங்கள மக்களுக்கு வழங் கப்பட்டது. 25 வீதமான நிலங்களே தமிழ் முஸ்லீம்மக்களுக்குபகிர்ந்தளிக்கப்பட்டன. காணி உரிமை பெறுபவர்களுக்கான விண்ணப்பங்களைக் கோரும் போது சிங்கள மக்கள் இலங்கையிலுள்ள எல்லா மாவட்ட அரசாங்க அதிபர்களினூடாகவும் கோரப்பட்டனர். ஆனால் தமிழ் பேசும் மக்களை பொறுத்தவரை திருமலை மாவட்டத்தில் அதுவும் மூதூர் பகுதியில் இருப்பவர்கள் மட்டுமே கோரப்பட்டனர்.

இப் பாரபட்சங்களை அன்றிருந்த தமிழ் பேசும் அரசியல் சக்திகள் தடுத்திருக்கலாம். அவர்கள் அது தொடர்பான முயற்சிகள் எதிலும் இறங்கியதாக தெரியவில்லை. அன்றைய காலகட்டத்தில் திருமலை மாவட்டத்தில் திருமலையிலும், மூதூரி லும் இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர்.

காணி பெறுபவர்களுக்குரிய தகமைக ளைப் பற்றிக் குறிப்பிடும் போது விண் ணப்பதாரிகள் விவசாயிகளாகவும் திரு மணம் புரிந்தவராகவும் காணி இல் லாமல் இருப்பவராகவும் இருத்தல் வேண்டும் என்றே குறிப்பிடப்பட்டது. ஆனால் நடை முறையில் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை இத்தகமை கள் கடைப் பிடிக்கப்பட்டன. சிங்கள மக்களைப் பொறுத்தவரை இவை காற்றில் பறக்கவிடப்பட்டன. விவசாயமே தெரியாதவர்களும் நிலங்களை சொந்த மாக வைத்திருந்தவர்களும் அவர்கள் மத்தியில் இருந்து தாராளமாக தெரிவு செய்யப்பட்டனர்.

### கந்தளாய்த் திட்டம்.


இத் திட்டம் 1950 ம் ஆண்டு கந்தளாய் குளத்தினை மையமாகவைத்து உருவாக் கப்பட்டது. 1954ம் ஆண்டு தொடக்கம் மக்கள் குடியேறத் தொடங்கினர். இத் திட்டத்தின் கீழ் 24, 750 ஏக்கர் காணி பகிர்ந்தளிக்கப்பட்டது. இதில் 14,360 ஏக் கர் நெற் செய்கைக்காகவும், 10;420 ஏக்கர் கரும்புச் செய்கைக்காகவும் என பகிர்ந்தளிக்கப்பட்டது. 80 வீதமான காணி கள் சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக் கப்பட்ட அதேவேளை 20 வீதமான காணி களே தமிழ் முஸ்லிம் மக்களுக்கென பகிர்ந் தளிக்கப்பட்டன. அல்லைத் திட்டத்தி னைப் போலவே ஒரு குடும்பத் திற்கு 4 ஏக்கர் நெற்செய்கை நிலமும் 3 ஏக்கர் மேட்டு நிலமும் வழங்கப்பட்டது.

கந்தளாய் பிரதேச சபையும் உதவி அரசாங்க அதிபர் பிரிவும் இக்குடியேற் றப் பிரதேசத்தை மையமாக வைத்தே உருவாக்கப்பட்டன. கந்தளாய் பிரதேச சபை எல்லைக்குள் உள்ள 22, 737 வாக்காளர்களில் மிகப் பெரும்பான்மை யோர் சிங்களவர்களாகவே உள்ளனர். இப் பிரதேச சபை 397.30 மைல் விஸ் தீரணத்தைக் கொண்டது.

# பொது நிர்வாகம்

க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கான அரசியல் விஞ்ஞானம்

கே.எஸ்.இளங்கோ
B.A.PGDE(MERIT), DIP.IN.POLITICAL




### பணிக்குழு அட்சி (Bureauçracy)

பணிக்குழு ஆட்சி என்பது உயர்மட்ட பொது நிர்வாகிகளினால் முன்னெடுக்கப்படுகின்ற ஆட்சிமுறையினைக் குறிக்கின்றது. அதாவது அரசாங்கத்தில் உள்ள பலமான அதிகாரங்களைக் கொண்ட அல்லது செல்வாக்கு மிக்க உயர் அரச உத்தியோகத்தர் குழாமே பணிக்குழு ஆட்சியாகும். பணிக்குழு ஆட்சியை ஆங்கிலத்திலே பியூரோகிரசி என்றும் அழைப்பர். இதனை சில அறிஞர்கள் மேசை ஆட்சி அல்லது மேசை அரசாங்கம் அல்லது மேசை அதிகாரம் என்றும் அழைப்பர்.

மாக்ஸ் வெபர் என்ற அறிஞர் பணிக்குழு ஆட்சி முறைமை தொடர்பாக வலியுறுத்தும் பொழுது அதிகார வர்க்கத்தினை குறிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட ஒரு சொல்லே பியூரோகிரசி எனக் குறிப்பிடுகின்றார். பணிக்குழுவினர் ஒரு நாட்டின் நிர்வாக கட்டமைப்பில் மிக முக்கியமான பங்கினை வகிப்பவர்களாக காணப்படுகின்றனர். அரசியல் நிர்வாகத்திற்கும் பொதுக் கொள்கைகளை வகுப்போருக்கும் அரசியல் தலைவர்களுக்கும் ஆலோசனை வழங்குபவர்களாக காணப்படுகின்றனர்.

பணிக்குழுவின் உருவாக்கமானது அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே காணப்படுகின்றது. நிர்வாகரீதியான நீண்ட அனுபவங்களைக் கொண்டவர்கள் தமது அனுபவத்தின் ஊடாக வெளிப்படுத்தும் திறமையான செயற்பாடுகள் மூலம் பணிக்குழுவினராக எழுச்சி பெறுகின்றனர்.

ஒரு நாட்டின் நிர்வாக கட்டமைப்பிலே அதிகளவு முக்கியம் பெறுபவர்களாக பணிக்குழுவினர் விளங்குவதன் மூலம் அவர்கள் அதிகளவு பொறுப்புக்களை கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். நிர்வாகத்திலே முன்னுதாரணமானவர்களாகவும் அரசாங்கத்தின் முன்னேற்றம், நிர்வாகத்தின் முன்னேற்றம், சமூக பொருளாதாரத்தின் முன்னேற்றம் என்பவற்றை நிர்ணயம் செய்பவர்களாகவும் இவர்கள் காணப்படுகின்றனர்.

பணிக்குழு ஆட்சியானது முதல் முதலில் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலேயே எழுச்சி பெற்றதாக கருதப்படுகின்றது. குறிப்பாக பிரான்ஸ் தேசத்திலே பணிக்குழுவாட்சி புகழ்பெற்று விளங்கியது. 17ம் நூற்றாண்டு காலப்பகுதியில் இது எழுச்சி பெறுவதற்கு முக்கிய பங்கு வகித்தவர்களாக பிரான்சிய அறிஞர்களான Richliev, மாசறீன் கோல்பர்ட் ஆகியோர் கருதப்படுகின்றனர். இவர்களால் முன்னெடுக்கப்பட்ட பணிக்குழு ஆட்சிமுறைமையே இன்று உலகின் எல்லா நாடுகளிலும் சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றது. பாராளுமன்ற செயற்பாடுகள், அமைச்சரவைச் செயற்பாடுகள், ஜனாதிபதியின் செயற்பாடுகள் என எல்லாவற்றிலும் பணிக்குழு ஆட்சியின் செல்வாக்கே மேலோங்கிக் காணப்படுகின்றது. அரசியல்வாதிகள் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று அதிகாரத்திற்கு வருகின்றபோதும் அவர்கள் சட்டம் பற்றிய நிர்வாக நடைமுறை பற்றிய அறிவு குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர். இந்நிலையிலே அவர்களது செயற்பாடுகள் சட்டங்களுக்கு அமைவாகவும் நிர்வாக ஒழுங்கு நடைமுறைக்ளுக்கு அமைவாகவும் இடம் பெறுவதனை உறுதிப்படுத்தும் சக்திகளாக பணிக்குழுவினர் காணப்படுகின்றனர். பணிக்குழுவினரது முக்கியத்துவம் காரணமாக அவர்கள் அரசாங்கத்திலும் சமூக மட்டத்திலும் அதிகளவு செல்வாக்குச் செலுத்துபவர்களாக காணப்படுகின்றனர்.

### பொதுத்துறை நிர்வாகத்தின் பண்புகள்

பொதுத்துறை நிர்வாகமானது ஒரு அரசாங்கத்தின் விம்பமாகக் காணப்படுவதனால் அது சில சிறப்புப் பண்புகளை கொண்டதாக காணப்படுகிறது.

- நிர்வாக செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதனை சட்டவிதிமுறைகளுக்கூடாக வெளிப்படுத்துகின்ற பண்பினைக் கொண்டது.
- திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல், மதிப்பீடு செய்தல் என்ற பொறிமுறைத் திட்டங்களை கொண்டதாக காணப்படும்.
- தனக்கேயுரித்தான ஒழுக்கக்கோவையினைக் கொண்டதாக காணப்படும்.
- தண்டனை முறைமைகளைக் கொண்டிருக்கும்.
- தொடர்ச்சியான மாற்றங்களை உள்வாங்குவதாக காணப்படும்.
- சட்டமன்றம், நீதிமன்றம், நிர்வாகத்துறை, பொது மக்கள், ஊடகங்கள் என்பவற்றுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டதாக காணப்படும்.
- பொறுப்புக்கூறும் கடப்பாட்டைக் கொண்டிருக்கும்.
- பொருளாதார சமூக சூழலுக்கு இசைவுபடுத்தப்பட்டிருப்பதாக காணப்படும்.

### லூதர் குலிக் Luthar Gulliek என்பவரின் பொது நிர்வாகம் பற்றிய விளக்கம்

பொதுத்துறை நிர்வாகம் பற்றிய ஆய்வுகளை முன்னெடுத்த அறிஞர்களுள் முக்கியம் பெறுபவர் luthar Gulliek என்ற அறிஞர் ஆவார். இவர் அமெரிக்க தேசத்தை சேர்ந்த அறிஞராவார். இவர் பொதுநிர்வாகம் சிறப்பாக செயற்படவேண்டுமாயின் அதன்வசம் இருக்கவேண்டிய சில சிறப்புப் பண்புகள் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

லூதர் குலிக்கின் நிர்வாகம் பற்றிய எண்ணக்கருவானது posdcorb என்ற எண்ணக்கரு என்று அழைக்கப்படுகின்றது. அதாவது posdcorb என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டு அவர் பொதுநிர்வாகம் பற்றிய விடயங்களை விளக்குகின்றார்.

P-Planning
o-Organizaton
S- Staffing
D- Directing
CO- Co-Ordination
R- Reporting
B- Budgeting

### திட்டமிடல் - Planning

நிர்வாக அமைப்பானது தெளிவான திட்டமிடலைக் கொண்டிருக்க வேண்டும். தான் மேற்கொள்ளும் எந்தவொரு செயற்பாடுகள் தொடர்பாகவும் அது தெளிவான திட்டமிடலை கொண்டிருப்பது முக்கியமானதாகும். திட்டமிடல் சிறப்பானதாக அமையுமாயின் அதன் மூலம் அடையப்பட எதிர்பார்க்கப்படும் விடயங்களும் சிறப்பானவையாக அமையும்.

### ஒழுங்கமைப்பு - Organization

நிர்வாக அமைப்பானது தான் வகுக்கின்ற திட்டங்களை சிறந்த முறையிலே அமுலாக்கம் செய்ய வேண்டுமாயின் அது சிறந்த ஒழுங்கமைப்பைக் கொண்டிருத்தல் வேண்டும். அதாவது சிறந்த ஒழுங்கமைப்பு காணப்படும் சந்தர்ப்பத்தில் மட்டுமே அது பயனுடைய விளைவுகளை பெற்றுத்தருவதாக அமையும். எனவே ஒழுங்கமைப்பு சிறப்பாக இருக்கவேண்டியது பொதுநிர்வாகத்தில் மிக முக்கியமானதாகும்.

### ஆளணியை சேர்த்துக் கொள்ளல் - Staffing

ஒழுங்கமைப்பு சிறப்பாக செயற்பட வேண்டுமாயின் அது திட்மிடப்பட்ட ஆளணிக்கட்டமைப்பை பெற்றிருத் தல் வேண்டும். அதாவது தகுதி, திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஆளணி அமைப்பைக் கொண்டிருப்பது அவசியமானதாகும்.

### வழிப்படுத்தல - Directing

நிர்வாகக்கட்டமைப்பிலே எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான கட்டளைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குதல் வேண்டும். அதற்கான பொறிமுறையை நிர்வாகக்கட்டமைப்பு தெளிவாக கொண்டிருத்தல் வேண்டும்.

### இணைத்து வைத்தல் - Co-Ordination

ஒரு நிர்வாகமானது பல நிர்வாக கூறுகளைக் கொண்டதாக காணப்படும். எனவே ஒவ்வொரு நிர்வாகக் கூறுகள் மூலமாகவும் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் ஒருங்கிணைக்கப்படுதல் வேண்டும். அவ்விதம் ஒருங்கிணைக்கப்படும் போது ஒரு செயற்பாடானது பல பகுதிகளால் மேற்கொள்ளப்படுவதனை தவிர்த்துக் கொள்ள முடியும். அத்துடன் நிர்வாகப்பகுதிகளுக்கிடையிலே மோதல்கள் இடம்பெறுவதனைத் தடுக்கவும் முடியும்.

### அறிக்கையிடல் - Reporting

நிர்வாக செயற்பாடுகள் ஒவ்வொன்றும் தெளிவாக அறிக்கையிடப்படுதல் வேண்டும். அதாவது நிர்வாக செயற்பாடுகளது அடைவுமட்டங்களை அறிந்து கொள்ளவும் எதிர்கால நடவடிக்கைகள் பற்றி திட்டமிடலும் அறிக்கையில் அவசியமாகும்.

### வரவு செலவுத் திட்டம் - Budgeting

நிர்வாக செயற்பாட்டின் போது நிதிசார் பெறுவனவுகள் நிதிசார் கொடுப்பனவுகள் என்பன திட்டமிடப்படுவது அவசிய மானதாகும். அதாவது வரவு செலவுகளை முன்கூட்டியே தீர்மானித்து அதற்கேற்ப செயற்படும் நிலை உருவாகும் போது நிர்வாகம் வெற்றிகரமாக செயற்படும் நிலை உருவாகும்.

லூதர் குலிக் பொதுநிர்வாகம் தொடர்பாக மேற்குறித்த அம்சங்கள் பற்றிக் குறிப்பிடுகின்ற போதிலும் அவ்வம்சங்களுக்கு புறம்பான போதும் பல விடயங்கள் இன்று பொதுநிர்வாகத்திலே இணைத்துக் கொள்ளப்படுகின்ற நிலை காணப்படுகிறது.

1. முன் திட்டமிடல் மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளல்
2. முற்கூட்டியே உணரும் தன்மை
3. திட்டமிடல்
4. நெகிழும் தன்மையும் மாற்றங்களை வேண்டி நிற்றலும்
5. தேவையான உத்தியோகத்தர்களை இணைத்து கொள்ளுதலும் மூலப் பொருட்களை பெற்றுக் கொள்ளுதலும்.
6. விரிவானதும் விரைவாக செயற்படக் கூடியதுமான ஒழுங்கமைப்பு
7. அரசியல் கண்காணிப்பும் மேற்பார்வையும்
8. பொதுமக்களுக்கு பொறுப்புச் சொல்லும் பொறிமுறை
9. சமூக அடிப்படைத் தேவைகளைக் கவனத்தில் கொள்ளுதல்.
10. திறமைக் கொள்கை பொது மக்கள் தொடர்பு
11. நவீன முறைமைகளைக் கையாளுதல்.

# நூல் அறிமுகம்

## கிராமியம்–கல்வி–மேம்பாடு சமூகவியல் பார்வைகள்

தொகுப்பு-இ.இராஜேஸ்கண்ணன்
வெளியீடு- சாத்வீகசுருதி,உடுப்பிட்டி,யாழ்ப்பாணம்
விலை- 250.00

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் சமூகவியல் பார்வையில் கிராமியம் - கல்வி - மேம்பாடு என்னும் தலைப்பில் நூல் வெளியிட்டிருக்கின்றார்.

இவ் நூலில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்ற கட்டுரைகள் அனைத்தும் முன்னைய வாழ்வின் விழுமியங்களை ஆராதிக்கும் அதேவேளை இன்றும் தொடரும் அநீதியான மேலாண்மைகளைக் கேள்விக்குள்ளாக்கும் சிந்தனை வீச்சுக்களாக அமைந்துள்ளன.

கல்வியும் கிராமிய மேம்பாடும், உட்படுத்தல் கல்வி, ஆசிரிய முன்மாதிரிகளும் தலைமைத்துவமும், இளையோர் பண்பாடும் சமூக விலகலும், கிராமிய வாழ்வின் பண்பாட்டுச் சூழல், யாழ்ப்பாணத்துக் கிராமிய கூட்டுவாழ்வும் மாறுதல்களும், போரின். பிந்திய கிராமிய மேம்பாட்டில் சனசமூக நிலையங்கள், பேண்தகு மேம்பாட்டில் சமூக வலுவூட்டலின் வகிபாகம், உலகமயமாக்கலும் மேம்பாடும், முரண்பாடு




முகாமையும் உருமாற்றமும் போன்ற தலைப்புக்கள் கொண்ட கட்டுரைகள் காணப்படுகின்றன.

மேம்பாடு பற்றிய இன்றைய சொல்லாடல்கள் புதிய தரிசனங்களை எமதாக்குகின்றன. காலனித்துவ மேலாண்மையுடனான கருத்தாக்கங்கள் பலவும் இன்று கேள்விக்குள்ளாகின்றன.பௌதீக எல்லைகளைக் கடந்த உலகமயமாதலே மேம்பாடு என்ற பரப்புரைகளின் உண்மைச் சொரூபங்களும் வெளிக்கத் தொடங்கியுள்ளன. "உலக கிராம" கதையளப்புகளிலிருந்து மீண்டும் கிராமங்களை நோக்கிய நகர்வு தொடங்கியுள்ளது. (அணிந்துரை - பேராசிரியர்.என்.சண்முகலிங்கன்)

இன்று போருக்குப் பின்னான சமூக மேம்பாடு என்ற கருத்து நிலை பல்வேறு தளங்களிலும் பல மட்டங்களில் பேசப்பட்டு வருகின்றது. போரினால் பாதிப்புக்குள்ளான மக்களின் பிரதான வாழ்விடங்கள் இன்றும் கிராமப்புறங்களாகவே விளங்குகின்றன. போரின் பின்னான சமூக மேம்பாடு. என்றெல்லாம் பேசத் துணிகின்ற போது அவை போர் நிகழ்ந்து முடிந்த பிரதேசங்களின் கிராமங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு தனிமனிதனது வாழ்வு நிலை குறித்து அதிக அக்கறையுடன் கூடியதாக அமைவது அவசியமாகின்றது. (கட்டுரை தலைப்பு-போரின் பிந்திய கிராமிய மேம்பாட்டில் சனசமூக நிலையங்கள்-நூல் ஆசிரியர் இ.இராஜேஸ்கண்ணன்) போன்ற முக்கிய சமூகவியல் கருத்துக்களோடு நூல் வெளிவந்திருக்கின்றது.

### தென்னிலங்கை...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள மக்கள் ஆதரிக்க போவதில்லை. சிங்கள மக்கள் ஆதரிக்கும் வேட்பாளரை தமிழ் மக்கள் ஆதரிக்கப் போவதில்லை. இது தான் இன்றைய யதார்த்தம். இந்த யதார்த்தத்தை மீறி சரத்பொன்சேகாவை கூட்டமைப்பு பகிரங்கமாக ஆதரித்தமையினால்த்தான் அவர் தோல்வியடைந்தார். சரத்பொன்சேகாவை வெளிப்படையாக ஆதரித்தால் ராஜபக்சே பெரும்பான்மை வாக்குகளுடன் வெல்லுவதற்கும் பொன்சேகா தோற்பதற்குமான ஆபத்து உணரப்பட்டது. அம்முடிவை கூட்டமைப்பு வெளிப்படையாக அறிவிப்பதற்கு முன்னதாகவே முன்னாள் கூட்டமைப்பு உறுப்பினர்கள் சிலர் எச்சரித்திருந்தனர். ஆனால் இன்றுள்ள கூட்டமைப்பு உறுப்பினர்கள் எவரும் அதனை ஏற்பதற்குத் தயாராக இருக்கவில்லை. மனோகணேசன் 2010ல் தேர்தல் முடிந்தவுடன் வெளிப்படையாகவே இதனை கூறியிருந்தார்.

அத்தேர்தலில் கூட்டமைப்பு புத்திசாலித்தனமான தீர்மானம் ஒன்றினை எடுத்து பொன்சேகாவை பகிரங்கமாக ஆதரிக்காதிருந்திருந்தால் கூட தமிழ்மக்கள் மகிந்தரை அகற்றவேண்டும் என்பதற்காக சரத்பொன்சேகாவினை ஆதரித்திருக்கக்கூடும். இது சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சாரப்படுத்தப்படுவதற்கு வாய்ப்பில்லாததால் அவர் வென்றிருக்கவும் கூடும். அன்று சரத்பொன்சேகா வென்றிருந்தால் கூட தமிழ் மக்களுக்கு எவ்வித பயனும் கிடைத்திருக்காது என்பது வேறு கதை.

தென்னிலங்கையை பொறுத்தவரை இரா்மன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? கூட வந்த குரங்கு ஆண்டால் என்ன? தமிழ் மக்களுக்கு எந்தவிதபயனும்கிடைக்கப்போவதில்லை. இதுதான் தமிழ் மகக்களுக்கு வரலாறு கற்பித்த உண்மை. ஒரு தரப்பு தமிழ் மக்களின் நெஞ்சில் குத்தியது என்றால் மறுதரப்பு முதுகில் குத்தியது என்பது தான் வரலாற்று உண்மை.

எனவே தென்னிலங்கை அரசியலில் தமிழ் மக்கள் பங்கெடுப்பது என்றால் இராஜதந்திர நோக்கத்திற்காகவும் ஒரு அதிகார சமநிலையைப் பேணுவதற்காகவும் மட்டும் தான் இருக்கவேண்டும். இது கூட தமிழ்த் தேசிய அரசியலை பாதிக்காத வகையில் இருக்கவேண்டும்.

பங்குபற்றுதல் மூலம்தான் இந்த நோக்கத்தை அடையவேண்டும் என்ற கட்டாயமில்லை. சில சந்தர்ப்பங்களில் பகிஷ்கரிப்பதன் மூலமும் அந்த நோக்கத்தை அடையமுடியும். அது இரு வெற்றிகளைத் தரும். ஒரு பக்கத்தில் இராஜதந்திர வெற்றியைத் தரும். மறு பக்கத்தில் தமிழ்த் தேசிய அரசியலை உயிர்ப்புடன் வைத்திருக்கவும், தமிழ்த் தேசத்தின் இருப்பை பலப்படுத்தவும் உதவும். புலிகள் இந்த அணுகுமுறையினையே பின்பற்றினர். 2005ம் ஆண்டு புவிசார் அரசியலை தமிழ் மக்களுக்கு சார்பாக திருப்புவதற்காகவே தேர்தலில் யாரையும் ஆதரிப்பதில்லை என்ற தீர்மானத்தை எடுத்திருந்தனர். பல்வேறு விமர்சனங்கள் இருந்தாலும் புவிசார் அரசியலை தமிழ் மக்களுக்கு சார்பாக மாற்றி தமிழ்த் தேசிய அரசியலுக்கு இன்று சர்வதேச பெறுமதியைக் கொடுத்திருப்பது புலிகள் எடுத்த முடிவுதான். பூகோள அரசியல் போட்டியூடாக தமிழ்த் தேசிய அரசியலை வெற்றி கொள்ளவைக்கும் சூழலை நோக்கி நகர்த்துவதற்காக அந்த முடிவை எடுத்தனர். புலிகளை பகிரங்கமாக வசைபாடும் சம்பந்தன் தலைமை கூட புலிகள் உருவாக்கிய முதலீட்டில் மேல் நின்றுதான் தமது அரசியலை நடாத்துகின்றது.

தென்னிலங்கையில் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்குமிடையே ஒரு அதிகாரச்சமநிலை இருப்பதும் தமிழ் அரசியலுக்கு அவசியமானது. இது தொடர்பாகவும் தென்னிலங்கை தேர்தல் தொடர்பில் அக்கறை செலுத்தலாம். அதிகாரச்சமநிலை ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் தென்னிலங்கை தேர்தல்களில் தமிழ் மக்கள் பங்கு பற்றுவது பற்றி யோசிக்கலாம். கூடுமானவரை நேரடிப் பங்களிப்பு இல்லாமல் மறைமுகப் பங்களிப்பாக இருப்பதே நல்லது. தமிழ்த் தேசிய அரசியலை அந்தப் பங்களிப்பு பாதிக்காமல் இருப்பது மிகமிக முக்கியம்.

தென்னிலங்கையின் பிரதான இரு அரசியற் கட்சிகளைப் பொறுத்தவரை எந்த ஒன்றையும் பகிரங்கமாக ஆதரிப்பதற்கு தமிழ் அரசியற் கட்சிகள் முயற்சிக்க கூடாது. அங்கு இரு பிரதான அரசியற்கட்சிகளுக்கு இடையேயும் அதிகாரச் சமநிலை ஒன்று ஏற்பட வேண்டுமாயின் தமிழ்த் தரப்பு இரு கட்சிகளையும் சம தூரத்தில் வைக்கவேண்டும். ஒன்றை ஆதரிப்பது அதிகாரச் சமநிலை குழம்பவே வழி வகுக்கும்.


## ‘இது நம்தேசம்’ சந்தா விண்ணப்பம்

**இது நம்தேசம் பத்திரிகையை அஞ்சலில் பெறவிரும்புபவர்கள் சந்தாவிற்கு விண்ணப்பிக்கலாம்.**

**12 இதழ்களுக்கு - 600 ரூபா.**

தொடர்புகளுக்கு ஆசிரியர்
‘இது நம்தேசம்’
இல 43-3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம் 021 222 3739
மின்னஞ்சல் ithunamthesam@gmail.com

மாதிரி விண்ணப்பப்படிவம்

பெயர் - ..........
முகவரி - ..........
தொலைபேசி இலக்கம் - ..........
மின்னஞ்சல் முகவரி - ..........

12 இதழ்களுக்கான சந்தாப்பணம் அனுப்பியுள்ளேன்

திகதி- .......... கையொப்பம்


### இயல்பு நிலை...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தென்னாபிரிக்க அனுசரணைப்பாத்திரம் ஏற்க முன்வந்தமைக்கு இந்தியாவே பிரதான காரணம்.

இலங்கை விவகாரத்தில் உள்ள செயற்பாட்டுப்பொறிமுறையை மேற்குலகத்திலிருந்து தன் கைக்கு மாற்றவே இந்தியா முயல்கின்றது. தென்னாபிரிக்கா அனுசரணைப்பாத்திரத்தை எடுத்திருப்பது இந்த இலக்கில் ஒரு படி முன்னேற்றம் என்றே கூறவேண்டும்.

இந்நிலையில் தமிழ்த் தரப்பு நிபந்தனைகளுடனேயே பேச்சுவார்த்தைக்கு செல்ல வேண்டும். இயல்பு நிலையினைக் கொண்டு வருவதையே நிபந்தனையாக முன்வைக்க வேண்டும். தமிழ் மக் கள் இயல்பு நிலைக்கு வராமல் பேச்சு வார்த்தைகளை முன்னெடுப்பதில் எந்தப் பயனும் இல்லை. சிவில் வெளியைப் பெருப்பிப்பது இங்கு மிக மிக அவசியம்.

இயல்பு நிலை என்பதற்குள் இராணுவ அடக்குமுறையை இல்லாமல் செய்தல், சிறைக்கைதிகள் விடுதலை, காணிப் பறிப்பினை நிறுத்துதல், தமிழர் தாயகம் மீதான பச்சை ஆக்கிரமிப்புக்களை நிறுத்துதல் போன்றன உள்ளடங்கும்.

தமிழ் மக்கள் இயல்புநிலையினைக் கொண்டுவராமல்பேச்சுவார்த்தைக்குசெல்வதை ஒரு போதும் அனுமதிக்கக்கூடாது.

# திரைப்பட விமர்சனம்

# வல்லினம்

சிலர் சுயநலத்துக்காக படம் எடுப்பார்கள் இன்னும் சில பேர் வாய்ப்பு கிடைத்துவிட்டதே என்று தன்னை தக்கவைத்து கொள்வதற்காக படம் எடுப்பார்கள்.

ஆனால் ஒரு சிலர் மட்டுமே பொதுநலத்துக்காகவும், ஏதோ விதத்தில் இந்த படைப்பு உலகில் ஒரு மாற்றத்தை தரவேண்டும் என்பதற்காக எடுப்பார்கள். அந்த வரிசையில் சமூகத்தில் உள்ள சில சுயநலக்காரர்களின் பணப்போதையில் விளையாட்டு எவ்வாறு வணிக ரீதியாக மாறுகிறது என்பதையும் சமூகத்தின் பார்வையில் இன்று வரை விளையாட்டு வீரர்கள் ஒரு பணம் கொட்டும் வியாபாரமாக தான் கருதப்படுகிறார்கள் என்ற கதைக்கருவினை மையமாக கொண்டு "வல்லினம்" என்ற படைப்போடு களமிறங்கியிருக்கிறார் இயக்குனர் அறிவழகன். ஆஸ்கார் ரவிச்சந்திரன் தயாரிப்பில் ஈரம் என்ற திகில் வெற்றி படத்தை கொடுத்து ரசிகர்களை திரும்பி பார்க்க வைத்த அறிவழகன் எண்ணத்தில் உருவான படம் வல்லினம். படத்தோடு மைய புள்ளியாக இதுவரை தமிழ்நாட்டுக்கு அவ்வளவு பரிச்சையம் இல்லாத பாஸ்கட்போல் அணியை கையாண்டு இருக்கிறார். எந்தவித புயல்டுப் அறிமுகம் இல்லாமல் ஒரு ரயில்வே ஸ்டேஷனில் தன் ரயிலுக்காக கார்த்து கொண்டு இருக்கிறார் நகுல். அப்பொழுது ஒரு சிறிய ப்ளாஷ்பேக் கதையோடு நகர்கிறது படம் நகுலும் - கிருஷ்ணாவும் (சிறப்பு தோற்றத்தில்) நெருங்கிய நண்பர்கள். அதுமட்டுமல்லாமல் இருவரும் சிறந்த பாஸ்கெட்பால் வீரர்கள். இந்நிலையில் ஒரு நாள் நடைபெற்ற பாஸ்கெட்பால் விளையாட்டில் எதிர்பாராத விதமாக நகுலின் வேகத்தால் தன் நண்பனை இழந்துவிடுகிறார். இதனால் சோகம் கொண்ட நகுல் ஊரும் வேண்டாம் இந்த கல்லூரியும் வேண்டாம் என்று பாஸ்கெட்பாலை எறிந்து விட்டு சென்னைக்கு தனது படிப்பை தொடர புறப்படுகிறார். சென்னை நேஷனல் கல்லூரியில் படிக்க வந்த இடத்தில் குணா, ஜெகன் போன்றவர்களின் நட்பு கிடைக்கிறது. பிறகு எப்பொழுதும் போல கூத்து, கும்மாளம், நட்பு, காதல் என்று கல்லூரிக்கே உண்டான பாணியில் கதை நகர ஒரு கட்டத்தில் தன்னுடைய நண்பர்களும் பாஸ்கெட்பால் விளையாட்டு வீரர்கள் என்பது தெரிய வந்ததும் தனக்கு அவ்விளையாட்டை பற்றி தெரியாது எனும் தோனியிலேயே நடந்து கொள்கிறார் நகுல். கிரிக்கெட்டுக்கே முக்கியத்துவம் தரும் அக்கல்லூரியில் இறுதியாண்டு படிக்கும் சேர்மேன் மற்றும் கிரிக்கெட் வீரரான சித்தார்த்துடன் இவர்கள் நண்பர்களுக்கு ஏற்படும் மோதல் கிரிக்கெட் பெரியதா? பாஸ்கெட்பால் பெரியதா? எனும் போட்டியில் வந்து நிற்கிறது. தனது இறந்த நண்பனுக்காக பாஸ்கெட்பால் விளையாட்டை கைவிடும் நகுல் தனது புதிய நண்பர்களுக்காக திரும்பவும் களமிறங்குகிறார். இந்த போட்டியில் யார் வென்றார்கள்



மற்றும் விளையாட்டு எவ்வாறு வியாபாரம் ஆகிறது என்பதே படத்தின் க்ளைமேக்ஸ். நகுல் நடித்த படத்திலே மிகுந்த பொருட்செலவில் எடுக்கப்பட்ட படம் வல்லினம் தான் இப்படத்திற்காக நடிப்பில் நிறைய மாறுதல்களைச் செய்திருக்கிறார் நகுல். ஒரு பாஸ்கெட்பால் விளையாட்டு வீரராக மிகவும் சிரத்தையுடன் பயிற்சி எடுத்து நடித்துள்ளார். விளையாட்டை நேரில் பார்த்த உணர்வை தருகிறார்கள் அவரும், அவரது நண்பர்களாக வரும்



அம்ஜத், சீனியர் வீரர் மற்றும் எதிரணியில் வரும் மதிவாணன் ஆகியோர். இருப்பினும் பாஸ்கெட்பால் விளையாட்டு பற்றி தெரிந்தவர்களுக்கு ஏமாற்றமே. கதாநாயகியாக அறிமுகமாகியிருக்கும் மிருதுளாவிற்கு வழக்கமாக (பணக்கார பெண்) கதாநாயகனை காரணமே இல்லாமல் காதலிக்கும் வேலை மட்டுமே கொடுத்திருப்பதால் நடிப்பிற்கு பெரிய வாய்ப்பில்லாமல் இருக்கிறது. வில்லனாக வரும் சித்தார்த் நடிக்க முயற்சி செய்திருக்கிறார். மேலும் ஆதி அது குல்கரனி ஜே.பி. கிருஷ்னா அனுபமா என நடிகர் பட்டாளம் ஒரு சில காட்சிகளில் வந்து செல்கின்றனர். படத்தின் தொழில் நுட்பம் பற்றி சொல்லவேண்டும் என்றால் எஸ்.எஸ். தமன் இசையில் பாடல்கள் சலித்து போனது ஆனால் பின்னணி இசையில் பின்னி பெடல் எடுத்து இருக்கிறார் தமன். அறிமுக ஒளிப்பதிவாளர் பாஸ்கரன் தன் முதல் படத்திலேயே யார் இந்த பாஸ்கரன் என்று கேட்க வைதத்துள்ளார். ஒவ்வொரு காட்சியையும் சிறப்பாகவும் மற்றும் நேர்த்தியாகவும் காட்சிபடுத்தியிருக்கிறார். ஒரு உன்னதமான படைப்புக்கு கண்டிப்பாக தோள் கொடுத்து தூக்க வேண்டும். அந்த வகையில் இது போன்ற படைப்பினை கொடுத்த அறிவழகனின் முயற்சியை பாராட்டலாம். மொத்தத்தில் வல்லினம் ஒரு உணர்ச்சி மிகையான உண்மையான படம் ஆனால் கமர்ஷியல் கல்வை சேர்க்காமல் இருந்திருந்தால்! மொத்தத்தில் விளையாட்டிற்கு கொஞ்சம் சுறுசுறுப்பு தேவை. நடிகர் நகுல் நடிகை மிருதுளா பாஸ்கர். இயக்குனர் அறிவழகன், இசை தமன் , ஒளிப்பதிவு பாஸ்கர், தயாரிப்பு ஆஸ்கார் பிலிம்ஸ்

## இங்கிலாந்து சர்வதேசத் திரைப்பட விழாவில்
# தங்கமீன்கள் மற்றும் சுட்டகதை!


இயக்குனர் ராம் இயக்கத்தில் ராம் மற்றும் குழந்தை நட்சத்திரம் சாதனா ஆகியோர் முக்கிய வேடத்தில் நடித்து தேசியவிருதுகளையும், மேலும் பற்பல பாராட்டுக்கள், விருதுகளையும் குவித்த தங்கமீன்கள் திரைப்படமும், பாலாஜி வேணுகோபால், லக்ஷ்மிபிரியா, நாசர் மற்றும் பலர் நடிப்பில் உருவாகியிருந்த சுட்டகதை திரைப்படமும் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள பெர்னாத் சர்வதேசத் திரைப்படவிழாவில் திரையிடப்படவுள்ளன.

கௌதம் மேனன் தயாரிப்பில் உருவாகியிருந்த தங்கமீன்கள் திரைப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்திருந்தார். இப்படம் மொத்தமாக மூன்று தேசிய விருதுகளைக் குவித்தது. சிறந்த தமிழ்த் திரைப்படம், சிறந்த குழந்தை நட்சத்திரம் மற்றும் சிறந்த பாடலாசிரியர் என்ற மூன்று தேசிய விருதுகளைப் பெற்று பெரும் பாராட்டுக்களைப் பெற்றது. மேலும் எண்ணற்ற விருதுகளையும் இப்படம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

லிப்ரா புரொடக்சன்ஸ் நிறுவனத்தின் ரவீந்தர் சந்திர சேகர் தயாரிப்பில் வெளியான படமான சுட்டகதை திரைப்படமும் இத்திரைப்பட விழாவில் திரையிடப்படவுள்ளது. நகைச்சுவையை மையப்படுத்திய படமென்றாலும் இப்படம் மக்களிடம் பெரும் வரவேற்பினைப் பெறவில்லை. இருந்தபோதிலும் விமர்சகர்களால் பாராட்டப்பட்டது.



# "போர்க்களத்தில் ஒரு பூ" என்ற பெயரில் இசைப்பிரியாவின் வாழ்க்கை படமாகிறது




தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகத்துறையின் செய்தி வாசிப்பாளராகவும் புரட்சிப்பாடல்களை பாடிவந்தவருமான இசைப்பிரியா இறுதிக் கட்ட போரில் சிங்கள இராணுவத்தினரால் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டார்.

இவரது வாழ்க்கை கதை "போர்க்களத்தில் ஒரு பூ" என்ற பெயரில் படமாகிறது. இதில் இசைப்பிரியா வேடத்தில் பிரியா நடிக்கிறார். நாயகனாக பாலாஜி நடிக்கிறார். பிரபாகரன், சுமந்தனி, சுபாஷ் சந்திரபோஸ் ஆகியோரும் நடிக்கின்றனர். இப்படத்துக்கு இளையராஜா இசையமைக்கிறார். கதை, திரைக்கதை, வசனம், எழுதி கு.கணேசன் இயக்குகிறார். இசைப்பிரியாவின் வாழ்க்கைக் கதை நெஞ்சை உருக்கும் சம்பவங்களுடன் படமாகிறது என்றும் இப்படத்துக்கு இளையராஜாவின் இசை உயிர் கொடுத்துள்ளது என்றும் இயக்குனர் கணேசன் கூறினார். இப்படத்தின் பாடல்கள் வைகாசி மாத நடுப்பகுதியில் வெளியிடப்பட்டன. இதில் இளையராஜா, நடிகர்கள் நந்தா, விவேக், டைரக்டர் பேரரசு, ஜாகுவார் தங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சீனக்கவிதை

## உறுதி மொழி



கல்லின் மேல்
எழுதியவை அழியாது
அச்சடித்தவை
அழிந்து போகலாம்
அலைந்து மிதக்கும் புகை
அழிந்து சிதறிப்போக
சபிக்கப்பட்டதுவோ
நெகிழ்ந்தோடும் நட்சத்திரம்
வாலொடு மறையத்தானோ
நேர்மையாய் ஒரு புன்னகைத்துளி
மின்னலாய் ஒரு பார்வை
ஆகச்சிறந்தது. இடித்து ஒலிக்கும்
நேசிப்பு உறுதிமொழி
கிடக்கட்டும் போ

**ஜீவாலிஹாங்**
**தமிழாக்கம் - எஸ்ஸார்சி**

## மகளீரின் மரணங்கள்



மதி கெட்ட மானுட உலகில்
மகளீரின் மரணமோ
மர்ம முடிச்சுகளாய்
மாரி முழங்கின...

போரின் இறுதியிலே
போராடிய பெண்கள்
காக்கிச் சட்டைகளின்
பலாத்கார வெறியால்
பண்பின்றி பலியானமை
பதிவில் இல்லை...

பதவியை பம்பரமாய்
பயமின்றி பாவித்து
பெண்களையே
பாலியல் துன்புறுத்திய
பண்பற்ற செயல்கள்
பாரினிலே புதைந்தன...

காரமாய்ச் சுவைத்து
கால் தடங்கள் பதித்து - பின்
காரணங்கள் பல சொல்லி
காத்திருப்புகள் நீடித்து
காலம் காலமாய் தொடர்கிறது
காதலால் கன்னிகளின் உயிர்....

**ஸ்ரீ.ஜமிலா**
**மாதகல்**

## தமிழா...



தமிழா தலைநிமிர்ந்திடு
தன்னம்பிக்கையுடன் எழுந்திடு
தேசம் அங்கீகரிக்கப்படும்
என்று நீ நம்பிடு தமிழா
லச்சக் கணக்கில் கொலையுண்டது
இந்த மாகாண சபைக்கல்ல
கதிரை மோகம் கொண்ட
கயவர்களின் நரியாட்டத்திற்கு
கடிந்து பதில் சொல்லிட
உரிமைக்குரல் கொடுத்திடு- தமிழா!
சுதந்திர விடியலுடன் எம் மக்கள் உலாவிட
சுருங்கிய நினைவுகளை பகிர்ந்திட
சுற்றமெங்கும் தமிழ் பேசிட
அணி திரள்வோம் தமிழா!

**கந்தரோடை மு.கயா**

## ஆத்தா உன் சேலை



தெருநாய்க்குப் பயந்தும்
தெரிந்தவர் தெரியாதவர்
கதை கேட்க கூச்சப்பட்டும்
உந்தன் சேலைக்குள்
புகுந்து ஒளிந்த போது
இந்த உலகத்திலே
நான் மிகவும்
பாதுகாப்பாக இருக்கிறேன்
என்ற உணர்வை
உந்த்ன் சேலை
எனக்கு தந்திருக்கிறது.

**சேகுவேரா**

சிறுகதை

# ஒரே ஒரு லுங்கி

பர்மியக்கதை

நுயுயி (இன்வா)

தமிழாக்கம் - எச் பாலசுப்ரமணியம்

காலை நேரத்துச் சில்லென்ற காற்று வேகமாக வீசியது.

சமயலறை அடுப்பின் தீச்சுவாலை செந்நிறத்துடன் கனன்று நாற்புறமும் பரவியது. சிறுமி மீடோ சோறு சமைக்கும் பாத்திரத்தை வெகு பிரயாசையுடன் உலை மீது ஏற்றி வைத்தாள். அதன் மூடி ஏகமாகக் கறுத்திருந்ததைக் கண்ணுற்ற மீடோ அதனை எடுத்து அரிசி கழுவிய நீரிலேயே சுத்தம் செய்து மீண்டும் மூடி வைத்தாள். மீதமிருந்த அரிசியை இரவுச் சாப்பாட்டிற்காக தகர டின்னில் பத்திரப்படுத்தினாள்.

தண்ணீர் பானைக்குப் பக்கத்தில் வைத்திருந்த புளியிலைக்கற்றையை எடுத்தவாறு மீடோ தரையில் அமர்ந்ததுமே 'பர்...' என்று துணி கிழியும் சத்தம்.தான் உடுத்தியிருந்த லுங்கி கிழிந்து விட்டதை அவள் உணர்ந்து கொண்டாள். பரபரப்புடன் லுங்கியை மடித்துப் பார்த்தாள். குறைந்த பட்சம் ஒன்றரை அடி நீளத்துக்கு கிழிந்திருந்தது. "இதுவும் போச்சா?" அவள் வாய் முணுமுணுத்தது. அம்மா விட்டுச் சென்ற மூன்று லுங்கிகளில் மீந்திருந்த இந்தக் கடைசி லுங்கியும் இப்போது கிழிந்து விட்டது. மீடோ மெதுவாகக் குனிந்து புளியிலைகளைக் கழுவும் போது நாளைக்கு சித்தி வீட்டிலிருந்து ஊசி நூல் வாங்கி வந்து லுங்கியைத் தைக்க வேண்டும் என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டாள்.

இரண்டு மூன்று நாட்களுக்குமுன்பு பறித்த புளியிலை வாட ஆரம்பித்து விட்டது. மறுநாளைக்கு வேண்டிய இலைகளை தனியாக எடுத்து வைத்தாள். வீட்டின் முன்பக்கம் விளையாடிக் கொண்டிருந்த மூன்று தங்கைகளும் இடையிடையே சமையலறைப்பக்கமாக எட்டிப்பார்ப்பதும் மீண்டும் விளையாடுவதுமாக இருந்தனர். புளியிலைக்கீரை வெந்து கொண்டிருந்த பாத்திரத்தில் மீந்திருந்த சோளத்தைப் போட்டாள். எண்ணெய் சீசாவை அதன் மீது கவிழ்த்திய போது இரண்டு சொட்டுதான் விழுந்தது. மீடோ சீசாவின் அடிப்பாகத்தை பலமாக தட்டினாள். இன்று சாயங்காலம் அப்பா பணம் கொண்டு வந்து தந்த பிறகு தான் எண்ணெய், அரிசி எல்லாம் வாங்க முடியும்.

புளியிலைக்கீரை வெந்து கொண்டிருக்கும் போது வாசலில் ஸ்வாங்டோம்யோ- புத்தபிக்குகள் - பிட்சைக்காக வந்தனர். அவர்கள் குரல் கேட்டதுமே மீடோ வழக்கம் போல "கடெளஸ் வாங்: சஷமா பிசஷா" என்று பதில் குரல் கொடுத்தாள். (மன்னிக்க வேண்டும், பிட்சை இல்லை) மூன்று பிக்கு மாணவர்களுடன் வந்த பெரிய பிக்கு, மீடோவை ஒரக்கண்ணால் பார்த்தார். பிறகு பிக்கு சங்கம் அவ்விடத்தைவிட்டு அகன்றது.

"எல்லாரும் வாங்க, சீக்கிரம் சாப்பிட வாங்க" மீடோவின் குரலைக் கேட்டதுமே தங்கைகள் ஒடோடி வந்தனர்.

செந்நிறப் பாத்திரத்தில் ஆவி பறக்கும் கஞ்சி. தூக்குப்பாத்திரத்தில் புளியிலைக்கீரை . கஞ்சிப் பாத்திரத்தை மூடி மறைத்தபடி நான்கு செம்பட்டைத் தலைகள் குனிந்த தலை நிமிராமல் கஞ்சியை உறிஞ்சிக்கொண்டிருந்தன. மீடோவும் மூன்று தங்கைகளும் ஆற்றுக்கடவில் தினமும் முக்குளி போட்டுக் குளிப்பார்கள். எண்ணெயின் வாசனையே கண்டிராத அவர்களுடைய தலை முடி செம்பட்டையாகி விட்டிருந்தது.

"மக்ளே, இந்தா பணம் "தோளிலிருந்த துடுப்புக்களை கதவுப்பலகையில் மாட்டியவாறு மீடோவின் தந்தை அவள் கையில் பணத்தை வைத்தார். ஐந்து ஒரு ரூபாய்த் தாள்கள். தந்தையின் முகத்தில் அரும்பியிருந்த வியர்வையை உன்னிப்பாகக் கவனித்த படி மீடோர் கேட்டாள். "அப்பா, படகு வாடகைக்கு எடுத்தீங்களே, அதுக்கான வாடகை கொடுத்திட்டீங்கல்லே?"

தந்தை மீடோவை நோக்கி புன்னகைத்தவாறு பதிலளித்தார்." கொடுத்திட்டன் மகளே, இன்னிக்கு மீன் எதுவும் கிடைக்கலே... கொஞ்சம் தண்ணி குடும்மா... ஆத்திலே தண்ணி வேகமா ஒடிட்டிருக்குது." தந்தை என்ன சொன்னாலும் மீடோ புரிந்தது போல தலையாட்டுவாள்... அவ்வளவு தான்.

அவள் ஐந்து ரூபாயை எடுத்துக் கொண்டு சாமான் வாங்க கடைத்தெருவுக்குப் போக வேண்டும். நாளைக்கு வேண்டிய ஒரு தவ்வி அரிசி வாங்க வேண்டும்.அதற்கே நாலு ரூபாய் ஆகிவிடும். இதே அளவு அரிசியை மீனவர் சங்கம் அளித்த பெர்மிட் சீட்டைக் காட்டி வாங்கினால் இரண்டு ரூபாய் பத்து பைசாதான் ஆகும்.

ஆனால் அந்த பெர்மிட் அம்மா இறப்பதற்கு முன்பு ஒருவரிடம் அடகு வைக்கப்பட்டது.



இன்னும் மீட்கப்படவில்லை. அதனால் கூடுதல் விலை கொடுத்து அரிசி வாங்க வேண்டிய நிலை. மண்ணெண்ணெயும் தீர்ந்து விட்டது. அதற்கு எண்பது பைசா போனால் இருபது பைசா தான் மிஞ்சும். புளியிலையுடன் வேகவைக்க சோளமும் தேவைதான். ஆனால் இருபது - இருபைத்தந்து பைசாவுக்கு யார் சோளம் தருவார்கள்? மீடோ யோசிக்கலானாள்.

"அடி பெண்ணே மீடோ, அடுப்பிலே என்ன வெச்சிருக்கே? கொதிச்சு வத்திக்கிட்டிருக்குது பார்க்கலியா?"

"ஆமாம், பார்த்து இறக்குறேன். பசலைக்கீரை வெந்துக்கிட்டிருக்குது. ராத்திரிக்கஞ்சிக்கு இது போதுமேன்னு நெனச்சேன்."

அடுப்பில் வைத்திருந்த பாத்திரத்தை மீடோ திறந்து பார்த்தாள். பச்சையும் மஞ்சளும் கலந்த நிறத்தில் கீரை கொதித்துக் கொண்டிருந்தது. ஒரு கீரைத்தண்டை எடுத்து கையால் நசுக்கிப்பார்த்தாள். இன்னும் சற்று வேக வேண்டும். மீடோ விறகை உள்ளே தள்ளினாள். பிறகு அடுப்புக்கு பக்கத்தில் வைத்திருந்த சிறிய பிரம்புக் கூடையில் பணத்தை போட்டு வைத்தாள்.

" பாரு... நான் ஆறு கட்டம் குதிச்சுத் தாண்டிட்டேன். இன்னும் ஆறு தாண்டணும்..." நடுத்தங்கையின் உற்சாகமான குரல். குழந்தைகள் விளையாட்டு மும்முரத்தில் இருந்தனர்.மூன்று தங்கைகளும் விளையாடுவதை கண்ட மீடோவுக்கு தானும் குதித்து விளையாட வேண்டும் என்ற ஆசை எழுந்தது. அவளுக்கு இப்போதெல்லாம் விளையாடவே நேரம் கிடைப்பதில்லை. அம்மா இருந்த போது நேரம் கிடைத்த போதெல்லாம் மீடோவும் கிராமத்து மைதானத்தில் ஒடி விளையாடுவாள். அல்லது ஆற்றங்கரை மணற்குன்றில் தோழிகளுடன் ஏறிக் குதித்து விளையாடுவாள். தோழியருடன் சேர்ந்து

> தண்ணீர்ப் பானைக்குப் பக்கத்தில்
> வைத்திருந்த புளியிலைக்கற்றையை
> எடுத்தவாறு மீடோ தரையில் அமர்ந்துமே
> 'பர்...' என்று துணி கிழியும் சத்தம்.
> தான் உடுத்தியிருந்த லுங்கி கிழிந்து
> விட்டதை அவள் உணர்ந்து கொண்டாள்.
> பரபரப்புடன் லுங்கியை மடித்துப் பார்த்தாள்.
> குறைந்த பட்சம் ஒன்றரை அடி நீளத்துக்கு
> கிழிந்திருந்தது

ஆற்று மணலில் வீடு கட்டி விளையாடி வெகு நாட்களாகி விட்டன.

மீடோ தன்னுடைய லுங்கியை இறுகக் கட்டிக் கொண்டு வெளியே வந்தாள். நடுத்தங்கை கட்டங்களைத் தாண்ட ஆயத்தமாக நின்று கொண்டிருந்தாள். மீடோ அவற்றை அனாயாசமாக குதித்துத் தாண்டினாள்." பாத்தியா.. நான் எப்படி குதித்துத்தாண்டினேன்!" என்று கூவினாள் ஆனால் தங்கை தலையை ஆட்டிக் கொண்டு சிணுங்கினாள், "நான் குதிக்கிறதுக்காக நின்னுக்கிட்டிருந்தப்ப நீ எதுக்கு குதிச்சே? நீ தான் விளையாட்டிலே சேர்த்தியே இல்லியா?" என்றாள்.

நான் ஏன் சேர்த்தி இல்லே? நானும் தான் விளையாடுவேன். உனக்கு குதிக்க வராட்டி போய்க் குந்திக்க. உன் உடம்பிலேதான் உசிரே இல்லியே!" மீடோ தங்கையை சீண்டி கேலி செய்தாள்.

தங்கைக்கு வந்தது கோபம், "நீ இப்ப வெளியேறப்போறியா இல்லியா? நீ தான் பெரிய பெண்ணாயிட்டியே நான் சின்னவ. பெரியவங்க வந்து சின்னவங்க விளையாட்டிலே கலந்துக்கலாமா?"

"என்ன சொன்னே? நான் எங்கே பெரியவ? இன்னும் சின்னவ தான்" பாதி குழந்தை மனதுடன் மீடோ விளையாடுவதில் தன் உரிமையை நிலை நாட்டினாள்.

"அட...! நீ சின்னப்பொண்ணுதான்னா, குளிக்கறப்ப அப்போவோட லுங்கியை கட்டிட்டு ஏன் குளிக்கிறே? நீ சின்னப்பொண்ணுன்னா எங்களைப் போல குளிக்கிறது தானே?"

தங்கையின் தர்க்க வாதத்தை கேட்டு மீடோ வெட்கிப்போனாள். குழம்பிய மனதுடன் தலையை தொங்கப் போட்டுக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தாள்.

புளியங்கொம்புகளை வெட்டிக்கொண்டு வரும் போதெல்லாம் வீட்டில் மீடோவும் தங்கைகளும் அப்பாவைச் சூழ்ந்து உட்கார்ந்து கொள்வார்கள். தந்தை புளியிலைகளை நன்கு பரிசோதிப்பார். பிறகு இளம் இலைகளை கயிற்றுடன் சேர்ந்து இறுக்கிக் கட்டுவார்.

"நல்லா கட்டியாச்சில்லே, வாங்கப்பா! ஆத்துக்குப் போய் வலையை விரிக்கலாம்" என்று உற்சாகமாக கிளம்பினாள் சின்னக்குட்டி.

(தொடரும்)

## தமிழ்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பிற்குள் ஒரு சில தனிநபர்கள் மட்டும் சில பணிகளை செய்கின்றனர். கூட்டமைப்பு சார்பில் நிறுவன ரீதியான பணி எதுவும் இல்லை. தேர்தல் கூத்துக்கு செலவிடுகின்ற பணத்தில் சிறிதளவாவது இதற்கு செலவிட்டிருந்தால் குறைந்த மட்டத்திலாவது தேவைக்குரியவர்களின் நலன்கள் பேணப்பட்டிருக்கும்.

விசேட தேவையற்றவர்களே கவனிக்கப்படாமல் இருக்கும் போது பிரதேசங்கள் கவனிக்கப்படும் என எதிர்பார்ப்பதற்கில்லை. விசேட தேவையுள்ளோர் போலவே விசேட தேவையைக் கொண்டிருக்கும் பிரதேசங்களும் உள்ளன. அப்பிரதேசங்கள் தாங்களாகவே தம்மை பாதுகாத்துக் கொள்ள முடியாதவை. தமிழர் தாயகத்தில் அம்பாறை மாவட்டமும், திருகோணமலை மாவட்டமுமே இத்தேவைகளை வேண்டி நிற்கும் பிரதேசங்களாக உள்ளன.

இங்கு வாழ்வாதாரம், பாதுகாப்பு என்கின்ற இரண்டுமே பிரச்சனைகளாக உள்ளன. அம்பாறை மாவட்டத்தின் புறநகர்ப் பகுதிகளிலும், திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் கிழக்கு பிரதேசத்திலும் இந்நிலை உள்ளது. வாழ்வாதாரப் பிரச்சனையில் தமிழ் மக்களின் சமூக முதலீடுகளை இப்பகுதிகளுக்கு பாய்ச்ச வேண்டிய தேவை உள்ளது. தமிழ் சமூக முதலீடுகள் வடக்கில் பாய்ச்சப்படுகின்ற அளவிற்கு கிழக்கிற்கு பாய்ச்சப்படுகின்றது எனக் கூற முடியாது .

பாதுகாப்பு பிரச்சினை மிகவும் முக்கியமானது. அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் முஸ்லீம் ஆதிக்கத்திற்கு உள்ளாகியிருக்கின்றனர். மூதூர் கிழக்கு மக்கள் சிங்கள ஆதிக்கத்திற்கு முகம் கொடுக்கின்றனர். இது அவர்களுடைய இருப்பு சம்பந்தமானது. ஒவ்வொரு நாளும் தங்களுடைய இருப்பு பறிபோய் விடுமோ என்ற அச்சத்தில் வாழ்கின்றனர். தமிழ் மக்களின் விவகாரம் சர்வதேச மட்டத்திற்கு சென்ற நிலையில் சர்வதேச சமூகத்தைக் கொண்டு இதற்கு ஒரு பாதுகாப்புச் சுவரை கட்டியிருக்க வேண்டும்.

ஆனால் உண்மை என்னவென்றால் அம்பாறை மாவட்டத்திற்கு தமிழ்ப்பிரதிநிதி கிடையாது. பியசேனா அரசாங்கத்திற்கு தாவிய பின்னர் அம்பாறை மாவட்டத்தை கவனிக்க சுமந்திரனே நியமிக்கப்பட்டிருந்தார். சுமந்திரன் அம்பாறை மாவட்டத்தை எட்டியே பார்ப்பதில்லை. வழக்குகளை விட்டு விட்டு இவற்றிற்கெல்லாம் அவரால் நேரம் ஒதுக்க முடியாது. அம்பாறை மாவட்டத்திற்கு கூட செல்ல வேண்டாம். விபரங்களை அறிந்து உரிய இடங்களில் அதனை முன்வைத்திருக்கலாம் அவற்றையும் செய்யவில்லை.

திருகோணமலை மாவட்டத்திலும் இதே நிலைதான். அங்கு சம்பந்தன் தேர்தல் காலத்திற்கு மட்டும் செல்வார் ஏனைய காலங்களில் செல்வதில்லை, அங்கு தமிழ்ப்பிரதிநிதி இருந்தும் ஒன்றுதான், இல்லாவிட்டாலும் ஒன்றுதான்.

இவற்றைவிட அரசியல் தீர்வு என வரும்போது அம்பாறை மாவட்டத்தை முஸ்லீம்களிடம் கூட்டமைப்பு கொடுத்து விடும் என்ற அச்சமும் மாவட்ட தமிழ் மக்களுக்கு இருக்கின்றது. முஸ்லீம்கள் நிலத் தொடர்ச்சியற்ற அதிகார அலகை வேண்டி நிற்கும் போது தமிழ்த் தரப்பும் ஏன் அவ்வாறு கேட்கக் கூடாது என்பதற்கு இங்கு பதில் இல்லை.

ஐந்தாவது கிழக்கில் தமிழ்-முஸ்லீம் முரண்பாடு தொடர்பாக கூட்டமைப்பினர் நழுவல்போக்கினைக்கடைப்பிடிப்பதாகும். இந்த முரண்பாடு நடைமுறையில் உள்ளது என்பதை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதன் பின்னர் அதனைத் தீர்ப்பதற்கான வழிகளைத் தேடவேண்டும். மக்களே அதனைச் சுமக்கட்டும் என நழுவிப்போவது ஒரு தலைமைக்கு அழகல்ல.

கல்முனை தமிழ் பிரதேசசெயலாளர் பிரிவுப்பிரச்சனை ஒரு நீண்டகாலப் பிரச்சினை ஆகும். இதனை மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் கூட்டமைப்பினர் தங்கள் கைகளில் எடுத்திருக்க வேண்டும். முஸ்லீம் தரப்போடு பேசியிருக்க வேண்டும். முடியாவிட்டால் போராட்டங்கள் தலைமையேற்று நடத்தியிருக்க வேண்டும். அம்பாறை மாவட்ட நண்பர் ஒருவர் கூறினார். கூட்டமைப்பிற்கு இது விடயத்தில் விருப்பமும் இல்லை, இயலுமையும் இல்லை". இது தான் நடைமுறை உண்மை.

கிழக்கு மாகாணத்தின் அண்மைக் காலப்போக்கு தமிழ் மக்களின் கூட்டிருப்பையும், கூட்டுரிமையையும் வலுவாகச் சிதைக்கக் கூடியது. கூட்டமைப்பு 2009 இலேயே தமிழ்த்தேசிய அரசியலைக் கைவிட்டுள்ளமையினால் இச்சிதைவுகள் பற்றி எந்தவித கவலைகளும் அதற்கு கிடையாது.

ஆனால் தமிழ்த்தேசிய சக்திகள் இதில் அக்கறையற்று இருக்க முடியாது. அவர்கள் உடனடியாக அக்கறையைக் குவிக்க வேண்டும். அதன் ஆரம்பமாக இது பற்றி ஆரோக்கியமான கலந்துரையாடல்களை சகல மட்டங்களிலும் நடாத்துவது நல்லது.



## வாசகர் கருத்து

### மாற்றங்களுடன் வெளிவரட்டும்

சமகாலத்தில் வெளிவருகின்ற பத்திரிகைகளின் வாசகன் என்ற வகையில் நானும் இது நம்தேசத்தின் வாசகனானேன். இது நம்தேசம் தமிழரின் உரிமைகளுக்கான உண்மைக்குரலாக ஒலிக்கின்றது. மறைக்கப்பட்ட கருத்துக்களை வெளிச்சத்தில் வைக்கின்றதன் ஊடாக என்னை மிகவும் கவர்ந்துள்ளது. ஆனால் இப் பத்திரிகையில் சில மாற்றங்களை செய்வதன் ஊடாக இளைஞர், யுவதிகளையும் கவர்ந்து நாட்டின் அரசியல் கருத்துக்களை அவர்களுக்கும் செலுத்த முடியும். எனவே தங்களது பத்திரிகையில் இவர்களை கவரக்கூடிய வகையில் சினிமாப்பகுதியில் சினிமா செய்திகளையும், விமர்சனங்களையும்,சேர்ப்பது நல்லது. அத்துடன் விளையாட்டு செய்திகளுக்காக தனியாக ஒரு பகுதியை ஒதுக்குதல் வேண்டும். உலகில் ஏற்படுகின்ற கண்டுபிடிப்புக்கள், அதிசயங்கள், முக்கிய நிகழ்வுகள் சேர்த்து உலக பொதுவிடயங்களையும் உள்ளடக்க வேண்டும் என வாசகன் என்ற ரீதியில் உரிமையுடன் வேண்டிக்கொள்கின்றேன்.

**உடையார்கட்டு**
**குமணன்**

### அடிநிலை மக்களின் கைகளிலும் தவழட்டும்

இது நம்தேசம் பத்திரிகையானது தமிழ் மக்களின் விடியலிற்காக கட்டுரைகள், கேள்வி பதில், ஒருத்தருக்கும் சொல்லாதைங்கோ, கல்வயல் கனகசிங்கம் என பல்வேறு கருத்துக்களங்களை உருவாக்கி எழுச்சியுடன் வருகின்றது என்றால் அது மிகையாகாது.

இப் பத்திரிகையும் எழுத்துப்பிழையின்றி வாசகர் மனம்கவரும் பக்கவடிவமைப்புடன் துலக்கமான படங்களுடனும் வெளிவரட்டும். மேலும் இப் பத்திரிகை எல்லா இடங்களிலும் உள்ள அடிநிலை மக்களின் கைகளிலும் தவழுவதில்லை. எனவே இப் பத்திரிகை விநியோகம் ஒழுங்காக சீரமைக்கப்படட்டும்.

**ஸ்ரீ.ஜமிலா**
**மாதகல்**

**வாசகராகிய உங்கள் கருத்துக்களை வரவேற்கின்றோம்.**

**முகவரி :**

**ஆசிரியர்**
**“இது நம்தேசம்”**
**இல-43**
**3ம் குறுக்கு தெரு**
**யாழ்ப்பாணம்**

## இந்திய...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

முக்கியஸ்தர் ஒருவரிடம் “பிழைக்கவென இலங்கை சென்ற நீங்கள் ஏன் தனிநாடு கேட்டு குழப்பங்களை ஏற்படுத்துகின்றீர்கள்" என வினவியிருந்தார். அவருக்கு இலங்கைத் தமிழர்கள் இலங்கையின் பூர்வீக குடிகள் என்பது தெரியாது. தலைவர்களின் நிலையே இவ்வாறானது என்றால் சாதாரண மக்களின் நிலை எத்தகையது என்பது பற்றி சொல்லித் தெரியவேண்டியதில்லை.

இதை விட இந்திய தேசிய வாதம் காரணமாக அயல்நாடுகளுடன் நட்புறவாக இருத்தல் வேண்டும் என்ற கருத்தும் வடமாநிலங்களில் மேலோங்கியுள்ளது. ஜெனிவா விவகாரத்தில் இலங்கைக்கு ஆதரவாக இருக்கவேண்டும் என்ற கருத்தே இவர்கள் மத்தியில் இருந்தது.

எனவே இத்தகைய பொது அபிப்பிராயங்களும் இலங்கை தொடர்பான வெளிநாட்டுக் கொள்கையில் செல்வாக்கு செலுத்த கூடியதாகவே இருக்கும்.

தமிழ்நாட்டிலிருந்து வலுவான அழுத்தங்கள் வருவதற்கு சாத்தியங்கள் இருக்கின்றன. அங்கு அழுத்தங்கள் இரண்டு வகையாக தோற்றம் பெறலாம். ஒன்று தமிழ்நாட்டு அரசாங்கத்திடமிருந்து எழுகின்ற அழுத்தம். இரண்டாவது தமிழ்நாட்டு மக்களிடமிருந்து எழுகின்ற அழுத்தம்.

தமிழ்நாட்டு அரசாங்கத்திடமிருந்து எழுகின்ற அழுத்தத்தினைப் பொறுத்தவரை பாரதீய ஜனதா கூட்டணிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்காமல் ஜெயலலிதாவின் ஆதரவுடன் நரேந்திர மோடி ஆட்சி அமைத்திருப்பின் அழுத்தம் வலுவாக இருந்திருக்கும். ஆனால் அதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. பாரதீய ஜனதா கூட்டணிக்கு மட்டுமல்ல பாரதீய ஜனதா கட்சிக்கே அறுதிப் பெரும்பான்மை கிடைத்திருக்கின்றது. மத்திய அரசு என்பது கட்டாயம் கூட்டணி அரசாகத்தான் இருக்கும் என்பதை மோடி உடைத்திருக்கின்றார். பாரதீய ஜனதா கூட்டணி தான் ஆட்சி அமைப்பதற்கு வாய்ப்புக்கள் உண்டாயினும் கூட்டணியில் இணைந்துள்ள கட்சிகளின் பேரம் பேசும் சக்தி பலவீனமாகவே இருக்கும். அவர்களை கழட்டிவிட்டுட்டு கூட மோடியினால் ஆட்சி அமைக்க முடியும். ஏறத்தாழ இலங்கையை ஒத்த நிலையே அங்கு உள்ளது.

எனவே ஜெயலலிதாவை இணைக்க வேண்டும் என்ற கட்டாயம் மோடிக்கு இல்லை. 2/3 கிடைக்கலாம் என்பதற்காக மோடி இணைக்கக் கூடும். பிடிவாதம் மிக்க அவருடன் சகவாழ்வு கடினம் என மோடி நினைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனால் ராஜ்ய சபா என அழைக்கப்படுகின்ற மாநிலங்களவையில் பாரதீய ஜனதாக் கூட்டணிக்கு அறுதிப் பெரும்பான்மை இல்லை. அதற்கு 51 ஆசனங்களும் காங்கிரசிற்கு 62 ஆசனங்க ளும் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அங்கு ஜெயலலிதாவிற்கு 10 ஆசனங்கள் உண்டு. அவரை இணைப்பது ஆரோக்கியமானது என மோடி நினைத்தால் ஜெயலலிதாவில் பேரம் பேசும் பலம் அதிகரிக்கலாம்.

ஆனாலும் இங்கு ஏனைய கட்சிகள் மோடிக்கு உதவ முன்வரலாம். அப்படி வந்தால் ஜெயலலிதா தேவையற்றவராக இருப்பார்.

தமிழ்நாட்டு மக்களிடமிருந்து எழுகின்ற அழுத்தம் முற்றிலும் அவர்கள் நடாத்தும் போராட்டங்களுடன் தொடர்புடையது. இரண்டாவது ஜெனிவா போல ஒரு மாணவர் எழுச்சி ஏற்பட்டால் மத்திய அரசாங்கம் சற்று கீழிறங்கும். ஆனால் இரண்டாவது ஜெனிவா போல மூன்றாவது ஜெனிவாவில் போராட்டம் பெரிய அளவிற்கு எழுச்சியடையவில்லை. தேர்தல் காலமாக இருந்தமையும், பாலச்சந்திரன் விவகாரம் போல உணர்வு தரக்கூடிய விவகாரம் ஒன்று கிடைக்காமையும் காரணமாக இருக்கலாம்.

இதைவிட முக்கிய காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள். புதுடில்லி கட்டளையிட்டதனால் கூட்டமைப்பின் மும்மூர்த்திகள் என அழைக்கப்படுகின்ற சம்பந்தன், சுமந்திரன், விக்கினேஸ்வரன் ஆகிய மூவரும் தமிழ்நாட்டு சக்திகளை “வாயைப் பொத்திக் கொண்டிருங்கள் எனக் கூறியமை தமிழ்நாட்டுசக்திகளின் போராட்ட உணர்வை பாதித்துள்ளது. அதுவும் விக்கினேஸ்வரன் ஒரு படிமேலே சென்று கணவன்-மனைவி உறவிற்குள் தமிழ் நாடு தலையிடத் தேவையில்லை எனக் கூறியமை தமிழ்நாட்டு சக்திகளை நன்றாகவே பாதித்து விட்டது.

மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரை தமிழ்நாடு கேந்திர இடத்தில் இருப்பதால் தமிழ்நாட்டு எழுச்சிகளை ஒரு போதும் அசட்டை செய்ய முடியாது. தற்போது ஈழத்தமிழர் விவகாரம் தமிழ்நாட்டில் ஒரு பொதுக்கருத்தாக எழுச்சியடைந்தமையும் மத்திய அரசிற்கு பிரச்சனை தான். மறுபக்கத்தில் பேரெழுச்சி ஏற்படுவது ஜெயலலிதாவின் அரசாங்கத்திற்கும் நெருக்கடியைக் கொடுக்கும் என்பதால் அவர் அவ்வளவு தூரம் அதனை அனுமதிப்பார் என்றும் கூற முடியாது.

எல்லாவற்றிற்கும் முக்கிய நிபந்தனை தாயகத்தின் நிலையைச் சரிப்படுத்துவதே. சம்பந்தன் தலைமை தொடர்ந்தும் குழப்பமாக இருந்தால் தமிழ்நாட்டுச் சக்திகளும், டயஸ் போறாவும் பலவீனமடைவர்.

நிலம், புலம், தமிழகம் என்பன ஒருங்கிணைந்த வேலைத்திட்டத்திற்குள் வந்தால் தமிழகத்திலும் பாரிய எழுச்சியை எதிர்பார்க்கலாம்.




இன அழிப்பு தின நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ் பல்கலைக்கழகம்







த.தே.ம.முன்னணியின் மேதின நிகழ்வு - நெல்லியடி







மகிந்தவின் இந்திய பயணத்தை எதிர்த்து தமிழக உறவுகளின் போராட்டங்கள்.







காணி அபகரிப்பு, ஜெகதீஸ்வரன் விடுதலை என்பவற்றை வலியுறுத்த த.தே.ம.மு கண்டனப் போராட்டம் - கிளிநொச்சி

இவ்விதழ் இல.43, 3ஆம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வராசா கஜேந்திரன் அவர்களால் பிள்ளையார் ஓவ்செற் பிரிண்டேர்ஸ் (இல.676, பருத்துறை வீதி, நல்லூர்) இல் 01.06.2014 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.